ஸ்ரீ :

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பிங்கள வத்ஸர மங்கள மாலிகை — வெளியீடு - 6

எம்பெருமானார் அருளிச்செய்த சரணாகதி கத்யம்
ஸ்ரீரங்க கத்யம் ஸ்ரீவைகுண்ட கத்யம் ஆகிய

கத்யத்ரயம்

ஸ்ரீகாஞ்சீ, ப்ரதிவாதி பயங்கரம், மஹாமஹோபாத்யாய,
மஹா வித்வான், அண்ணங்கராசார்ய ஸ்வாமியின்
விரிவுரையோடு கூடியது


சேலம் செவ்வாய்ப்பேட்டை, ஜெமினி ஆர்ட் ப்ரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

கிடைக்குமிடம் :

1. க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம் - 3.
2. 213, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, G. T. MADRAS.

நள ஆண்டு மாசிமாதத் திருவாதிரை

விலை ரூ. 21 1977 [தபால் செலவு



ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் ஜகதாசார்ய


மஹாமஹிமோபாத்யாய பத்மவிபூஷண

ஸ்ரீமத் அண்ணங்கராசாரியஸ்வாமிகள்

" வியாக்கியான வாசஸ்பதி "

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



எம்பெருமானார் அருளிச்செய்த

கத்யத்ரயம்

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் மஹாமஹோபாத்யாய
அண்ணங்கராசார்யர் இயற்றிய

கத்யபாவப்ரகாசிகை யென்னும் உரையோடு கூடியது

[பொதுத் தனியன்கள்]

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.
லக்ஷ்மீநாதஸமாரம்பாம்........ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.

(கூரத்தாழ்வானருளிச்செய்த தனியன்)

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.

(திருக்குருகைப்பிரான்பிள்ளானருளிச்செய்த தனியன்)

வந்தே வேதாந்தகர்ப்பூர சாமீகரகரண்டகம்,
ராமாநுஜார்யமார்யாணாம் சூடாமணிமஹர்நிசம்.

(இதன் கருத்து.) வேதாந்த சாஸ்திரமாகிற பச்சைக் கருப்பூரம் ஸுரக்ஷிதமாகவும் பரிமளம் குன்றுதபடியாகவும் வைப்பதற்கான ஸுவர்ண பரணி யென்னலாம்படி வேதாந்த மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யராய், ஆரியர்களுக்கெல்லாம் சிரோரத்னமாக விளங்குமவரான எம்பெருமானுரை வணங்குகின்றேனென்பதாம். ... ... *

சாமீகரம்—ஸ்வர்ணம், கரண்டகம்—பாத்ரவிசேஷம். எம்பெருமானுர் வேதாந்தவித்யா நிதி யென்றபடி. ''ஸர்வகந்த:'' என்னப்பட்ட எம்பெருமானை வேதாந்தங்கள் வஹித்துக் கொண்டிருப்பதனுல் அவை கருப்பூரமாக ரூபிக்கப்பட்டன. ... ... *

எம்பெருமானுர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

சரணுகதிகத்யத்திற்கு கத்யபாவப்ரகாசிகை யென்னும் உரையின்

அவதாரிகை

(ச்லோகம்) ஸ்ரீமத்ரங்கே ரங்கபதேஸ் தத்தயிதாயா:
கோஷ்ட்யாம் ஸ்ரீமத்பாஷ்யக்ருதா ப்ராக் ப்ரணதேந,
பக்தாநாம் உஜ்ஜீவநஹேதோரதிபோக்யம்
ப்ரோக்தம் கத்யம் விவ்ரியதேத்ய ஸ்ப்புடபோதம்.

காஞ்சீ வாதிபயங்கரவம்சீயாண்ணங்கரார்யதாஸேந,
பகவத்பாஷ்யக்ருதீரித கத்யத்ரயஸூக்தி விவரணம் க்ரியதே.

சாஸ்த்ரங்களிலே கர்மயோகமென்றும் ஞானயோகமென்றும் பக்தியோகமென்றும் ப்ரபத்தியோகமென்றும் இப்புடைகளிலே உபாயங்கள் பலவாகச் சொல்லப்பட்டிருக்கும். ஸ்ரீபாஷ்யகாரர் குத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காக ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்தாராகையாலே ஆசார்ய பரம்பராருசி பரிக்ருஹீதமான ப்ரபத்தியை ஸ்ரீபாஷ்யத்திலே மறைத்துப்போந்து பக்தியையாயிற்று வெளியிட்டு வைத்தது. * தத் த்வமஸீத்யாதி வாக்ய ஜந்யஜ்ஞாநமே மோக்ஷஸாதனமென்றும், கர்மஜ்ஞாந ஸமுச்சயமே மோக்ஷஸாதனமென்றும் சொல்லுகிற குத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காக, கர்மாங்ககமாய், வேதநத்யாநோபாஸநாதிசப்தவாச்யமாய், பக்திரூபாபந்நமான ஜ்ஞான விசேஷமே வேதாந்தாபிமதமான மோக்ஷஸாதனமென்று அதிலே அருளிச்செய்ய வேண்டியதாயிற்று.

ஆனாலும் இவர் தம்முடைய ருசிபரிக்ருஹீதமான அர்த்தத்தையே விச்வஸித்திருக்கும் ஸாத்விகர்களுக்குத் தம்முடைய திருவுள்ளத்தை விசததமமாக வெளியிடவேண்டி, ஆசார்யருசி பரிக்ருஹீதமாய் தமக்குத் தஞ்சமாகத தாம் அறுதியிட்டிருக்குமதான அர்த்தம் ப்ரபத்தி யென்னுமிடத்தை இந்த சரணாகதி கத்ய முகத்தாலே வெளியிட்டருளுகிறார்.

ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரபத்தியை வெளியிட்டே குத்ருஷ்டிகளை நிரஸிக்கலாகாதோ வென்னில்; இதற்கு ஆச்சான்பிள்ளை அருளிச்செய்யும்படி:—ப்ராஹ்மணன் சண்டாளனுக்கு வேதத்தை உபதேசிக்க வொண்ணாதாப்போலே தூரஸ்தரானவர்களுக்குப் பரமரஹஸ்யமான இவ்வர்த்தத்தை வெளியிட வொண்ணாதென்று பார்த்து அவர்களுக்கு முகமறிந்த சாஸ்த்ர முகத்தாலேயே அவர்களை நிரஸித்து சாஸ்த்ர தாத்பர்யமான ஸ்வஸித்தாந்தத்தை இம்முகத்தாலே வெளியிட்டருளுகிறாரென்று.

பக்தியைக் காட்டில் ப்ரபத்தி மிகவும் சிறந்ததாயிருக்கும். எங்ஙனே யென்னில், பக்தி அதிக்ருதாதிகாரம். ப்ரபத்தி ஸர்வாதிகாரம். அது துஷ்கரம். இது ஸுகரம். அது விளம்பித்துப் பலன்தரும். இது கடுகப் பலன் தரும். அது ப்ரமாத ஸம்பாவனை யுள்ளது. இது அஃதில்லாதது. அது ஸாத்யம்; இது ஸித்தம். அது ஸ்வரூப விருத்தம்; இது ஸ்வரூபாநுரூபம். அது ப்ராப்ய விஸத்ருசம்; இது ப்ராப்யாநுரூபம். ஆக இப்படிப்பட்ட வைலக்ஷண்யத்தைத் திருவுள்ளம் பற்றியே வேதாந்தாசாரியரும் ந்யாஸ திலகத்தில்—

"ஆர்த்தேஷ்வாசுபலா ததந்யவிஷயே பி உச்சிந்நதேஹாந்தரா
வஹ்ந்யாதே: அநபேக்ஷணாத் நநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ,
ஸ்ரீரங்கேச்வர ! யாவதாத்மநியத—த்வத்பாரதந்த்ர்யோசிதா
த்வய்யேவ த்வதுபாயதீ: அபிஹிதஸ்வோபாயபாவா அஸ்து மே".

என்று பணித்தார். இந்த ச்லோகத்தில் ப்ரபத்திக்கு இட்ட ஒவ்வொரு விசேஷணமும் பக்தி வ்யாவர்த்தகமாயிறே உள்ளது.

இந்த ப்ரபத்தி வேதாந்தஸித்தமோ வென்னில், ஆம். உபநிஷத்திலே ஒன்றுக்கொன்று மேன்மேலும் சிறந்ததாகச் சொல்லிக்கொண்டு போருமளவில் எல்லாவற்றுக்கும் மேலாக **"தஸ்மாத் ந்யாஸ மேஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:"** என்று தபஸ்ஸுக்குள்ளே சீரியதான தபஸ்ஸு ப்ரபத்தி யென்று தலைக்கட்டிற்று.

இப்படி வேதாந்தஸித்தமானவளவேயன்றிக்கே தர்மஜ்ஞர்களில் தலைவரான ஆழ்வாராசார்யர்களினுடைய அநுஷ்டாநத்திலும் இதுவே

பரிக்ருஹீதமாயிருக்கும். ஆகவே, வேதாந்த ஸித்தமும் ஸ்வரூபப்ராபதமும் ஆசார்யருசி பரிக்ருஹீதமும் சரண்ய ஹ்ருதயாநுஸாரியுமான இதுதன்னை ஸ்வகீயர்கள் இழக்கவொண்ணாதென்று பார்த்து, தாமும் பெரிய பெருமாளுமே அறிந்ததாக அநுஸந்தித்துவிட அமைந்திருக்கவும் தம்முடைய பரமக்ருபையாலே பின்னானார்க்கும் உபஜீவ்யமாக ப்ரபந்த ரூபேண வெளியிடுகிறார்.

இந்த திவ்யக்ரந்தம் அவதரித்தபடி எங்ஙனே யென்னில்; திருவரங்கம் பெரியகோயிலிலே ஒரு பங்குனி யுத்தரத்திருநாளிலே பெருமாளும் நாச்சிமாரும் புறப்பட்டுச் சீரிய சிங்காசனத்திருந்தவளவிலே ஸ்வாமி யெம்பெருமானாரெழுந்தருளித் தெண்டன் ஸமர்ப்பித்து நின்றார்; அப்போது நம்போல்வாருடைய பாக்ய பரிபாகத்தாலே திருவுள்ளத்திலே ஸம்ஸார பீதி நடையாட, திருவடிகளிலே விழுந்து சரணம் புகுந்து அந்த ப்ரகாரத்துக்குப் பாசுர மிட்டபடி.

இந்த முதல்கத்யம் மந்த்ரரத்நமான த்வயத்துக்கு வியாக்கியானமாயிருக்குமென்று நம்முதலிகள் நிர்வஹித்துப் போருவர்கள். இதுதான் மூலந்தன்னிலும் ஸ்பஷ்டமாக வுள்ளது. இதில், பிராட்டியும் பெருமாளும் ஸ்வாமிக்கு ப்ரதிவசநம் அருளிச்செய்ததாகக் காண்கிறதே, அது வென்? அர்ச்சாஸமாதியைக் கடந்து **"அஸ்து தே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே * நித்ய கிங்கரோ பவ * ஏவம் பூதோ ஸி * அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ"** என்று சோதிவாய் திறந்து திவ்ய தம்பதிகள் அருளிச்செய்தார்களோ வென்னில் **"அஹோ: பாதம் அஹிரேவ ஜாநாதி"** என்னுமாபோலே அந்ததிவ்ய தம்பதிகளினுடைய திருவுள்ளக் குறிப்பைத் திருமுக மண்டலத்திலே நிலை கண்டறிந்து பேசினபடி யென்பர் சிலர்; திவ்ய தம்பதிகள் சோதிவாய் திறந்தே சுருக்கமாக வெளியிட்ட உத்தரங்களைப் பாசுரப்பரப்பிட்டுப் பேசினபடியென்பர் சிலர். ஸாக்ஷாத் ஸம்வாதமே நடந்ததாக வேதாந்தவாசிரியருடைய திருவுள்ளம் கத்யபாஷ்யத்திற் காண்கிறது.

ஆசார்யர்களின் க்ரந்தங்களெல்லாம் தத்வஹித புருஷார்த்தங்களை வெளியிடுவதற்கே அவதரிப்பனவாதலால் இந்த திவ்யக்ரந்தமும் அப்படியேயாகும். இதில் ஸம்போதநபதங்களெல்லாம் தத்வபரங்களென்றும் சரணவரண ப்ரதிபாதக வாக்யம் ஹிதபரமென்றும், ப்ரார்த்தநாப்ரகாசக வாக்யங்கள் புருஷார்த்த பரங்களென்றும் கண்டு கொள்வது.

இவை கத்யத்ரய மென்கிற திருநாமத்தினால் ஏகப்ரபந்தமாக வழங்கி வந்தாலும் ஒவ்வொரு கத்யமும் ப்ரத்யேகப்ரபந்தமென்பது பூருவர்களின் திருவுள்ளம். ஆனது பற்றியே உடையவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் ஒன்பதென்று குருபரம்பராஸாரத்திலே தேசிகன் கணக்கிட்டது *

முக்கியமானவோர் விஜ்ஞாபனம்

இந்த ஸந்தர்ப்பத்தில் விரிவாக விளக்கவேண்டிய விஷயங்கள் பல வுண்டு; அவற்றை சரணாகதி ஸாம்ராஜ்யமென்ற தனிக்ரந்தத்திலே விரிவாக விளக்கியுள்ளோம். அதிலே விசதமாகக் கண்டுகொள்வது. அந்த க்ரந்தம் நமது சாஸ்த்ரார்த்த சந்த்ரிகையில் பத்தாவது மலராக வெளிவந்துள்ளது. பிறகு தனிப்புத்தகமாகவும் வெளிவந்துள்ளது. அது இதன் அநுபந்தமாகும்.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

எம்பெருமானார் அருளிச்செய்த

சரணாகதி கத்யம்

(மூலம்.) **பகவந்நாராயணாபிமதாநுரூப ஸ்வரூபரூபகுண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகணாம் பத்மவநாலயாம் பகவதீம் ச்ரியம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவ திவ்யமஹிஷீம் அகில ஜகன்மாதரம் அஸ்மந்மாதரம் அசரண்ய சரண்யாம் அநந்யசரண: சரணமஹம் ப்ரபத்யே. (1)**

(**பதவுரை.**) பகவந்நாராயண—ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனான நாராயணனுக்கு, அபிமத அநுரூப—உகப்பாயும் தகுந்துமிருக்கிற, ஸ்வரூப ரூப குண விபவ—ஸ்வரூபமென்ன விக்ரஹமென்ன விக்ரஹகுணங்களென்ன விபூதிகளென்ன இவைகளையும், ஐச்வர்ய சீல ஆதி—ஐச்வர்யம் ஸௌசீல்யம் முதலிய, அநவதிக அதிசய—எல்லையில்லாத சிறப்புடைய, அஸங்க்யேய—எண்ணமுடியாத, கல்யாணகுணகணாம்—கல்யாண குணஸமூஹங்களையும் உடையவளாய், பத்மவந ஆலயாம்—கமலவனத்தை வாஸஸ்தானமாக வுடையவளாய், பகவதீம்—பரமபூஜ்யையாய், ச்ரியம்—ஸ்ரீயென்று திருநாமமுடையவளாய், தேவீம்—வடிவில் புகர் நிறைந்தவளாய், நித்ய அநபாயிநீம்—(எம்பெருமானை) ஒருநாளும் விட்டுப் பிரியாதவளாய், நிரவத்யாம்—பரிசுத்தியுடையவளாய், தேவதேவ திவ்யமஹிஷீம்—தேவாதிதேவனான எம்பெருமானுடைய திவ்ய மஹிஷியாய், அகில ஜகத் மாதரம்—ஸகல

ஜகத்துக்கும் மாதாவாய், அஸ்மத் மாதரம்—(விசேஷித்து) அடியோமுக்குத் தாயாய், அசரண்ய சரண்யாம்—புகலற்றவர்களுக்குப் புகலாயிருக்கின்ற பெரிய பிராட்டியை, அநந்யசரண: அஹம்—புகலொன்றில்லா வடியேன், சரணம் ப்ரபத்யே—சரணம் புகுகின்றேன்.

(விசேஷவுரை.) இந்த சூர்ணையால் முந்துறமுன்னம் பெரிய பிராட்டியாரைச்சரணம் புகுகிறார். மேலே தாம் பெரிய பெருமாள் திருவடி வாரத்திலே வெளியிடப்போகிற சரணாகதிநிஷ்டைக்கு உபேய ருசியும் உபாயாத்யவஸாயமும் பரிபக்வமாயிருக்க வேண்டுகையாலே அவை குறையற ஸித்திக்கவேணுமென்று பிராட்டி திருவடிகளிலே சரணம் புகுகிறபடி. உலகில் எது ஸித்திக்கவேணுமானாலும் பிராட்டியருளாலேயே ஸித்தித்தாக வேண்டுமென்கிற அத்யவஸாயமுடையார்க்கு இது ப்ராப்தமேயாகும். இராமாநுச நூற்றந்தாதியின் நிகமனப் பாசுரம் இங்கே பொருத்தமான உதாஹரணமாக அநுஸந்தேயம். அங்கு * பங்கய மாமலர்ப்பாவையைப் போற்றுதும் * என்று பெரிய பிராட்டியாரை ப்ரார்த்திப்பதாகப்பேசினது எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள் தம் முடியிலே பொருந்துவதற்காகவன்றோ. * பொங்கியகீர்த்தி யிராமாநுசனடிப்பூ—நம் தலைமிசையே - மன்னவே * என்றாரிறே.

* பகவந்நாராயணாபிமத * இத்யாதி விசேஷணத்தாலே—பிராட்டியின் ஸ்வரூபம் ரூபம் விபவம் குணம் முதலான எல்லாமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பாயும் ஏற்றவையாயுமிருக்குமென்கிறது. உலகில் சில ஸ்த்ரீகளின் ரூப குணாதிகள் புருஷர்களுக்கு அநுபவிக்க க்ரமப்ராப்தமானாலும் மனதுக்கு இனிதாகாமலிருப்பதுண்டு. சில ஸ்த்ரீகளின் ரூபகுணாதிகள் மனதுக்கு இனிதாயிருக்கலாம், ஆனால் ப்ராப்திபிராது ஆகவே அபிமதமானது அநுரூபமல்லாமலும், அநுரூபமானது அபிமதமல்லாமலுமிருக்குந் தன்மை உலகிற் காண்பதாகையாலே இந்ததிவ்ய தம்பதிகள் விஷயத்திலே அப்படியில்லையென்கிறது. அபிமதத்வமும் அநுரூபத்வமும் சேர்ந்து உலகில் க்வசித் இணங்கினாலுங்கூட ஸகலாம்சங்களிலும் இணங்குவது அருமை தேஹ குணம் நன்றாயிருந்தால் ஆத்ம குணம் நன்றாயிராது, ஆத்ம குணம் நன்றாயிருந்தால் தேஹ குணம் நன்றாயிராது என்றிப்படி வைரூப்யம் நேருவதுண்டு. அப்படியுமல்லாமல் திவ்யதம்பதிகளுக்கு ஸ்வரூப ரூப குண விபவைச்வர்யாதிகளான ஸகலாம்சங்களிலும் அபிமதத்வமும் அநுரூபத்வமும் உண்டென்கிறது.

இந்த முதல் விசேஷணத்தில் குணசப்தம் இரண்டு தடவை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. முதலிலுள்ள குணசப்தம் தேஹகுணமான ஸௌந்தர்ய லாவண்யாதிகளைச் சொல்லுகிறது. அப்பாலுள்ள குண சப்தம் வாத்ஸல்ய ஸௌலப்யாதிகளான ஆத்ம குணங்களைச் சொல்லு

கிறது. [விபவ] போகத்திற்கு உபகரணங்களாய் ச்லாக்யங்களாயிருக்கிற வஸ்து ஸமூஹங்களை விபவமென்பது. அப்படிப்பட்ட ஸகல வஸ்துக்களும் எம்பெருமானுடையதாயிருக்க, பிராட்டிக்கென்று தனியே விபவமுண்டோவென்னில்; உலகத்திலுள்ள தம்பதிகளிடத்துக் காணும் நியாயப்படி அவளுக்கென்று விபஜித்து வைத்துக்கொள்ளப்படும் மால்ய பூஷண வஸ்த்ராதிகள் பலவுண்டே; விபவாவதார அர்ச்சாவதாரங்களிலே கண்டுகொள்வது:

[ஐச்வர்ய] ஐச்வர்யமாவது நியாமகத்வம். ஸர்வ நியாமகன் எம்பெருமானுயிருக்க, இவளுக்கும் நியாமகத்வமுண்டோவென்னில், எம்பெருமானுடைய இச்சையினுலாகுமதான நியாமகதவமுண்டு. "சேஷசேஷாசநாதிஸர்வபரிஜநம் பகவதஸ் தத்ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயந்த்யா" என்று ஸ்ரீவைகுண்டகத்யத்தில் அருளிச்செய்வதுங் காண்க. "சேதநர்களைக் கர்மாநுகுணமாக நியமிப்பன், ஈச்வரனை ரக்ஷணுநுகூலமாக நியமிப்பள்" என்று ஆச்சான் பிள்ளையருளிச்செய்யும்படி.

[சீல ஆதி] தாழ்ந்தவர்களோடு புரையறக்கலந்து பரிமாறுகை சீலம், ஸௌசீல்யமென்பது மிதுவே. பெருமாளுடைய சீலம் குஹப்பெருமாள் முதலானுர் பக்கலிலே பொலிந்தாப்போலே பிராட்டியினுடைய சீலம் த்ரிஜடாதிகள் பக்கலிலே பொலிந்தமை காண்க. ஆதி சப்தத்தாலே வாத்ஸல்ய ஸௌலப்யாதிகளைக் கொள்வது.

[அநவதிகாதிசய] இது குணங்களுக்கிட்ட விசேஷணம். இதன் கருத்தைக் கேண்மின்; இங்குச்சொன்ன குணங்களிலே சில குணங்களோ எல்லாக் குணங்களுமேயோ லௌகிகர்களிடத்திலுமிருந்தாலும் அவை சிறிது சிறிது தலைகாட்டியிருக்குமேயல்லது ஒவ்வொரு குணமும் எல்லையான உத்கர்ஷத்தோடு இருக்கமாட்டா; பிராட்டிபக்கலிலோ வென்னில், அப்படியில்லை; ஒவ்வொரு குணத்தினுடைய மேன்மையும் எல்லைகாண முடியாதவையாயிருக்கு மென்கை.

[அஸங்க்யேய கல்யாணகுணகணும்] குணங்கள் தனித்தனியே எண்ண முடியாமையேயன்றியே திரள்திரளாகவும் எண்ண முடியா; உலகில் அபரிமிதமாகவுள்ள சில வஸ்துக்களைத் தனித்தனியே யெண்ணிவிடலாம்; சில வஸ்துக்களை அங்ஙனே தனித்தனி யெண்ண முடியாவிடினும் 'நூறு கலம் நெல்; ஆயிரங்கலம் எள் என்னுமாபோலே ராசிக்கணக்காக எண்ணிவிடலாம். பிராட்டியின் குணங்களோ வென்னில், பகவத் குணங்கள் போலவே ஒருவகையாகவும் எண்ண முடியாதவை என்றதாயிற்று.

[பத்மவநாலயாம்.] * பத்மே ஸ்திதாம் பத்மவர்ணாம்* என்று ச்ருதியும் ஓதிற்று. பத்மத்தைச் சொன்னது மங்களகரங்களான ஸகல வஸ்துக்களையும் சொன்னபடியாய் ஸர்வமங்கள நிவாஸிநி என்றபடி. ''யச் ச ஹி மங்களம் கிமபி யத்லோகே ஸதித்யுச்யதே தத் ஸர்வம் த்வததீநமேவ'' என்று ஆழ்வானும் ஸ்ரீஸ்தவத்திலருளிச்செய்தார். பரிமளமே வடிவெடுத்தவனென்னும்படியான எம்பெருமானுக்கும் பரிமளமூட்ட வல்லவள் என்னலாம்படி பரிமளப்ரசுரமான பத்ம வனத்திலே உறைபவள் என்க.

[பகவதீம்] ''ததா பூஜ்யபதார்த்தோக்தி பரிபாஷா ஸமந்விதः, சப்தோயம் நோபசாரேண'' என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (6-5-77) சொன்னபடியே பூஜ்ய வாசகமாகக் கடவது.

[ச்ரியம்] (1) ஸகல சேதநர்களாலும் தான் புருஷகாரதயா ஆச்ரயிக்கப்படுகிறவள். (2) ஆச்ரிதருடைய காரியங்களை நிறைவேற்றுதற்காக ஸர்வேச்வரனை ஆச்ரயித்திருக்குமவள். (3) ஆச்ரிதர்களுடைய விஜ்ஞாபனங்களைச் செவிகொடுத்துக்கேட்குமவள். (4) அவற்றை ஸமயத்திலே எம்பெருமானுக்குக் கேட்பிக்குமவள். (5) ஆச்ரிதர்களுடைய அபராதங்களை இல்லை செய்யுமவள். (6) தனது திருக்கல்யாண குணங்களாலே உலகத்தை உகப்பிக்குமவள்—என்று இப்படிப்பட்ட ஆறு அர்த்தங்களையும் தருகின்ற ஆறு வகையான வ்யுத்பத்திகளாலே [1. ஸ்ரீயதே, 2. ச்ரயதே, 3. ச்ருணோதி, 4 ச்ராவயதி, 5 ச்ருணாதி, 6. ச்ரீணாதி] நிஷ்பந்நமாகிற சப்தமிறே ஸ்ரீ சப்தம். இத்திருநாமத்தின் ஒப்புயர்வற்ற பெருமையை * ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி! ப்ரூம: கதம் த்வாம் வயம் * என்று ஆளவந்தாரும், *ஸ்ரீ ரஸியத:* என்று பட்டரும் வெளியிட்டார்கள்.

[தேவீம்] ''திவு—க்ரீடா விஜிகீஷாவ்யவஹார த்யுதிஸ்துதி மோதமதஸ்வப்ந காந்தி கதிஷு'' என்று பத்து அர்த்தங்களையுடைய (திவு) தாதுவில் (திவ்யதீதி தேவீ) என்று நிஷ்பந்நமான சப்தமாகையாலே யதார்ஹம் அந்த அர்த்தங்களைக் கொள்ளலாம். *இன்புறுமிவ் விளையாட்டுடையவள் என்னலாம். எம்பெருமானோடு சேர்த்தியாலே விளங்குபவள் என்னலாம்.

[நித்யாநபாயிநீம்] * விஷ்ணோ: ஸ்ரீ ரநபாயிநீ * என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-8-17) சொன்னதை ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணுகிறபடி. ப்ரபையையும் ப்ரபாவானையும் புஷ்பத்தையும் மணத்தையும் போலே எம்பெருமானை விட்டுப் பிரியாதவளென்றபடி. அவதாரங்களில் சிலகாலம் விட்டுப் பிரிந்தாலும் அதனால் நித்யாநபாயிநீத்வத்திற்குக் குறையில்லை யென்பர். * அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண

ப்ரபா யதா * என்று ஒருகால் பிராட்டியும் * அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா * என்று மற்றொருகால் பெருமாளும் கூறியது கொண்டு தெளிக. * ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோமபாஸ்கர:* என்றார் வேதாந்த வாசிரியரும்.

[நிரவத்யாம்] அவத்யமில்லாதவள். கீழ்ச் சொன்ன உத்கர்ஷ மெல்லாம் தன்னுடைய அதிசயமாக நினைத்திருக்கை அவத்யம்; அப்படிப்பட்ட அவத்யமில்லாதவ ளென்கை. நிலா தென்றல் புஷ்பம் சந்தனம் முதலானவற்றிற்குள்ள நலங்கள் எப்படி பிறருடைய அதிசயாதானத்திற்கே உறுப்போ அப்படி தன்னுடைய நலங்களெல்லாம் எம்பெருமானுடைய அதிசயாதாநத்துக்கே உறுப்பென்றிருக்குமவள் என்றவாறு.

[தேவதேவ திவ்யமஹிஷீம்] இதனுடைய கருத்தை ''அப்ரதிஹதசிகீர்ஷிதாம்'' என்று வெளியிட்டார் ச்ருத ப்ரகாசிகா பட்டர். தான் எது செய்ய நினைத்தாலும் இடையூறின்றிச் செய்து தலைக்கட்டுகைக்கீடான வால்லப்யமுடையவள் என்கை. கண்ணழிவற்ற புருஷகாரமென்கை. பிரமன் முதலிய தேவர்களைக்காட்டிலும் எம்பெருமான் உத்துங்கனாயிருப்பதுபோல, அந்த ப்ரஹ்மாதிகளின் பத்நிகளைக் காட்டிலும் சிறந்தவர்களான மற்றுள்ள பகவந்மஹிஷிகளிலும் இவள் மிகச்சிறந்தவளென்பதும் விவக்ஷிதம்.

[அகில ஜகன்மாதரம்] * தேவதேவதிவ்யமஹிஷீமென்றவாறே ஒரு அச்சம் உண்டாகுமே; அதைத் தவிர்க்கைக்காக இந்த விசேஷணமிடுகிறது. ப்ரஜைகள் பக்கலிலே வாத்ஸல்யமே மிக்கிருப்பவளென்றபடி. [அஸ்மந்மாதரம்] வேதாந்தவாசிரியருடைய பாடத்தில் இந்த விசேஷணம் இல்லையென்று தெரிகிறது: ''அத்ர அஸ்மத்ஸ்வாமிந் * இதிவத் அஸ்மந்மாதரமித்யபி ஸ்ரீவிஷ்ணுசித்தாதய: படந்தி, வ்யாசக்ஷதே ச'' என்று கத்யபாஷ்யத்திலுள்ளது. பால ருடைய பாடத்தில் அஸ்மந்மாதரம் என்பது உள்ளதென்று காட்டுகிறது. இவ்விடத்து ஆச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் ''அகில சப்தத்தில் தாமும் அந்தர்ப்பூதராகையாலே தம்மையுங் கூட்டிக் கொள்ளுகிறார் — என்றுள்ளது. கோயில் பத்தராவிஸ்வாமி எட்டுப் பிரதிகளைக்கொண்டு சோதித்த ஸ்ரீகோசத்தை ஸேவித்தபோது இதில் வாக்ய ஸ்காலித்யம் காணப்பட்டது; ''அகிலசப்தத்தில் தாமும் அந்தர்பூதராயிருக்கச் செய்தேயும் அகில ஜகத்தும் ஒரு தட்டும், தாம் ஒரு தட்டுமாகத் தம் பக்கலில் வாத்ஸல்யாதிசயம் கண்டாராகையாலே விசேஷித்தருளிச் செய்கிறார் * அஸ்மந்மாதர மென்று'' எனக்காண்கிறது திருத்தமான பாடம்.

[அசரண்ய சரண்யாம்] ஸர்வலோக சரண்யனாலே கைவிடப் பட்டவர்களுக்குங்கூட தான் புகலாயிருக்குமவளென்கை. ''திருவடியைப் பொறுப்பிக்குமவள் தன் சொல்வழிவருமவனைப் பொறுப்பிக்கச் சொல்ல வேண்டாவிறே'' (முமுக்ஷுப்படி) என்கிறபடியே யதாபராத தண்டதரனை எம்பெருமானை க்ஷமிப்பித்து ரக்ஷிக்குமவளென்றவாறு. ஆக இப்படிப்பட்ட பெரிய பிராட்டியாரை ;

(அநந்ய சரண : அஹம் சரணம் ப்ரபத்யே) * புகலொன்றில்லாவடியேன் அடிக்கீழமர்ந்து புகுந்தேனென்கிறது. இங்கு (ப்ரபத்யே) என்று உத்தம புருஷனா க்ரியை இருப்பதனாலேயே நான் என்கிற எழுவாய் (கர்த்தா) தோன்றித் தீரவேண்டியதாயிருக்கச் செய்தேயும் அஹம் என்று அருளிச்செய்தது விசிஷ்ய தம்மைக் காட்டிக் கொள்ளுகிறபடி; அசக்தியாலும் ஸ்வரூப விரோத நிச்சயத்தாலும் உபாயாந்தரங்களில் கைவைக்கமாட்டாதவன் அடியேன் என்று தம் இயல்வைப் படியெடுத்துக் காட்டினாராய்த்து. ஆக இந்த முதல் சூர்ணையாலே புருஷகாரப்ரபத்தி செய்தாராயிற்று. ... (1)

இனி இரண்டாவது சூர்ணையாலே, புருஷகாரபூதையான பிராட்டி பக்கலிலே ப்ரார்த்திக்குமது சொல்லப்படுகிறது.

(மூலம்.) **பாரமார்த்திக பகவச்சரணாரவிந்தயுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திக்ருத பரிபூர்ணாநவரத நித்ய விசததமாநந்யப்ரயோஜநாநவதிகாதிசயப்ரிய பகவதநுபவஜநிதாநவதிகாதிசயப்ரீதிகாரித அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதிரூப நித்யகைங்கர்ய ப்ராப்த்யபேக்ஷயா பாரமார்த்திகீ பகவச்சரணாரவிந்த சரணாகதி யதாவஸ்திதா அவிரதா அஸ்து மே.** (2)

பாரமார்த்திக—பரமபுருஷார்த்த ரூபமான (இது பக்திக்கு விசேஷணம்), பகவத்சரணாரவிந்தயுகளைகாந்திக—எம்பெருமானுடைய திருவடித்தாமரையிணையையே பற்றினதாய், ஆத்யந்திக—என்றென்றும் நிலைநிற்பதான, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி—பரபக்தியென்ன பரஜ்ஞானமென்ன பரமபக்தியென்ன ஆகிய இவற்றாலே க்ருத—செய்யப்பட்ட (இது பகவதநுபவத்தில் அந்வயிப்பது) பரிபூர்ண—நிரம்பியதாய், அநவரத-இடைவீடில்லாததாய், நித்ய—நித்யமாய், விசததம - மிகவும் விசதமாய், அநந்ய ப்ரயோஜந — ஸ்வயம் ப்ரயோஜநமாய், அநவதிகாதிசயப்ரிய — இதற்குமேல் ப்ரியமானது வேறொன்றில்லை யென்னும்படியான, பகவதநுபவ - பகவானது அநுபவத்தினால், ஜநித—உண்டு பண்ணப்பட்ட, அநவதிகாதிசயப்ரீதி — மிகச் சிறந்த உகப்பினால், காரித—செய்விக்கப்பட்ட (இது நித்யகைங்கர்யத்தில் அந்வயிப்பது), அசேஷாவஸ்த்தோசித — (எம்பெருமான்) ஆஸ்தானத்திலிருப்பது

அந்தப்புரத்திலிருப்பது முதலான ஸகல அவஸ்தைகளுக்கும் ஏற்றவை யான, அசேஷ சேஷதைகரதிருப — ஸகலவிதகைங்கர்யங்களிலும் ஆசைகொண்டிருப்பதே வடிவான, நித்ய கைங்கர்யப்ராப்தி அபேக்ஷயா — நித்யகைங்கர்யத்தைப் பெறுவதற்குறுப்பாக, பாரமார்த்திகீ — உண்மையான, பகவத் சரணாரவிந்த சரணாகதி :— எம்பெருமானது திருவடித்தாமரைகளிலேயாகின்ற சரணாகதியானது, யதாவஸ்திதா அவிரதா மே அஸ்து — அது அமையவேண்டிய ரீதியிலே அமைந்த தாய் இடையறுததாய் எனக்கு ஸித்திக்கவேணும்.

கீழே "அசரண்ய சரண்யாம் அநந்யசரண : சரணம் அஹம் ப்ரபத்யே" என்று பிராட்டியைச் சரணம் புகுந்தாரே, அது புருஷ காரப்ரபத்தியென்னுமிடம் இந்த வாக்கியத்தினால் விசதீகரிக்கப்பட்ட தாயிற்று. தாயே! எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளிலே எனக்கு உண்மையான சரணாகதிநிஷ்டை விளைவதற்காக உம்மைத் தஞ்சமாகப் பற்றுகின்றேனென்றாராயிற்று. அந்த சரணாகதியினால் தாம் பெறவிரும்பிய பலன் * ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலா வடிமை செய்கை தவிர வேறொன்றுமன்று என்றும் தெரிவித்தாராயிற்று. ஒன்றிரண்டு கைங்கரியங்களைச்செய்து த்ருப்தி பெறுகையன்றிக்கே *சென்றாற்குடையா மிருந்தால்சிங்காதனமாம் நின்றால்மரவடியாம் நீள் கடலுள்-என்றும் புணையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற்கரவு * என்கிறபடியே ஸகலப்ரகாரங்களுமான கைங்கர்யங் களையும் செய்யப்பெறவேணுமென்கிற ருசி அநுவர்த்தித்துச் செல்லு மாகில் அதுவே பெருப்பேறு என்றும் காட்டினாராயிற்று. இடையறுத ஆச்சரியமான பகவதநுபவம் விளைந்து அதனால் கைங்கர்ய ருசி உண்டாகுமென்றும் உரைத்தாராயிற்று. ... ... (2)

(மூலம்) **அஸ்து தே. (3) தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே. (4)**

இது பெரிய பிராட்டியாருடைய ப்ரதிவசனமிருக்கிறபடி. தே அஸ்து—அப்படியே உமக்கு ஆகக் கடவது. தயா ஏவ—அந்த சரணா கதியினாலேயே, ஸர்வம் ஸம்பத்ஸ்யதே—உமது அபிமதமெல்லாம் அழகாக ஸித்திக்கப்போகிறது.

கீழே, அஸ்து மே என்று அபேக்ஷித்தவர்க்கு அஸ்து தே என்கிற இவ்வளவு அநுக்ரஹமே போதுமாயிருக்க, அதற்கு மேலும் "தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே" என்று பிராட்டி அநுக்ரஹித்ததின் திருவுள் ளத்தை ச்ருதப்ரகாசிகாபட்டர் விவரித்தருளுகிறார். "ஸ்வஸம்பந்தி ஸம்பந்தி நிஸ்தரணமபி ஸர்வசப்தாபிப்ரேதம்" என்று. அதாவது எம்பெருமானரே! இப்போது நீர் செய்யும் சரணாகதியினால் ஸித்திக்கும்

பலனானது உடம்பளவிலே கூவறிப்போமதன்று; பரம்பரயா உம்முடைய குடல்துடக்கு உடையாரெல்லாரிடத்திலும் இது பலித்ததாகக் கடவது என்று அநுக்ரஹித்தபடி.

இப்படிப்பட்ட வரம் எம்பெருமானுடைய திருமுகத்தில் நின்றுமே மேலே வெளிவந்ததாக ஸம்ப்ரதாயம். அதனை வேதாந்த வாசிரியரும் ந்யாஸதிலகத்தில் * உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம் தததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத * என்கிற ச்லோகரத்நத்தினால் ஸுஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளார். இதில் ''ச்ருத்வா வரம்'' என்று கூறியிருப்பதனால் எம்பெருமான் எம்பெருமானார்க்கு ஒருவரம் தந்தருளினதாக விளங்குகின்றது. இது எத்தகைத்து என்பதை அவ்விடத்திற்கு வியாக்கியானம் செய்தவர்கள் உள்ளபடியே உரைத்துள்ளார்கள். ஆனால் பிறர் வியாக்கியானிக்க வேண்டிய ப்ரயாஸமின்றிக்கே ஆசிரியர் தாமே மூலத்திலேயே ''தததநுபந்த மதாவலிப்தே'' என்று கண்டரவேண கூறியுள்ளார். எம்பெருமானார் காலத்திற்கும் தேசிகர் காலத்திற்கும் இடையில் எவ்வளவோ வ்யவதானமுள்ளது; அப்படியிருந்தும், அவ்வெம்பெருமானாருடைய ஸாக்ஷாத் ஸம்பந்தம் எனக்கில்லையாகிலும் பரம்பராஸம்பந்தம் குறையற்றதாகையாலே அதுகொண்டும் நான் பேறுதப்பாதென்று செருக்கிக்கிடக்கிறேன்' என்றும், 'அப்படி நான் செருக்குற்றிருப்பதற்குக் காரணம், ஸ்ரீரங்கநாதா! நீ எங்களுடைய குலக்கொழுந்தான இராமானுசர்க்குத் தந்தருளின வொருவரமே காண்' என்றும் ஸ்பஷ்டமாக வெளியிட்டுள்ளார். ஆகவே அப்படிப்பட்டதொரு வரப்ரதானத்திற்குப் பூர்வமாகப் பிராட்டியும் சோதிவாய்திறந்து அங்ஙனே ஒரு வரமளித்ததாக ச்ருதப்ரகாசிகா பட்டர் வியாக்கியானம் செய்தருளினது ஸத்ஸம்ப்ரதாயஸித்தார்த்தமென்னத்தட்டில்லை. ... (4)

(மூலம்) **அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஸ்வேதர ஸமஸ்த வஸ்துவிலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைக ஸ்வரூப!** (5)

இனி இது முதலாக மேலே **ஸ்ரீமந் நாராயண! அசரண்ய சரண்ய!** என்னுமளவாக ஸ்ரீரங்கநாதனைப் பலபடியாக விளித்து ''**அநந்ய சரண: த்வத்பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே**'' என்று ஸ்வகீய சரணாகதியைக் கூறித் தலைக்கட்டுகின்றார்.

இதில் **அகிலஹேய** என்று தொடங்கி **ஜ்ஞாநாநந்தைகஸ்வரூப!** என்னுமளவும் முதல் விளி. அகில ஹேய ப்ரத்யநீக—எவ்வகையான ஹேய தோஷங்களுக்கும் எதிர்த்தட்டாய், கல்யாண ஏகதாந—நல்லவைகளுக்கு முக்யஸ்தானமாய், ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷண—

தன்னை யொழிந்த ஸகல வஸ்துக்களிற் காட்டிலும் விலக்ஷணமாய், அநந்த — ஸர்வவ்யாபியாகையாலே தேசபரிச்சேதரஹிதமாய் ஸர்வ கால வர்த்தியாகையாலே காலபரிச்சேதரஹிதமாய், ஸர்வவஸ்துக் களும் தானாயிருக்கையாலே வஸ்துபரிச்சேதரஹிதமாய், [ஆகவிப்படி மூன்றுவகையான பரிச்சேதங்களுமில்லாமையே அநந்தத்வமாவது] இப்படி அநந்தமாய், ஜ்ஞான ஆனந்த ஏகஸ்வரூப — ஸ்வயம் ப்ரகாச மாகையாலே ஜ்ஞானமே வடிவாய், ஸுகரூபமாகையாலே ஆநந்தமே வடிவாய் இருப்பவனே! என்று இவ்வளவும் திவ்யாத்மஸ்வரூபத்தைப் பேசினபடி "ஸ்வரூப ரூப குண விபூதிகள்" என்கிற கோவையிலே இவ்வளவால் ஸ்வரூபத்தை வருணித்து இனி ரூபத்தை வருணிக் கிறது. ... ... (5)

(மூலம்.) **ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிசயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகு மார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குண நிதி திவ்யரூப!** (6)

ரூபமாவது திவ்யமங்கள விக்ரஹம்: அது எங்ஙனே யிராநின்ற தென்னில்; **ஸ்வாபிமத** — திவ்யாத்மஸ்வரூபத்திற் காட்டில் அபிமதமாய், அநுரூப — ஏற்றதாய், ஏகரூப — ஷட்பாவ விகாரங்களொன்று மின்றிக்கே யிருப்பதாய், அசிந்த்ய — ப்ராக்ருத வஸ்துஸஜாதீயமாக நினைக்கக் கூடாததாய், திவ்ய — அப்ராக்ருதமாய், அத்புத — க்ஷணந் தோறும் அபூர்வமாயிருப்பதாய், **நித்ய** — ஸ்வரூபகுணங்கள் போலே அநாதி நிதநமாய், நிரவத்ய — துர்லபத்வம் முதலான அவத்யங் களின்றிக்கே யிருப்பதாய்; [அன்றிக்கே **நித்யநிரவத்ய** என்று ஒரு சொல்லாக்கி எப்போதும் நிரவத்யமாயிருப்ப தென்னவுமாம். அதாவது என்று மொக்க ஸ்வார்த்தமாயிராதொழிகை; * அடியோமுக்கே யெம் பெருமானல்லீரோ நீர் * என்கிறபடியே என்ஞான்றும் அடியார்களுக் காகவேயிருக்கை] **நிரதிசய ஔஜ்ஜ்வல்ய** — இதற்கு மேற்பட்டதில்லை யென்னும்படியான புகரையுடைத்தாய், **ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாதி அநந்தகுண நிதி** — அவயவ சோபையாகிற ஸௌந்தர்யமென்ன, திவ்ய பரிமள ப்ரசுரமாயிருக்கை யென்ன, பிராட்டிமாரும் உறைக்கப் பார்க்கவொண்ணாதபடியான ஸுகுமாரத்தன்மையென்ன, ஸமுதாய சோபையாகிற லாவண்ய மென்ன, எப்போதும் இளமை மாறாமலிருக்கையாகிற யௌவநமென்ன இவை முதலான அபரிமித குணங்களுக்குக் கொள்கலமாயிருப்பதான, **திவ்யரூப** — திவ்யமங்கள விக்ரஹத்தை யுடையவனே! இந்த வாக்கி யத்தில் இவ்விடத்திலே **திவ்ய** பத மிருக்கச் செய்தேயும் கீழேயும் **அசிந்த்ய திவ்யாத்புத** என்று திவ்யபதப்ரயோகம் பண்ணினது புநருக்திதுஷ்ட மாகாது. எத்தனை தடவை சொன்னாலும் பர்யாப்தி பிறவாதிறே

(1) ''திவ்ய சப்தத்வயம் த்ரவ்ய ஸம்ஸ்தாநவைலக்ஷண்யபரம்'' என்று ச்ருதப்ரகாசிகா பட்டரும். (2) ''திவ்யசப்தௌ த்ரவ்யத: ஸந்நிவேசாதிபிச்ச வைலக்ஷண்யபரௌ; அப்ராக்ருதஸ்தாநவர்த்தித்வ அப்ராக்ருதத்வபரௌ வா'' என்று வேதாந்தவாசிரியரும் அருளிச்செய்தார்கள். இதில் இரண்டாவது நிர்வாஹம் ஆச்சான்பிள்ளை காட்டியது.

ஆக இவ்வளவால் விக்ரஹவைலக்ஷண்யத்தைப் பேசி, இனி திவ்யாத்மகுணங்களைப் பேசுகிறார் :— ... ... (6)

(மூலம்.) ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்யசக்திதேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்யமார்தவார்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்யமாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்யஸ்தைர்ய தைர்யசௌர்யபராக்ரம ஸத்யகாமஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாதி அஸங்க்யேய கல்யாண குண கணௌக மஹார்ணவ! (7)

[ஸ்வாபாவிக அநவதிகாதிசய] என்ற இரண்டுவிசேஷணங்களும் மேற் சொல்லுகிற ஸகலகுணங்களிலும் அந்வயிப்பன. ஸ்வாபாவிகங்களாயும் உயர்வறவுயர்ந்தவையாயுமிருக்கிற ஷாட்குண்யம் முதலிய திருக்குணத்திரள்களுக்குக் கடல் போன்றவரே! என்கை. இக்குணங்கள் ஸ்வாபாவிகமாயிருக்கையாவது — நீருக்குக் குளிர்ச்சிபோலவும் நெருப்புக்குச் சூடுபோலவும் தர்மியுள்ளபோதே பிடித்து உள்ளதாயிருக்கை. ஒருநாளிலே யுண்டாகி ஒருநாளிலே கழிகை யன்றிக்கே யாவதாத்மபாவியாயிருக்கை. இதனால் நித்ய முக்தர்களின் குணங்களிற் காட்டில் வாசி சொல்லப்படுகிறது. அவர்களுடையகுணங்கள் எம்பெருமானுடைய இச்சையாலே தோன்றியவையாதலால் அநந்யாதீநத்வமாகிற ஸ்வாபாவிகத்வம் அங்கு இல்லையே. அநவதிகாதிசயத்வமாவது ஒவ்வொரு குணமும் எல்லை காணவொண்ணாதபடியிருக்கை. மேற் சொல்லுகிற குணங்களில் சில, இதரவ்யக்திகளிடத்திலுமுள்ளனவாகிலும் அங்கு ஓரளவுபட்டிருக்கும். அப்படியன்றிக்கே இவை எம்பெருமானிடத்திலே இனிமேலுயர்த்தியில்லை யென்னும்படியாக உயர்ந்திருக்கும். ஸ்ரீபாஷ்யத்தில் * ஸ்வபாவதோ நிரஸ்தநிகிலதோஷ...... புருஷோத்தமோபிதீயதே * என்கிறவிடத்திற்கு வியாக்கியானம் பண்ணுகிற ச்ருதப்ரகாசிகாசார்யர் * அநவதிகாதிசய பதத்தாலே நித்யஸித்தரை வ்யாவர்த்திக்கிறதென்று முந்துற வொரு யோஜநை பணித்து, * அநுஷக்தேந ஸ்வபாவத இதி பதேந வா * என்று தொடங்கி அநந்தரயோஜநை பணித்தது இங்கே அநுஸந்தேயம்.

இனி இங்குச் சொன்ன குணங்களை விவரிக்கிறோம். ஜ்ஞாந பலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்ஸுக்கள் ஆறும் ஷாட்குண்யமெனப்

படும். இவையே மற்றுமுள்ள குணங்களுக்கெல்லாம் ஊற்றுவாயா யிருக்கும். இவற்றுள்,

ஞானமாவது — எல்லாவற்றையும் ஒருகாலே எப்போதும் உள்ளபடியறிகையாம். பலமாவது — ஸங்கல்பமாத்ரத்தாலே ஸகல பதார்த்தங்களையும் சிரமமின்றிக்கே தரிக்கும் ஆற்றல். ஐச்வர்யமாவது— ஸமஸ்தவஸ்துக்களையும் நியமிக்கும்படியான ஸாமர்த்தியம். வீர்யமாவது — ஜகத்துக்கு உபாதாநகாரணமாகாநிற்கச்செய்தேயும் ஸ்வரூப விகாரம் சிறிதுமற்றிருக்கை. சக்தியாவது — அகடிதகடநா ஸாமர்த்தியம். தேஜஸ்ஸாவது — எதற்கும் ஸஹகாரியை அபேக்ஷியாதிருக்கை. ஆக இப்படிப்பட்ட ஷாட்குண்யத்தைச் சொல்லியான பிறகு இவற்றில்நின்றுந் தோன்றுகின்றவையான திருக்குணங்களை மேலே யருளிச்செய்கிறார் (ஸௌசீல்ய) என்று தொடங்கி.

ஸௌசீல்யமாவது — பெரியவன் தாழ்ந்தவர்களோடே புரையறக் கலக்கும் ஸ்வபாவம். இதுவே சீலகுணமென்பது.

வாத்ஸல்யமாவது — அன்றீன்ற கன்றினுடம்பின் வழுவை ஆதரிக்கும் பசுவைப்போல் அடியார்களுடைய தோஷங்களை போக்யமாகக் கொள்ளுகை.

மார்த்தவமாவது — ஆச்ரிதர்களின் விரஹத்தைப் பொறுத்திருக்கமாட்டாமை.

ஆர்ஜவமாவது — கரணத்ரயத்தாலும் செவ்வியனாயிருக்கை. ருஜுத்வமெனப்படும். இதற்கு எதிரிடையான துர்க்குணம் கௌடில்யமெனப்படும்.

ஸௌஹார்த்தமாவது — எப்போதும் நன்மையைச் சிந்தித்திருக்கை.

ஸாம்யமாவது — ஜாதி குண வ்ருத்தாதிகளில் ஏற்றத்தாழ்வு கணிசியாதே எல்லார்க்கும் ஒருங்கே ஆச்ரயிக்க உரியனாயிருக்கை.

காருண்யமாவது — துக்கித்தவர்களை நோக்கி ஐயோவென்று இரங்குகை.

மாதுர்யமாவது — கொல்ல நினைக்கும் எதிரிகளுக்கும் இனியனாயிருக்கை.

காம்பீர்யமாவது — ஆச்ரிதர்க்குச் செய்ய நினைத்திருக்குமவை ஒருவராலுமறிந்துகொள்ளவொண்ணாதபடி ஆழ்ந்த திருவுள்ளமுடைமை.

ஔதார்யமாவது — கைம்மாறு கருதாதே கொள்ளக் கொள்ளக் குறையாதே வேண்டிற்றெல்லாம் தரவல்லனாயிருக்கை.

சாதுர்யமாவது — ப்ரதிகூலரையும் அநுகூலராக்கிக்கொள்ள வல்ல சதிர்.

ஸ்தைர்யமாவது — அடியார்களை ஒருகாலும் கைவிடமாட்டாத உறுதி.

தைர்யமாவது — ப்ரதிபக்ஷம் ப்ரபலமாயிருந்தாலும் த்ருணீகரித் திருக்கை.

சௌர்யமாவது — எதிரிகளின் ப்ரபலமான திரளிலும் ஒரு துணை யின்றிக்கே துணிந்து புகும் ஆற்றல்.

பராக்ரமமாவது — அப்படி போர்க்களத்திலே புகுந்தவிடத்தில் அவலீலையாக எதிரிகளைப் பங்கப்படுத்தும் ஆற்றல்.

[ஸத்யகாம ஸத்யஸங்கல்ப] என்ற இரண்டும் இங்கு * பாவப்ரதாந நிர்தேசமாகையாலே ஸத்யகாமத்வம் ஸத்யஸங்கல்பத்வம் என்று கொள்ளக்கடவது;

ஸத்யகாமத்வமாவது — விரும்பப்படுமவையெல்லாம் குறையற ஸித்தித்திருக்கை.

ஸத்யஸங்கல்பத்வமாவது — எது செய்ய நினைத்தாலும் தடை யின்றிக்கே செய்து தலைக்கட்டும் சக்தி.

க்ருதித்வமாவது — அடியார்களுக்குக் காரியம் செய்துகொண்டே யிருக்கை.

க்ருதஜ்ஞத்வமாது — அடியார்கள் சிறிது நன்மை செய்தாலும் அதையொருகாலும் மறவாதிருக்கை. ஆக இவை முதலான, [அஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவ!] — எண்ணித்தலைக்கட்ட முடியாத கல்யாண குணராசிகளாகிற ப்ரவாஹங்களுக்குக் கடல் போன்றவனே! ... (7)

ஆக திருக்கல்யாண குணங்களைப் பேசி இனி திவ்ய பூஷணங்களைப் பேசுகிறார்: —

மூலம். ஸ்வோசித விவித விசித்ராநந்தாச்சர்ய நித்ய நிரவத்ய நிரதிசய ஸுகந்த நிரதிசய ஸுகஸ்பர்ச நிரதிசயௌஜ்ஜ்வல்ய கிரீட மகுட சூடாவதம்ஸ மகரகுண்டல க்ரைவேயக ஹாரகேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தா தாமோதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராத்யபரிமித திவ்ய பூஷண! (8)

ஆத்மஸ்வரூபத்துக்கு அலங்காரமான ஞானம் முதலிய திருக்குணங்களைக் கீழே யருளிச்செய்தார். திவ்ய மங்கள விக்ரஹத்திற்கு அலங்காரமான திவ்ய பூஷணங்களை இங்கே யருளிச்செய்கிறார். ஸ்வோசித—தனக்குத் தகுந்தவையாய், விவிதவிசித்ர—பலவகைப்பட்ட வைசித்திரியை யுடையனவாய், அநந்த—அபரிமிதங்களாய், ஆச்சர்ய—விஸ்மயநீயங்களாய், நித்ய—சாச்வதங்களாய், நிரவத்ய—ஒரு வகையான தோஷ ஸம்பந்தமுமில்லாதவையாய், (அல்லது நித்ய நிரவத்ய என்று முழுச் சொல்லாக்கி, எப்போதும் நிரவத்யங்களாய் என்னவுமாம்.) நிரதிசய ஸுகந்த—ஒப்புயர்வற்ற பரிமளத்தையுடையனவாய், நிரதிசயஸுகஸ்பர்ச—(ஒருகாலும் கழற்றவேண்டாதபடி ஒப்பற்ற ஸௌகுமார்ய முடையனவாய், நிரதிசய ஔஜ்ஜ்வல்ய—ஒப்புயர்வற்ற புகரையுடையனவா யிருக்கிற, (கிரீடேத்யாதி) கிரீடமென்றும் மகுடமென்றும் சூடாவதம்ஸ மென்றும் இவை பர்யாயம் போலே தோன்றினாலும் அவாந்தர பேதங்களையிட்டுத் தனித்தனியே வ்யவஹரிக்கிறபடி. கொண்டை, தொப்பாரம், தூராய் என்று தமிழிலே சொல்லுமாப்போலே கொள்வது. நம்மாழ்வார் திருவிருத்தத்தில் * பாரளந்த பேரரசே! எம்விசும்பரசே! எம்மை நீத்துவஞ்சித்தோரரசே! * என்கிற பாசுரத்தில் எம்பெருமானுக்கு மூன்று வகையான ஸாம்ராஜ்யமருளிச் செய்தார். ஆசார்ய ஹ்ருதயத்தில் ''மூன்று முடிக்குரிய இளவரசுக்கு'' என்றருளிச் செய்ததும் அப்பாசுரத்தைத் தழுவியேயாகும். ஸௌலப்யத்துக்காகக் கவித்த முடியொன்றும் பரத்வத்துக்காகக் கவித்த முடியொன்றும், ப்ரணயித்வத்துக்காகக் கவித்த முடியொன்றும் ஆக மூன்று முடிகளை ஆழ்வார் அநுபவித்துப் பாசுரமிட்டிருக்கையாலே * மாறனடி பணிந்துய்ந்த இராமாநுசனும் இங்கு [கிரீட—மகுட—சூடாவதம்ஸ] என்று மூன்று முடிகளை யருளிச் செய்தாரென்பது ரஸ்யமான ரஹஸ்யார்த்தம்.

(சூடாவதம்ஸ) இதை முழுச் சொல்லாகக் கொள்ளவுமாம்; அன்றியே (சூட) என்றும் (அவதம்ஸ) என்றும் இரண்டாகக் கொள்ளவுமாம். க்ரமேண சுட்டியையும் கர்ணாபரணத்தையும் சொன்னபடி. மகரகுண்டல-மகரவடிவமான தோடுகள். க்ரைவேயக-திருக்கழுத்தில் சாத்துமவை. ஹார—திருமார்பிலணியும் முத்து வடங்கள். கேயூர—தோள்வளைகள். கடக—முன்கையில் சாத்தும் வளைகள். ஸ்ரீவத்ஸ—இது கீழ்ச்சொன்ன ஆபரணங்கள் போலல்லாமல் திருமேனியில் ஒரு மயிர்ச்சுழியேயாயினும் இதுவும் ஒரு பூஷணம்போலவே தோன்றியிருக்கையாலே இங்குச்சேர்த்துச் சொல்லுகிறபடி. ஸ்ரீவத்ஸமாவது—திருமறு. கௌஸ்துப—திருமார்பிலே குலாவித் திகழும் குருமாமணிப்பூண். முக்தாதாம—ஏகாவளி, த்ரிஸரம், பஞ்சஸரம் எனப்படுகிற முக்தாஹாரங்கள். உதரபந்தந—திருவயிற்றுப் பட்டம். பீதாம்பர புருஷோத்தம

லக்ஷணமான பீதக வாடை. காஞ்சீகுண—அந்தப் பீதகவாடையின் மேலணியும் அரைநூல் பட்டிகை. நூபுர—திருவடிச் சிலம்பு. ஆதி சப்தத்தாலே யஜ்ஞோபவீதம் கணையாழிமோதிரம் முதலானவற்றைச் சொல்லுகிறது. * செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்தி கழாழிகளுங் கிண்கிணியும், அரையில் தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும், மங்கல வைர்படையுந் தோள்வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டி யும்* என்ற பெரியாழ்வார் திருமொழியும் இங்கே கூட்டி யநுஸந்திக் கத்தகும். ஆக விப்படிப்பட்ட அபரிமித திவ்ய பூஷணங்களை யுடையவனே! ... ... (8)

இனி திவ்யாயுதங்களை யருளிச் செய்கிருர்.

(மூலம்.) ஸ்வாநுரூப அசிந்த்யசக்தி சங்கசக்ரகதா (அஸி) சார்ங்காத் யஸங்க்யேய நித்ய நிரவத்ய நிரதிசய கல்யாண திவ்யாயுத! (9)

ஸ்வாநுரூப—தனக்குத் தகுந்தவையாய், அசிந்த்யசக்தி—நெஞ் சாலும் நினைக்கவொண்ணுத சக்தியையுடைய, சங்க சக்ர கதா சார்ங் காதி—சங்கு சக்கரம் கதை வில் முதலிய, அஸங்க்யேய—எண்ணமுடியாத வையாய், நித்யநிரவத்ய—நாள்செல்லச்செல்ல மழுங்குகை யன்றிக்கே என்றுமொருபடிப்பட்டனவாய், நிரதிசய [illegible] ஸோபா வஹங்களாயிருக்கிற, திவ்ய ஆயுத—திவ்யாயுதங்களை யுடையவனே! இந்த வாக்கியத்தில் கதா என்பதற்குப் பிறகு அஸி என்பதையுங் கூட்டி ஒரு பாடமுண்டு. அஃதிலாத பாடமே நம்பிள்ளை திருவுள்ளம் பற்றியதாம். ... ... (9)

இனி திவ்ய மஹிஷிகளோடுண்டான சேர்த்தியை யநுபவிக் கிருர்.

(மூலம்.) ஸ்வாபிமத நித்ய நிரவத்யாநுரூபஸ்வரூப ரூப குண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகணஸ்ரீவல்லப! (10)

பெரிய பிராட்டியாரைப் பற்றின முதல் சூர்ணையில் இட்டிருக்கிற விசேஷணமே இங்கும் இடப்பட்டிருக்கிறது. அநுபவ ரஸிகர்களின் ஆத ராதிசயம் பேசுவிக்கிற பேச்சாகையாலே இங்குப் புநருக்தி தோஷம் சங்கிக்க இடமில்லை. இங்கே ஆச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தி காண் மின்:—''ப்ரதம சூர்ணையிலும் இக்குணங்கள் உக்தமாயிருக்கத் திரியட் டுஞ் சொல்லுகிறவிது புநருக்தமன்றோ வென்னில்; இவர் தாம் பிறர்க்கு உபதேசிக்கிருரன்றியிலே அநுபவிக்கிருராய் அத்தாலே வந்த ஆத ராதிசயம் சொல்லுவிக்கச் சொல்லுகிருராகையாலே புநருக்தி தோஷ

ஏவம்பூத பூமி நீளா நாயக!

மில்லை, அதவா ; அங்கு சரண்யதைக்கு உறுப்பாகவருளிச் செய்தார் ; இங்கு வால்லப்யத்துக் குறுப்பாக வருளிச் செய்கிறார்.'' என்று.

ஸ்வாபிமதங்களாயும் நித்யநிரவத்யங்களாயும் அநுரூபங்களாயுமிருக்கிற, ஸ்வரூபகுண......கல்யாண குணகணங்களையுடையவளான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு வல்லபனானவனே! என்றபடி. பகவந்நாராயண ப்ராதேத்யாதி சூர்ணையில் விவரித்தபடி கண்டுகொள்வது ; ஸ்ரீவல்லப!—ஸ்ரீக்கு வல்லபனானவனே! என்றும், ஸ்ரீயை வல்லபையாக வுடையவனே! என்றும் இருவகையும் கொள்ளக்கடவது. முந்தின பொருளில் *திருவுக்கும் திருவாகிய செல்வன் என்றதாகும். பிந்தின பொருளில் அவள் சொன்ன சொல்லை மறுக்கமாட்டாதபடி அவளுக்கு விதேயனாயிருப்பவனென்கை. ஏவம்பூத பூமிநீளாநாயக!—கீழே ஸ்வாபிமத என்று தொடங்கி கல்யாண குணகண என்றவளவுஞ் சொன்னதை (ஏவம்பூத) என்று அதிதேசிக்கிறபடி. பெரிய பிராட்டியார்க்குச் சொல்லும் பெருமைகளெல்லாம் பூமிதேவிக்கும் நீளா தேவிக்கும் ஸமானமென்றவாறு. *குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவின் நிழல்போல்வனர்* (திருவிருத்தம்) என்ற நம்மாழ்வார் பாசுரங் காண்க. ... ... (10)

இனி கீழ்ச்சொன்ன சேர்த்திகளெல்லாம் காட்டிலெரித்த நிலாவாகாமே நித்யபோக்தாக்கள் அமைந்திருக்கும்படி சொல்லுகிறது மேல் :—

(மூலம்.) ஸ்வச்சந்தாநுவர்த்தி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி பேதாசேஷசேஷதைகரதிரூப நித்ய நிரவத்ய நிரதிசய ஜ்ஞாநக்ரியைச்வர்யாத்யநந்த கல்யாண குணகண சேஷ சேஷாசந கருடப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகல! (11)

திருவனந்தாழ்வான் ஸேநாபதியாழ்வான் பெரிய திருவடி முதலான அபரிமித பரிஜநங்களும் பரிசாரிகைகளும் திருவடிவாரத்திலே நித்யகைங்கரியம் பண்ணும்படியாகவுள்ளவனே! என்கிறார். அந்த நித்யஸூரிகள் எப்படிப்பட்டவர்களென்னில் ; ஸ்வச்சந்தாநுவர்த்தி ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திபேத—தன்னுடைய திருவுள்ளத்தை யநுஸரித்த ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை யுடையவர்களாயும், அசேஷ சேஷதைகரதிரூப—ஸகலவித கைங்கர்யங்களையும் செய்ய ஆசைப்பட்டிருப்பதையே வடிவாகவுடையவர்களாயும், நித்ய நிரவத்ய நிரதிசய ஜ்ஞாந க்ரியா ஐச்வர்யாதி அநந்த (கல்யாண) குணகண—எக்காலும் வழுவற்று ஒப்புயர்வற்றவையான ஜ்ஞானம் வியாபாரம் நியமனம் முதலான அநந்த கல்யாணகுண ஸமூஹங்களையுடையவர்களாயுமிருப்பர். நித்ய நிரவத்ய என்பதை நேராக சேஷ

சேஷாசநாதிகளுக்கே விசேஷண மாக்கி யுரைப்பது முண்டு, அப்போது சேஷ சேஷாசநாதிகளுக்கு நான்கு விசேஷணங்களிட்டதாக ஆகிறது. ஸ்வாதீந ஸ்வார்த்த கைங்கரியஞ் செய்கையாகிற அவத்யமில்லாதவர்கள் என்று கருத்து. நித்ய நிரவத்யத்வத்தை ஜ்ஞாநாதிகளுக்கு விசேஷணமாக்கினாலும் இந்தக் கருத்து தேறும். அடிமைக்குறுப்பான அஸங்குசித ஜ்ஞானமென்ன, க்ரியா—அந்த ஜ்ஞானத்துக்கேற்ற செய்கையென்ன, ஐச்வர்ய—பிறரை நியமிக்கும் அதிகாரமென்ன, இவை முதலான குணங்களை யுடையவர்களென்கை.

சேஷாசநரென்று ஸேனை முதலியார்க்குத் திருநாமம். * த்வதீய புக்தோஜ்ஜித சேஷ போஜிநா........ப்ரியேண ஸேநாபதிநா * என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி காண்க. பரிசாரிகா—அநுக்ரஹா, விமலா, காந்தி, வாருணீ, ஸுகீர்த்தி, ருத்ரா, ஸௌத்ரவதீ முதலானாரைப் பரிசாரிகைகளென்கிறது. ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவத்தில் * லீலா லதா க்ருபாணீ * முகுளித நளிநா: * என்ற ச்லோகங்களிலும் காண்க. * மதிமுகமடந்தையர் * என்றார் ஆழ்வாரும். (11)

இனி இப்படிப்பட்ட எம்பெருமானுடைய இருப்பிடத்தைச் சொல்லுகிறது :

(மூலம்.) பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்ய ஸ்வரூப ஸ்வபாவ ஸ்வாபிமத விவித விசித்ராநந்த போக்ய போகோபகரண போகஸ்தாந ஸம்ருத்த அநந்தாச்சர்யாநந்த மஹா விபவாநந்த பரிமாண நித்ய நிரவத்ய நிரதிசய வைகுண்டநாத! (12)

பரமயோகி என்று தொடங்கி வைகுண்டநாத என்னுமளவும் ஏகவாக்யமாகக்கொள்வதே ஸர்வாசார்ய ஸம்மதம். பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்ய ஸ்வரூப ஸ்வபாவ என்கிறவரையில் தனி வாக்கிய மாக்கி இதைத்தனியே ஒரு ஸம்போதநமாகக்கொண்டு உரைப்பாருமுளர் என்று தேசிகபாஷ்யத்தினால் தெரியவருகின்றது ச்ருதப்ரகாசிகாசார்யர் அங்ஙனே திருவுள்ளம்பற்றி யிருப்பதாக அவருடைய வியாக்கியானத்தினால் தெரிகின்றது. அங்ஙனே உரைத்தருளின அவரும் உடனே, "பரமயோகீத்யாதிகம் தேச விசேஷணம் வா ; ததா ஸ்ரீவைகுண்டகத்யோக்தே :" என்றருளிச் செய்திருக்கையாலே முழுவதையும் ஏகவாக்யமாகக் கொள்வதே சிறக்கும்.

பரமயோகி வாங்மநஸாபரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவமாயும், ஸ்வாபிமத விவித விசித்ராநந்த போக்ய போகோபகரண போகஸ்தாந ஸம்ருத்தமாயும், அநந்தாச்சர்யமாயும் அநந்தமஹாவிபவமாயும் அநந்தபரிமாணமாயும் நித்யமாயும் நிரவத்யமாயும் (அல்லது) நித்ய

நிரவத்யமாயும் நிரதிசயமாயுமிருக்கிற வைகுண்ட லோகத்திற்கு நாத ஞனவனே! என்று கொள்க. மேலே ஸ்ரீவைகுண்டகத்யத்தில் * திவ்ய புருஷைர் மஹாத்மபிராபூரிதே, தேஷாமபி இயத்பரிமாணம் இயதை ச்வர்யம் ஈத்ருசஸ்வபாவமிதி பரிச்சேத்துமயோக்யே* என்றருளிச் செய் வதைக்கொண்டு இங்கு முதல் விசேஷணத்தை விவரிப்பது பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்தவர்களாய் ச்வேதத்வீப வாஸிகளான பரமயோகிகளாலும் ஸ்ரீவைகுண்டத்தினுடைய ஸ்வரூபமும் ஸ்வபாவ மும் வாக்கினாலும் நெஞ்சினாலும் பரிச்சேதிக்கவொண்ணாதது. சுத்த ஸத்வமயமாயிருப்பது ஸ்வரூபம், போக்யதமமா யிருப்பது ஸ்வபாவம். இவ்விரண்டும் பரமயோகிகளுக்கும் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணா தது. நெஞ்சால் நினைப்பரிது. [ஸ்வாபிமதேத்யாதி] தனக்கு அபிமதங் களாயும் பலவகைப்பட்டவையாயும் அற்புதங்களாயும் அபரிமிதங்க ளாயுமிருக்கிற போக்ய வஸ்துக்களென்ன, போகோபகரண வஸ்துக் களென்ன போகஸ்தானங்களென்ன இவை நிரம்பப்பெற்றிருப்பது ஸ்ரீவைகுண்டம். அப்ராக்ருதங்களான சப்தாதி விஷயங்கள் போக்ய வஸ்துக்கள்; சூட்டு நன்மாலைகளும் பரிஜந பரிச்சதங்களும் முதலியன வும் போகோபகரணங்கள்; அப்ராக்ருத ரத்நமய மண்டபங்கள் க்ரீடா பர்வதங்கள் முதலானவை போகஸ்தானங்கள். இவற்றாலே ஸம்ருத்தி பெற்றிருப்பதென்றபடி.

அநந்தாச்சர்ய—நித்யமும் அபூர்வ வஸ்துபோலே அநுபவிக்கக் கூடியதாயிருக்கையாலே அளவிறந்த ஆச்சரியமாயிருக்கும்; அநந்த மஹாவிபவ—ரத்நபூஷண ஸிம்ஹாஸநாதிகளும் உத்யாந நதீ தடா காதிகளும் அளவிறந்திருக்கையாலே அநந்தமான மஹா விபவங்களை யுடைத்தாயிருக்கும்; அநந்தபரிமாண—ஆயாம விஸ்தாரங்களால் அளவிறந்திருக்கும். நித்யநிரவத்ய—அநித்யமாயும் அவத்யங்களோடே கூடியுமிருக்கின்ற ஸ்தானங்களிற் காட்டில் வாசி பெற்றிருக்கும். நிரதி சய—ஆகக் கீழ்ச்சொன்னபடி யிருக்கையாலே தனக்கு மேம்பட்ட ஸ்தானம் வேறொன்றில்லை யென்னும்படி யிருக்கும். அப்படிப்பட்ட ஸ்ரீ வைகுண்ட லோகத்திற்கு நாதனானவனே!

(மூலம்.) **ஸ்வஸங்கல்பாநுவிதாயி ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி ஸ்வசேஷதைகஸ்வபாவ ப்ரக்ருதி புருஷ காலாத்மக விவித விசித்ராநந்த போக்ய போக்த்ருவர்க்க போகோபகரண போகஸ்தாநரூப நிகில ஜகதுதய விபவ லய லீல!** (13)

ஸகல ஜகத்தினுடையவும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை லீலையாகவுடையவனே! என்கிறது. அந்த ஸகல ஜகத்தும் எப்படிப் பட்டதென்னில், ஸ்வஸங்கல்பாநுவிதாயி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி —தன்னுடைய ஸங்கல்பத்தை யநுஸரித்த ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி களை யுடைத்தாயிருக்கும்.

[இந்த விசேஷணம் ப்ரக்ருதி புருஷ காலங்களில் அந்வயிப்பது] ஸ்வசேஷதைக ஸ்வபாவ—தனக்கு சேஷப்பட்டிருக்கையையே இயல்பாகவுடையது. [இதுவும் ப்ரக்ருதி புருஷ கால விசேஷணம்.] ப்ரக்ருதியும் புருஷனும் காலமுமாகிய இவையே ஜகத்தாக இருப்பதனால் ப்ரக்ருதி புருஷ காலாத்மக என்றது. இவற்றின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் எம்பெருமானுக்கே அதீநமாய் இவை அவனுக்கே சேஷப்பட்டிருக்கையாலே முன்னே இரண்டு விசேஷணங்கள் இடப்பட்டன. இம்மூன்றனுள்ளும் புருஷனென்கிற சேதநன் போக்தாவாயும், ப்ரக்ருதியானது [ப்ரக்ருதியைச் சொன்னது ப்ராக்ருத வஸ்துக்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.] போக்ய போகோபகரண போகஸ்தானங்களாயுமிருக்கும். இந்த ஜகத்து காலகார்யமென்று காட்டுகைக்காகக் காலத்தையும் கூட்டி யருளிச்செய்தது. காலத்தை போகோபகரணத்தில் சேர்க்கலாம். ஆக ப்ரக்ருதி புருஷ காலாத்மகமான, விவித—பல வகைப்பட்டும், விசித்ர—விசித்திரங்களாயும், அநந்த—அபரிமிதங்களாயுமிருக்கிற, போக்ய போக்த்ருவர்க்க போகோபகரண போகஸ்தாநரூப—போக்யமென்ன போக்த்ருவர்க்கமென்ன போகோபகரணங்களென்ன போகயோக்யமான ஸ்தானவிசேஷங்களென்ன இவற்றை வடிவாக வுடைய, நிகில ஜகத்—ஸகல லோகங்களினுடையவும், உதய விபவ லய—ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை, லீல—விளையாட்டாக வுடையவனே!

ஸத்யகாம!—நினைக்குமதெல்லாம் நிறைவேறப்பெற்றிருக்குமவனே!

ஸத்யஸங்கல்ப—ஸங்கல்பித்தபடியெல்லாம் செய்து தலைக்கட்ட வல்லவனே!

பரப்ரஹ்மபூத—பரப்ரஹ்மமென்று பேர்பெற்றவனே!

புருஷோத்தம—உத்தமபுருஷனே!

மஹாவிபூதே—அளவுகடந்த நியாம்ய வஸ்துக்களை யாள்பவனே!

ஸ்ரீமந்—லக்ஷ்மீபதியானவனே!

நாராயண!—நாராயணனென்று பேர்பெற்றவனே!

ஸ்ரீவைகுண்டநாத—நித்யவிபூதிநாதனே!

[இந்த எட்டு ஸம்போதனங்களும், மேலே வரும் ஸம்போதநங்களும் பெரும்பாலும் கீழுள்ள ஸம்போதனங்களினால் சரிதார்த்தமானாலும், பெருவிடாய்ப்பட்டவன் நீரிலே விழுந்து நீரைப் பலமுகமாக உபயோகங்கொள்ளுமாபோலே இவருடைய அல்மாப்யு விலக்ஷண மாயிருக்கையாலே இவற்றில் புநருக்திசங்கை கொள்வதும் தத்பரிஹார வழிகளைச் சிந்திப்பதும் வேண்டா.]

அபாரகாருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்யௌதார்யைச்வர்ய ஸௌந்தர்ய மஹோததே!=அபாரமான கருணை சீலம் வாத்ஸல்யம் ஔதார்யம் ஐச்வர்யம் ஸௌந்தர்யம் ஆகிற குணங்களுக்குப் பெருங் கடலானவனே! [இவற்றின் விவரணம் கீழே செய்யப்பட்டுள்ளது.] இங்கு ஐச்வர்யத்தைச் சேர்த்திருப்பது மாத்திரம் விசேஷித்துச் குறிக் கொள்ளத்தக்கது. "ஸம்ஸாரிணாம் ஸ்வரக்ஷண விகாதகத்வேபி தாந் ஸ்வாதந்த்ர்யேண நியம்ய ரக்ஷிதும் சக்த இத்யபிப்ரேத்ய ஐச்வர்யமித் யுக்தா." என்பது ச்ருதப்ரகாசிகாசார்யருடைய வியாக்கியான ஸ்ரீஸூக்தி. தேசிகன் இதைப்போஷித்து அருளிச்செய்திருக்குப்படி காண்மின் "ஐச்வர்யஸ்ய கதநம் இஹ - அநாதிகாலம் ஸ்வரக்ஷண விபரீத வ்ருத்தாந் கேநசித் வ்யாஜேந ஸ்வயமேவ நியம்ய அபிமுகீ கரோதீதி ஜ்ஞாபயிதும்." என்றார். *இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழிருத்துமம்மானே!* என்று ஆழ்வாரருளிச்செய்ததைப் பன்னியுரைத்தபடி.

அநாலோசித விசேஷ அசேஷலோக சரண்ய!—ஜன்மவ்ருத்த ஜ்ஞானங்களில் வாசிபாராதே எப்படிப்பட்டவர்களும் வந்து பணியும் படி அவர்களுக்கெல்லாம் தஞ்சமாயிருக்குமவனே! "அநாலோசித விசேஷம் யதா ததா அசேஷாணாம் லோகாநாம் சரண்ய! என்க.

ப்ரணதார்த்திஹர!—அடிபணிந்தவர்களுடைய ஆர்த்திகளைத் தீர்க்கு மவனே!

ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே!—அடியார்களின் குற்றங்களை யெல் லாம் நற்றமாகக் கொள்ளுகையாகிற குணத்திற்குக் கடலாயிருக்கு மவனே!

அநவரத விதித நிகிலபூதஜாத யாதாத்ம்ய!—ஸகல பதார்த்தங்களி னுடையவும் உண்மையை எப்போதும் அறியுமவனே! இத்தால் ஸர்வஜ்ஞத்வம் சொல்லுகிறது. ஆகிஞ்சந்யம் அநந்யகதித்வம் முதலான என்னுடைய நிலைமைகளை நான் விண்ணப்பம் செய்ய வேண்டாதபடி நீயே யறிந்துகொள்ளவல்லவனல்லையோ? என்றபடி.

அசேஷ சராசரபூத நிகில நியமந நிரத!—ஜங்கம ஸ்தாவரங்களான ஸகல பதார்த்தங்களையும் நியமிக்கவல்லவனே! இப்படி என்னை உன் திரு வடிவாரத்திலே வந்து நிற்கப் பண்ணினதும் நீயேயன்றோ என்றபடி.

அசேஷ சிதசித்வஸ்து சேஷிபூத!—ஸகல சேதநாசேதநங்களுக்கும் சேஷியானவனே! என்பக்கலிலே கைங்கரியம் கொள்ளவேண்டியது உனது கடமையன்றோ என்றபடி!

நிகில ஜகதாதார!—ஸகல ஜகத்துக்கும் ஆதாரமாயிருப்பவனே!

அகில ஜகத் ஸ்வாமிந் !—ஸகல ஜகத்துக்கும் ஸ்வாமியானவனே !

அஸ்மத்ஸ்வாமிந் !—விசேஷித்து என்வரையில் ஸ்வாமியானவனே!

ஸத்யகாம !—அவாப்த ஸமஸ்தகாமனே !

ஸத்யஸங்கல்ப !—ஒருவரால் தடுக்கவொண்ணாமல் செவ்வனே நிறைவேறவல்ல ஸங்கல்பங்களை யுடையவனே !

ஸகலேதரவிலக்ஷண !—மற்றும் எல்லாரிற் காட்டிலும் எல்லாப்படியாலும் வாசிபெற்றவனே !

அர்த்திகல்பக !—இதற்கு மூன்று படியாகப் பொருள் கூறுவர். (1) யாசகர்களுக்குக் கல்பவ்ருக்ஷமாக இருப்பவனே ! (2) யாசகர்களைக் கல்பக விருக்ஷமாக உடையவனே ! (3) யாசகனும் கல்பவ்ருக்ஷமாயுமிருப்பவனே ! "அர்த்திந: கல்பயதீதி அர்த்திகல்பக:" என்றும் ஸமாஸம் பண்ணலாமாகையாலே, அர்த்திகளை யுண்டாக்குமவன் என்கிற நான்காவது பொருளும் பொருந்தும்.

ஆபத்ஸக !—ஆபத்காலங்களிலே துணையாயிருக்குமவனே !

ஸ்ரீமந்நாராயண !—பெரிய பிராட்டியாரை விட்டுப் பிரியாத திருமாலே !

அசரண்யசரண்ய !—புகலற்றார்க்குப் புகலானவனே !

அநந்யசரண: த்வத்பாதாரவிந்தயுகளம் சரணம் ப்ரபத்யே—புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனென்கிறது. ... ... (5)

— [அத்ர த்வயம்.]

ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே, ஸ்ரீமதே நாராயணாய நம:" என்கிற த்வய மந்த்ரத்தை இங்கே அநுஸந்திக்கக்கடவது என்றபடி. எம்பெருமானார் இவ்விடத்தில் த்வயாநுஸந்தானம் தாம் செய்ததை அஸ்மதாதிகளுக்கும் சிக்ஷிக்கிறபடி. இன்றைக்கும் இவ்விடமநுஸந்திக்கும்போது த்வயத்தை உபாம்சுவாக அநுஸந்திப்பது ஸம்ப்ரதாயம். *

(மூலம்.) 6. * பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந்,
ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச,
ஸர்வதர்மாந் ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்,
லோகவிக்ராந்தசரணௌ சரணம் தேऽவ்ரஜம் விபோ !!

இவையிரண்டும் புராண ச்லோகங்கள். இந்த ச்லோகங்களை இங்கே உபாதானம் செய்தது எதற்காக வென்னில், *முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோல் போற்றத் தகுவன வாதலால், முன்னோர் மொழிந்த மொழிகளையும் இந்த ப்ரகரணத்தில் விண்ணப்பஞ் செய்வது எம்பெருமான் திருவுள்ளத்தில் அநுக்ர ஹாதிசயத்தை விளைவிக்குமென்று திருவுள்ளம் பற்றியே. இந்த ச்லோகங்களினால் மீண்டும் சரணாகதி செய்தருளுகிறாரென்று நினைக்க வொண்ணாது, *ஸக்ருதேவ ஹி சாஸ்த்ரார்த்த:* ஆகையாலே ஆவ்ருத்திக்கு ப்ரஸக்தியில்லை.

விபோ !—எம்பெருமானே!, **பிதரம் மாதரம் தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந்**—பிதாவையும், மாதாவையும், மனைவியையும், மக்களையும், சுற்றத்தாரையும், தோழன்மாரையும், ஆசார்யர்களையும், **ரத்நாநி தநதாந்யாநி க்ஷேத்ராணி ச க்ருஹாணி ச** — ரத்நங்களையும் தனதாந்யங்களையும், கிராம பூமிகளையும், வீடுகளையும், **ஸர்வதர்மாந் ச** — ஸர்வ தர்மங்களையும், **ஸாக்ஷராந் ஸர்வகாமாந் ச** — கைவல்யமுட்பட ஸகல காம்ய புருஷார்த்தங்களையும், [ஸ்வர்க்கலோகாதிபத்யம் ப்ரஹ்மலோகாதிபத்யம் முதலியவற்றில் ஆசையையும் என்றபடி.] **ஸம்த்யஜ்ய** — வாஸனையோடே விட்டொழித்து, **தே லோகவிக்ராந்த சரணௌ சரணம் அவ்ரஜம்** — உனது உலகமளந்த பொன்னடியே அடைந்துய்ந்தேன் என்றபடி.

இங்கே **தாராந் புத்ராந் பந்தூந் ஸகீந் ரத்நாநி** இத்யாதிகளை விட்டதாகச் சொல்வதில் விப்ரதிபத்தியொன்றுமில்லை. **பிதரம் மாதரம் குரூந்** — என்று தந்தை, தாயரையும் ஆசாரியரையும் விட்டதாகச் சொல்வது பொருந்துமா? "மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்ய தேவோ பவ" என்று சாஸ்த்ரக்கட்டளை விளங்கும்போது அதனை அதிலங்கனம் செய்வது தகுதியோ? தாய்தந்தையரை விடலாமென்று ஒருவாறு உபபாதித்தாலும் ஆசார்ய த்யாகம் ஒருபடியாலும் உபபாதிக்க வொண்ணாதன்றோ, "பஞ்சாசார்யபதாச்ரித:" என்று போற்றப்பட்ட எம்பெருமானார் தாம் ஒரு ஆசார்யரையும் விட்டவரு மல்லரே. ஆகவே, உண்மையில் த்யாஜ்யங்களான தநதாந்யாதிகளோடொக்க த்யஜிக்க வொண்ணாத விஷயங்களையும் த்யஜித்ததாக அருளிச்செய்கிறவிதற்கு உபபத்தி எங்ஙனே? என்று சிலர் சங்கிக்கக் கூடும். கேண்மின், இவர்களை விட்டுவிடுவதாவது விரோதப்பட்டுத் தள்ளிவிடுவதன்று. காம்யதர்மோபயோகியாகவோ அர்த்தகாமோப யோகியாகவோ இவர்களைக் கொள்ளாததுவே இங்கு த்யாகமாவது. 'க்ருஹாணி ச' என்று வீட்டையும் விட்டுவிடுவதாக இங்குச் சொல்லப் படுகிறது. வீடாவது வாஸஸ்தானம்; ஸம்ந்யாஸிகளானாலும் ஒரு வாஸஸ்தானமின்றிக்கே ஆகாசத்தில் நிற்க முடியாதே, ஓரிருப்பிடம் அவசியம் வேண்டியதாய் அவர்ஜநீயமானபின்பு இதையும் விட்ட

தாகச் சொல்வதன் கருத்தை ஆராயவேணுமே. இவ்வுலகில் வாழு மளவும் தனதான்யங்களையும் விட்டிருக்க முடியுமோ! பரமைகாந்தி களாய் நேராகத் தாங்களே தனதாந்யங்களை வைத்துக்கொள்ளாவிடி னும் தமக்கு ப்ரதிநிதிகளாகச் சில அந்தரங்க சிஷ்யர்களாவது அவற்றை வைத்துக்கொள்ள வேணுமே; அல்லாதபோது தேஹ யாத்ரை நிர்வஹிக்கும் வகையில்லையே. ஆதலால் இங்குச் சொல்லு கிற த்யாகம் ஸர்வாத்மநா த்யாகமன்று என்று கொள்ளவேணும். "தாராந் புத்ராந் ஸகீந்" என்னும்படியான சில விஷயங்களை ஸர்வாத் மநா த்யஜிக்கக்குறையென்? என்றாலும், கீழே விவரித்த கணக்கிலே த்யஜிக்கவொண்ணாதவற்றையும் த்யஜிப்பதாகச் சொல்லுகிறதற்குக் கருத்து அறியத்தக்கதே. "கொண்ட பெண்டிர் தாம் முதலாக் கூறு முற்றார் கன்மத்தால், அண்டினவரென்றே அவரை விட்டுத்—தொண்ட ருடன் சேர்ங்கும் திருமாலைச் சேருமென்றான் ஆர்க்குமிதம் பார்க்கும் புகழ்மாறன் பண்டு" [திருவாய்மொழி நூற்றந்தாதி 81] என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடியே ஆழ்வார் *கொண்ட பெண்டிர் மக்களுற்றார்* என்கிற திருவாய்மொழியிலே கொண்ட பெண்டிரையும் மக்களையும் விட்டொழிக்குமாறு உபதேசித்தருளினது வாஸ்தவமே. அந்த ஆழ்வார் தாமே அதன் கீழ்ப் பாசுரத்தில் *ஆயிரத்துளிவையும் பத்தும் வல்லார்கள், நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே* என்றருளிச்செய்ததும் குறிக் கொள்ளத்தக்கது. ஓரிடத்தில் ஹேயமாகச் சொன்ன குடும்ப வாழ்க் கையையே மற்றோரிடத்தில் [பலச்ருதி கூறும் முகத்தால்] உபாதேய மாக அருளிச் செய்தாரென்றால், த்யாஜ்யமாகைக்கு நிபந்தனம் வேறு. உபாதேயமாகைக்கு நிபந்தனம் வேறு என்று தெரிந்துகொள்ள ப்ராப்தமாகுமன்றோ. "குரோரபி அவலிப்தஸ்ய கார்யாகார்யம் அஜாநத:, உத்பதம் ப்ரதிபந்நஸ்ய ஸத்யஸ் த்யாகோ விதீயதே." என்பது முதலான சாஸ்திரங்களையும் துணைகொண்டு அர்த்த நிஷ்கர் ஷம் பண்ணவேணும். *தன் குருவின் தாளிணைகள் தன்னிலன் பொன்றில்லாதார், அன்பு தன்பால் செய்தாலும்மம்புயையகோன்—இன்பமிகு விண்ணாடு தானளிக்கவேண்டியிரான், ஆதலால் நண்ணா ரவர்கள் திருநாடு* என்றும், *ஞானமனுட்டானமிவை நன்றாகவே யுடையனான குருவையடைந்தக்கால்—மாநிலத்தீர் தேனார் கமலத் திருமாமகள் கொழுநன் தானே வைகுந்தந் தரும்" என்றும் அருளிச் செய்தபடியே ஆசார்ய ஸம்பந்தமே முக்திக்கு முதல் தனி வித்தா யிருக்க அப்படிப்பட்ட ஆசார்ய ஸம்பந்தத்தையும் குலைத்துக்கொள்வ தாக இங்கு அருளிச் செய்கிறாரென்று அர்த்தம் கொள்ள அவகாச லேசமுமில்லை. மாதாபிதாக்களையும் ஆசார்யர்களையும் புத்ரமித்ராதி களையும் பகவத் விபூதிகளாகக் கருதுகின்றேனென்பதுவே இங்குப் பரமதாத்பர்யம். இவர்கள்தாமே பகவத்பாகவதாநுபவ விரோதி

களாகில் இவர்களை ஸர்வாத்மநா த்யஜிக்கவும் ப்ராப்தமே. இன்னமும் விரிவு பெரியார்பக்கல் கேட்டுணர்வது. ... ... (6)

(மூலம்.) 7. **த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ பந்துச் ச குருஸ் த்வமேவ, த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தேவதேவ!**

ஹே தேவதேவ! — வாராய் தேவாதிதேவனே!; **மாதா ச த்வமேவ பிதா ச த்வமேவ** — தாயும்நீயே தகப்பனும்நீயே; **பந்துச் ச த்வமேவ, குருச் ச த்வமேவ** — உற்றுரும்நீயே ஆசாரியனும் நீயே; **வித்யா த்வமேவ, த்ரவிணம் த்வமேவ** — ஞானமும் நீயே, பொருளும் நீயே. **மம ஸர்வம் த்வமேவ** — (பல சொல்லியென்?) எனக்கு எல்லாமும் நீயே. *பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ, மற்றையாராவாரும் நீ பேசில்* *சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே யினி யாவாரே* என்ற அருளிச்செயல்களை இங்கே அநுஸந்திப்பது. கீழே ***பிதரம் மாதரம் தாராந்*** என்ற ச்லோகத்தில் விட்டவையாகச் சொல்லப்பட்டவையெல்லாம் எம்பெருமானேயென்று இந்த ச்லோகத்தினால் சொல்லிற்றாயிற்று. எம்பெருமான் ப்ரியப்ரவர்த்தகனாகையாலே தாயாகவும், ஹிதப்ரவர்த்தகனாகையாலே தகப்பனாகவும், மற்றும் ஸகலவித பந்துக்களும் செய்யக்கூடிய உபகாரங்களையெல்லாம் செய்வதனால் பந்துவாகவும் *கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளுமெல்லாம் நீர்மையினா லருள்செய்ததனாலே ஆசார்யனாகவும் இப்படி யெல்லாமுமாகச் சொல்லக் குறையில்லை. திருமங்கையாழ்வார் "பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின் மீதோடிப் பெருகுகாலம் தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன் வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்" என்று அருளிச்செய்ததைக்கொண்டு இவ்விடத்து வியாக்யானத்தில் ஆச்சான்பிள்ளை காட்டியருளின சுவைப்பொருளை தேசிகன் "**மாதா** — ப்ரலயதசாயாம் உதரே ஸ்தாபயித்வா ப்ரஸவநாத்" என்ற ஸ்ரீஸூக்தியால் தழுவியிருப்பது ரஸிக்கத்தக்கது. **த்வமேவ வித்யா** — "நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகளுக்கெல்லாம் ஆவியுமாக்கையுந்தானே" என்ற திருவாய்மொழி காண்க. "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றிருக்கும் அகிஞ்சநர்கள் உபாஸநரூப வித்யாஸ்தானத்திலே எம்பெருமானையே நிறுத்துவர்களிறே. **த்ரவிணம் த்வமேவ** — உபாயோபேயங்களிரண்டும் நீயேயென்று காட்டினபடி. உலகில் த்ரவ்யத்தைக் கார்யாந்தரங்களுக்கு ஸாதனமாகக் கொள்வதும் ஸ்வயம் போக்யமாகக் கொள்வதும் ப்ரத்யக்ஷமே. அது எம்பெருமான் திறத்திலுமொக்கும். ... ... (7)

(மூலம்.) 8. பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யச் ச குருர் கரீயாந்,
ந த்வத்ஸமோ ஸ்த்யப்யதிக: குதோ ந்யோ லோகத்ரயேப்யப்ரதிமப்ரபாவ.

அஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய த்வம் பிதா அஸி — [கீழே உபாத்தமான ச்லோகத்தில் எம்பெருமானைத் தம்மொருவர்க்கே மாதா பிதாவாகச் சொல்லி நின்றது; அந்த உறவு ஸர்வலோகஸாதாரண மாகையாலே அதைத் தெரிவிக்கும் ச்லோகத்தை இப்போது அநுஸந்திக்கிறுர். பகவத்கீதையில் பதினோராமத்யாயத்தில் நாற்பத்து மூன்றுவது ச்லோகமிது. இதற்கடுத்த ச்லோகமும் இங்குச் சேர்த்தே அநுஸந்திக்கப்படுகிறது.] அப்ரதிமப்ரபாவ! — ஒப்பில்லாப் பெருமைபெற்ற மாயோனே! த்வம் அஸ்ய சராசரஸ்ய லோகஸ்ய பிதா அஸி — ஸ்தாவரஜங்கமாத்மகமான இவ்வுலகுக்கெல்லாம் தந்தையாயிரா நின்றுய்; அஸ்ய லோகஸ்ய பூஜ்ய: குருச்ச அஸி — இவ்வுலகுக்குப் பூஜிக்கதகுந்த ஆசார்யனுகவுமிரா நின்றுய், ஆகையினுலே, இவ்வுலகுக்கெல்லாம் பூஜ்யதமனுயிரா நின்றுய். லோகத்ரயேபி த்வத்ஸம: அந்ய: நாஸ்தி — காருண்யம் முதலிய குணங்களினுல் உன்னையொத்தவன் மூவுலகிலும் வேறொருவனுமில்லை; அப்யதிக: குத:? — ஸமானன் இல்லையென்னும்போது மேற்பட்டவனில்லை யென்னுமிடம் சொல்லவேணுமோ? * ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயனுயிரா நின்று யென்றபடி.

இங்கு த்வத்ஸம: நாஸ்தி என்னுதே த்வத்ஸம: அந்ய: நாஸ்தி என்கையாலே உனக்கு ஒப்பானவன் நீயே என்றதாகும். * உபமாநோபமேயத்வம் யதேகஸ்யைவ வஸ்துந: — அநந்வய: * என்பர் ஆலங்காரிகர். ''ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:, ராமராவணயோர் யுத்தம் ராமராவணயோரிவ.: இத்யாதிகளுங் காண்க. ''தன்னொப்பான் தானுயுளன் காண்'' என்ருர் திருமழிசைப்பிரானும். ... ... (8)

(மூலம்.) 9. * தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம் ப்ரஸாதயே த்வாமஹமீசமீட்யம்,
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு: ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ! ஸோடும்.*

தஸ்மாத் — கீழ்ச்லோகத்திற் சொல்லிப்படி நீ ஸர்வஸ்மாத் பரனுயிருக்கையாலே, அஹம் — குற்றங்குறைகளே வடிவெடுத்திருக்கிற நான், ஈசம் ஈட்யம் த்வாம் — ஸர்வ நியந்தாவாயும் ஸ்தோத்ரார்ஹனுயுமிருக்கிறவுன்னை, காயம் ப்ரணிதாய ப்ரணம்ய — (வேரற்ற மரம்போலே) உடலைக் கீழேயிட்டுத் தொழுது, ப்ரஸாதயே — க்ஷமை வேண்டுகின்றேன்; தேவ — பெருமானே!, புத்ரஸ்ய (தோஷம்) பிதேவ மகனுடைய குற்றத்தைத் தகப்பன் பொறுப்பது போலவும், ஸக்யு: (தோஷம்) ஸகேவ — மித்திரனுடைய அபராதத்தை மித்திரன் பொறுப்பது போலவும், ப்ரியாய (மஹ்யம்) — அன்பனுன என்பொருட்டு, ப்ரிய: (த்வம்) ஸோடும்

அர்ஹஸி - அன்பனுன நீ (எனது அபராதங்களைப்) பொறுக்கவல்லை; * ப்ரிய: ப்ரியயார்ஹஸி * என்றவிடத்தில் 'ப்ரிய: ப்ரியாயா: அர்ஹஸி' என்றும் பதம் பிரிக்கலாம். அப்போது ஆர்ஷஸந்தியாகக்கொள்ளவேணும். காதலியினுடைய குற்றத்தைக் காதலன் பொறுக்குமா போலவும் என்றபடி. ... ... (9)

(மூலம்.) 10. **மநோவாக் காயை ரநாதி கால ப்ரவ்ருத்தாநந்தாக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவிதாநந்தாபசாராந் ஆரப்தகார்யாந் அநாரப்தகார்யாந் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாந் ச ஸர்வாந் அசேஷத: க்ஷமஸ்வ.**

மநோவாக்காயை: — மனம் மொழி மெய் என்கிற மூன்று உறுப்புகளினுலும், **அநாதிகாலப்ரவ்ருத்த**—அடிதெரியாத நெடுநாள் முன்னுக விளைந்த, **அநந்த** — அளவிறந்த, **அக்ருத்யகரண** - செய்யத்தகாத காரியங்களைச் செய்வதும், **க்ருத்யாகரண** — செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யா தொழிவதும், **பகவதபசார** - எம்பெருமான் திறத்தில் அபசாரப்படுகையும், **பாகவதாபசார** — அவனடியார்கள் திறத்தில் அபசாரப்படுகையும், **அஸஹ்யாபசாரரூப** — பொறுக்கவொண்ணுதபடி அபசாரப்படுகையுமாக இங்ஙனேயுள்ள, **நாநாவிதாநந்தாபசாராந்** — பலவகைப்பட்ட அபரிமிதங்களான குற்றங்களை, (இதற்கு **'அசேஷத: க்ஷமஸ்வ'** என்றதிலே அந்வயம்) **அசேஷத:**—அணுவளவும் மிச்சமில்லாதபடி, **க்ஷமஸ்வ** — பொறுத்தருளவேணும். இவ்வபசாரங்கள் எப்படிப்பட்டவையென்னில், **ஆரப்தகார்யாந்** — பலன் கொடுக்க ஆரம்பித்தவையாயிருக்கும் சில அபசாரங்கள். **அநாரப்தகார்யாந்** — இன்னமும் பலன் கொடுக்க ஆரம்பியாமலிருக்கும் சில பாபங்கள். **க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாந் ச** — இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலு மெதிர்காலத்திலுமாக த்ரிகால வ்யாபிகளாயிருக்கு மிவ்வபசாரங்கள். இவ்வபசாரங்களனைத்தையும் பொறுத்தருள வேணுமென்றுராயிற்று.

ஸர்வாந்—உலகில் அவரவர்கள் செய்யும் அபசாரங்களானவை மாநஸிகங்களாயும் வாசிகங்களாயும் காயிகங்களாயும் இருப்பது ப்ரஸித்தமாயிருக்க, * **மநோவாக்காயை: ப்ரவ்ருத்த** * என்று சொல்ல வேணுமோவென்னில்; எம்பெருமானைச் சிந்திப்பதற்காக அமைந்த மநஸ்ஸையும், அவனைத் துதிப்பதற்காக அமைந்த வாக்கையும், அவனுக்குப் பணிவிடைகள் பலவுஞ் செய்வதற்காக அமைந்த உடலையுங்கொண்டு அந்தோ! வ்யபிசரிக்கலாயிற்றே! என்கிற நிர்வேதம் இச்சொல்தொடையிலே தோன்றும்.

இக்குற்றங்கள் எத்தனை நாளாகச் செய்யப்பட்டவையென்ன, **அநாதிகால ப்ரவ்ருத்த** என்கிறார். ஸம்ஸாரமோ அநாதி; * **பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந!** * என்று கீதையிலருளிச் செய்தபடியே கிழ்க்கழிந்த ஜன்மங்களுக்கோ தொகையில்லை. இப்படி அடி தெரியாத காலந்தொடங்கி ப்ரவ்ருத்தமானவை. ஆனதுபற்றியே அனந்தங்களுமானவை. அவற்றை வகையிட்டுச் சொல்லுகிறார். **(அக்ருத்யகரண)** என்று தொடங்கி,

அக்ருத்யகரணமாவது—செய்யத்தகாதவையாக சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டுள்ள தீய கருமங்களைச் செய்வது: * **நஹிம்ஸ்யாத் ஸர்வ பூதாநி** * என்கிற விதியை அதிக்ரமித்துப் பண்ணுகிற ப்ராணிபீடை, ப்ராப்த விஷயங்களைத் துதிப்பதற்குரிய வாக்கைக்கொண்டு அப்ராப்த விஷயங்களைத் துதிக்கை, பிறர் பொருள் தாரமென்றிவற்றை அபஹரிக்கை, அஸத்யஞ் சொல்லுகை, பக்ஷிக்கத்தகாதவற்றை யதேச்சமாக பக்ஷிக்கை — ஆக இங்ஙனே பலவகைப்பட்டிருக்கும் அக்ருத்யகரணம்

க்ருத்யாகரணமாவது — சாஸ்த்ரவிஹிதங்களான வர்ணாச்ரம தருமங்களைச் சோர்வு சோர்பல்களாலும் நாஸ்திக்யத்தாலும் அநுஷ்டியாதொழிகை. பகவதபசாரமாவது — தேவதாந்தரங்களோடொக்க எம்பெருமானை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்யஸஜாதீயதா புத்தி பண்ணுகையும், அர்ச்சாவதாரத்தில் உபாதாந நிரூபணம் பண்ணுகையும் முதலானவை. பாகவதாபசாரமாவது—அஹங்காரத்தாலும் அர்த்தகாமங்களடியாகவும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம். அஸஹ்யாபசாரமாவது — கீழ்ச் சொன்னபடியே அர்த்தகாமாதிநிபந்தநமாகவல்லாமல் ஹிரண்ய கசிபுவைப்போலே பகவத்விஷயமும் பாகவதஷயமுமென்றால் காணவும் கேட்கவும் பொறுதபடியிருக்கை. ஆசார்யாபசாரமும் அஸஹ்யாபசாரமெனப்படும்; அதாவது— ஆசார்யனருளிச்செய்த அர்த்தத்தின் படியே அநுஷ்டியாமையும், அவருபதேசித்த மந்த்ரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் அல்பப்ரயோஜநங்களுக்காக அநதிகாரிகளுக்கு உபதேசிக்கையும் இவை முதலானவை. ஆசார்யபக்தரான ஸப்ரஹ்மசாரிகளுடன் ஐகரஸ்யமுண்டாய் வர்த்திக்க வேண்டியிருக்க அது செய்யாதே அவர்கள் திறத்தில் பண்ணும் அஸூயையும் அவஜ்ஞையும் முதலானவையும் அஸஹ்யாபசாரமெனப்படும். “பாகவதபக்த விஷயாபசார:—அஸஹ்யாபசார; ஆசார்ய விஷயாபராதோ வா” என்பர் ச்ருதப்ரகாசிகாசார்யர். அவ்வாசிரியர், கீழே பகவதபசாரத்தையும் பாகவதாபசாரத்தையும் விவரிக்கும்போது அருளிச்செய்திருப்பது ஸ்வத்தரம்: ‘ பாகவதாபசாரோ பகவதபசார:; பகவதபசாரோர

பாகவதாபசார:'' என்பது அவருடைய ஸ்ரீஸூக்தி. பாகவதர்களிடத்திலே அபசாரப்பட்டால் அது பகவதபசாரமாய் முடியும். பகவானிடத்திலே அபசாரப்பட்டால் அது பாகவதாபசாரமாய் முடியும் என்றபடி. ''பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா:'' என்ற பகவதுக்தியையும் ''யதபராதஸஹஸ்ரமஜஸ்ரஜம் த்வயி சரண்ய ஹிரண்ய உபாவஹத், வரத! தேந சிரம் த்வம் அவிக்ரிய: விக்ருதிம் அர்ப்பகநிர்ப்பஜநாத் அகா:'' என்ற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியையும் இங்கே நினைப்பது.

எம்பெருமானையே நோக்கிச் சொல்லுகிற இந்தச் சூர்ணையில் **த்வதபசார** என்று முன்னிலையாக அருளிச்செய்ய வேண்டியிருக்க **பகவதபசார** என்று படர்க்கையாக வருளிச்செய்திருப்பது பொருந்துமோ வென்று சங்கிக்கக்கூடியதுண்டு. ஆனாலும் குறையில்லை; பகவதபசாரமென்றே ப்ரஸித்தி ப்ராசுர்யமிருப்பதனால் அருளிச்செய்தபடி. இந்த வாக்யத்தில் **அநந்த** பதம் இரண்டு தடவை ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது; முதலிலுள்ள அநந்தபதம்—அக்ருத்யகரண க்ருத்யாகரணரூப ஸாமாந்யாபராதங்களில் அந்வயிக்கும். இரண்டாவது அநந்தபதம் பகவதபசாராதிகளில் அந்வயிக்கும்.

[* **ஆரப்தகார்யாந் அநாரப்தகார்யாந்**] ப்ராரப்த கருமங்களென்றும் ஸஞ்சித கருமங்களென்றும் கருமங்கள் இரண்டு வகையாகவுள்ளன; நாம் செய்கிற கருமங்களெல்லாம் அப்போதே உடனே பலன் கொடுக்கத் தொடங்கிவிடமாட்டா; பரிபாகக்ரமத்தில்தான் பலன் கொடுக்கும். அப்படி பலன் கொடுக்கத் தொடங்கின கருமங்கள் ப்ராரப்தங்களெனப்படும். அவற்றையே இங்கு **ஆரப்தகார்யாந்** என்றது. அப்படிப்பட்ட ப்ராரப்த கருமங்களினால் நிருத்தாவஸரங்களாய் அநுபக்ராந்த பலங்களாயிருக்கும் கருமங்கள் ஸஞ்சிதங்களெனப்படும். அவற்றையே இங்கு **அநாரப்த கார்யாந்** என்றது. ... ... (10)

(மூலம்.) 11. **அநாதிகாலப்ரவ்ருத்தம் விபரீதஜ்ஞாநம் ஆத்மவிஷயம் க்ருத்ஸ்ந ஜகத்விஷயஞ்ச விபரீதவ்ருத்தஞ்ச அசேஷவிஷயம் அத்யாபி வர்த்தமாநம் வர்த்திஷ்யமாணம் ச ஸர்வம் க்ஷமஸ்வ.**

இனி, மோக்ஷவிரோதியான புண்யபாபரூபமான விலக்கடியை க்ஷமித்தருள வேணுமென்று வேண்டுகிறார். **அநாதிகால ப்ரவ்ருத்தம்**—அடி தெரியாத காலம் முதற்கொண்டு விளைந்ததாய், **ஆத்ம விஷயம் க்ருத்ஸ்ந ஜகத் விஷயஞ் ச விபரீதஜ்ஞாநம்**—ஆத்மாவைப்பற்றினதாயும் ஸமஸ்தஜகத்தையும் பற்றினதாயுமிருக்கிற விபரீதஜ்ஞானத்தை (க்ஷமித்தருள வேணும்); **அசேஷ விஷயம்**—எல்லாவற்றையும் பற்றினதாய், **அத்யாபி வர்த்தமாநம்**—இன்னமும் தொடர்ந்துவாராநின்றதாய், **வர்த்திஷ்யமாணஞ்**

ச—இனிமேல் வாஸநாபலத்தாலே விளையப்போகிறதாயுள்ள; **ஸர்வஞ் ச விபரீதவ்ருத்தம்** க்ஷமஸ்வ—எல்லாவிதமான நிஷித்தாநுஷ்டானங்களையும் பொறுத்தருளவேணும். ஆத்மவிஷயமான விபரீதஜ்ஞானமாவது தேஹாத்மாபிமானம், ஸ்வதந்த்ராத்மப்ரமம், அந்யசேஷத்வப்ரமம் முதலியன; க்ருத்ஸ்நஜகத் விஷயமான விபரீதஜ்ஞானமாவது—* **ஸர்வ பூதாத்மகே தாத! ஜகந்நாதே ஜகந்மயே, பரமாத்மநி கோவிந்தே மித்ராமித்ரகதா** குத:? * என்கிற ப்ரஹ்லாதன் படியிலன்றிக்கே தேவதிர்யங்மநுஷ்யாதி பதார்த்தங்களை அவையவையாக மாத்திரம் காண்கை. **ஆத்மவிஷயம், க்ருத்ஸ்நஜகத் விஷயம்** என்கிற விசேஷணங்கள் '**விபரீத வ்ருத்தம்**' என்கிற விசேஷ்யத்திலும் அந்வயிக்கும். ஆத்ம விஷயமான விபரீதவ்ருத்தமாவது—ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் முதலானது. ஜகத் விஷயமான விபரீதவ்ருத்தமாவது—தனக்கு ஒருவன் ஒரு தீங்கு செய்தால் அதை ஸ்வகர்மபலமென்றோ க்ருபாபலமென்றோ நினையாதே, நிமித்தமாத்ரமான சேதநனை ஸ்வதந்த்ரனாகவெண்ணி அவன் நமக்குத் தீங்கிழைத்தானென்று கொண்டு அவன் திறத்தில் ஒன்றுக்குப் பத்தாகத் தீங்குகள் செய்கை. **விசேஷ விஷயம்**—ஐச்வர்யம் முதலிய புருஷார்த்தங்களை விரும்புகை முதலான காம்யங்களை விவக்ஷிக்கிறது. முன்பு செய்தவற்றையும் இப்போது செய்கிறவற்றையும் இனி செய்யப்புகுகிறவற்றையுமெல்லாம் அறிவிலியான அடியேன் அறிகின்றிலேனாகிலும் ஸர்வஜ்ஞரான தேவரீரே அறிந்து பொறுத்தருள வேணுமென்றதாயிற்று. ... ... (11)

(மூலம்) 12. **மதீயாநாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத்ஸ்வரூப திரோதாநகரீம் விபரீதஜ்ஞாந ஜநநீம் ஸ்வவிஷயாயாச் ச போக்ய புத்தேர் ஜநநீம் தேஹேந்த்ரியத்வேந ஸூக்ஷ்மரூபேண சாவஸ்த்தாம் தைவீம் குணமயீம் மாயாம்; தாஸ பூதம் "சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ:" இதி வக்தாரம் மாம் தாரய.**

இந்த சூர்ணையில் **தாஸபூதம்** என்று த்விதீயாந்தமாகச் சொல்ல வேண்டியதை **தாஸபூத:** என்று ப்ரதமாந்தமாகச் சிலர் பாடஞ் செய்து வருவது மருள். **தாஸபூதம்** என்று த்விதீயாந்தமான பாடமே கொள்ளத்தக்கது. பூருவர்களுக்கெல்லாம் அபிமதமான பாடமும் இதுவே. தாஸபூதனும், "சரணாகதோஸ்மி, தவாஸ்மிதாஸ:" என்று சொல்பவனுமான அடியேனை என்று பொருள் காண்க.

கீழ்ச்சொன்ன அஜ்ஞானத்துக்கடியான தேஹஸம்பந்தத்தைக் கழித்துத்தரவேணுமென்று ப்ரார்த்திக்கிறார் இந்த சூர்ணையினால். எம்பெருமான் கீதையிலே * தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா, மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே *

7-14 என்று சொல்லி வைத்தானிறே. அதைத் திருவுள்ளத்திற் கொண்டே இங்கு **மாம் தாரய** என்கிறார். மாயையாவது ப்ரக்ருதி; அதை அடியேன் கடந்தேனும்படி செய்தருளவேணுமென்கிறார்.

மதீய அநாதிகர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம்—நெடுநாளாக நான் பண்ணிப்போந்த கர்மபரம்பரையாலே யுண்டானதாய்,

பகவத் ஸ்வரூப திரோதாநகரீம்—எம்பெருமானாகிய உன்னுடைய உண்மையைத்தெரிந்துகொள்ள வொட்டாது மறைப்பதுமாய்,

விபரீதஜ்ஞாந ஜநநீம்—தேஹாத்மப்ரமம் முதலிய விபரீத வுணர்ச்சியை விளைப்பதுமாய்,

ஸ்வ விஷயாயா: போக்ய புத்தேச் ச ஜநநீம்—ஸ்வகார்யபூதமான சப்தாதிகளிலே போக்யதாபுத்தியைப் பிறப்பிப்பதுமாய்,

தேஹேந்த்ரியத்வேந போக்யத்வேந ஸூக்ஷ்மரூபேண ச அவஸ்திதாம்—போகாயதநமான தேஹரூபத்தாலும் போகோபகரணமான இந்த்ரிய ரூபத்தாலும் போக்யமான சப்தாதிரூபத்தாலும் இத்தனைக்கும் முதற் கிழங்கான ஸூக்ஷ்ம ப்ரக்ருதிரூபத்தாலும் [ஆக நான்கு வகைப்பட்ட பரிணாமத்தை யுடைத்தாய்] இராநின்ற,

தைவீம்—* இன்புறுமிவ்விளையாட்டுடையானுகையாலே தேவனென்று பேர்பெற்ற வுன்னாலே க்ரீடாபரிகரமாகச் செய்யப்பட்டதாய்,

குணமயீம்—ஸத்வ ரஜஸ் தமோ குணமூர்த்தியாய்,

மாயாம்—விசித்ரகார்யகரமாகையினாலே மாயையென்று பேர் பெற்றதான ப்ரக்ருதியை,

(இதற்கு **மாம் தாரய** என்றதோடே அந்வயம்).

மாம் என்கிற விசேஷ்யவ்யக்திக்கு இரண்டு விசேஷணமிடுகிறார்—(தாஸபூதம்) என்றும், (சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ இதி வக்தாரம்) என்றும், **தாஸபூதம்**—அடியேனாகவும், **சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ இதி வக்தாரம்**—த்வயத்தில் பூர்வகண்டத்திற்படியே சரணாகதனானேன், உத்தரகண்டத்திற்படியே கைங்கர்யநிரதனானேன் என்று வாய்விட்டுச் சொல்பவனாயுமிருக்கிற, **மாம்**—என்னை, **தாரய**—(ப்ரக்ருதியைக்) கடந்தவனாம்படி செய்தருளவேணும். "**மாயாம் மாம் தாரய**" என்று த்விகர்மக ப்ரயோக:. (தவாஸ்மி தாஸ:) என்கிறவிடத்திலுள்ள **அஸ்மி**—ப்ரார்த்தநாபிப்ராயத்தாலே ப்ரயோகிக்கப்பட்டதென்று கொள்ளவேணும். தாஸவ்ருத்திபரனாயிருக்கக் கடவேன் என்றபடி. இப்படி கொள்ளாதபோது கீழே (தாஸபூதம்) என்றதையே மீண்டும் சொன்னதாக ஆகுமத்தனை—என்று தேசிகர் திருவுள்ளம் பற்றுகிறார்.

இனி சதுர்த்தியின் அர்த்தமான இஷ்டப்ராப்தியை ப்ரார்த்திக்கிறார்—

(மூலம்) 13. ***தேஷாம் ஜ்ஞாநீ நித்ய யுக்த ஏகபக்திர் விசிஷ்யதே, ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:. உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம், ஆஸ்திதஸ் ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம். பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே, வாஸுதேவஸ்ஸர்வ மிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:* இதி ச்லோகத்ரயோதித ஜ்ஞாநிநம் மாம் குருஷ்வ.**

நமச்சப்தத்தின் பொருளான விரோதி நிவர்த்தநத்தைக் கீழே பிரார்த்தித்தார்; அவ்வளவோடு நிற்கவொண்ணுமோ? பரமபுருஷார்த்தமான கைங்கர்ய ஸித்தியும் வேணுமே. அந்த கைங்கர்யத்தை ப்ரார்த்திக்க நினைத்து அதற்கு இன்றியமையாததாய்க் கைங்கர்யம் போலவே ப்ரியவிஷயமாய்த் திருநாட்டிலும் அநுவர்த்திக்குமவையான பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளை யபேக்ஷிக்க நினைத்து, பக்திரூபாபந்நமான ஜ்ஞானமுடையார்க்கே அவை ஸித்திக்கக் கூடுமாகையாலே அந்த ஜ்ஞானம் ஸித்திக்க வேண்டுமென்று, கீதாசார்யனருளிச்செய்த மூன்று ச்லோகங்களை முன்னிட்டுக் கொண்டு —அந்த ஜ்ஞானத்தை யுண்டாக்கியருளவேணுமென்று வேண்டுகிறார். பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் பதினேழு பதினெட்டு பத்தொன்பதாம் ச்லோகங்களை அடைவே அநுஸந்தித்து, இந்த மூன்று ச்லோகங்களாலும் தேர்ந்த ஞானத்தையுடையேனாம்படி அடியேனைச் செய்தருளவேண்டுமென்று இரக்கிறார்.

இம்மூன்று ச்லோகங்களுக்கும் அடைவே பொருள் விவரிக்கப்படுகிறது. கீழ் ச்லோகத்தில் ***சதுர்விதா பஜந்தே மாம்*** என்று தொடங்கி, தன்னை பஜிப்பவர்கள் நான்கு வகைப்பட்டவர்களென்று சொன்னான் **கண்ணன்.** ப்ரஷ்டைச்வர்யகாமன், அபூர்வைச்வர்யகாமன், ஆத்மாநுபவமாகிற கைவல்ய மோக்ஷத்தை விரும்புமவன், பகவதநுபவமாகிற பரம புருஷார்த்தத்தை விரும்புமவன் என நால்வராகச் சொல்லப்பட்டாலும் ஐச்வர்யகாமர்களென்று ஒரே வகுப்பாதலால் மூவராகவே கொள்ளலாம். அப்படிப்பட்ட மூவகையான பக்தர்களுள் ஜ்ஞாநியென்பவன் சிறந்தவனென்கிறது. [**தேஷாம் ஜ்ஞாநீ......விசிஷ்யதே**] என்று. அந்தச் சிறப்புக்குக் காரணமேதென்னில்; [**நித்யயுக்த:, ஏகபக்தி:**] நித்யயுக்தனாய் ஏகபக்தியா யிருக்கையாலே ஜ்ஞானியானவன் சிறந்தவன் என்கிறது. **ஜ்ஞாநிந: அத்யர்த்தம் ப்ரிய: அஹம்**—ஜ்ஞாநிக்கு என்னிடத்திலுள்ள ப்ரீதி வாசாமகோசரமென்றபடி. **ஸ ச மம ப்ரிய:**—அப்படியே அந்த ஞானியிடத்தில் எனக்குள்ள ப்ரீதியும் வாசாமகோசரமென்றபடி..

ஏதே ஸர்வே ஏவ உதாரா:—கீழ்ச்சொன்ன அதிகாரிகள் யாவரும் என்னையே உபாஸிக்கிறபடியினால் ஔதார்யம் மிக்கவர்கள். என்னிடத்திலிருந்து சிறிதளவாகிலும் கொள்பவர்களை நான் எனக்கு ஸர்வஸ்வ தாதாக்களாக நினைப்பவனென்றபடி. **ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்**—ஆனாலும் ஞானியையே நான் எனக்கு உயிராக நினைப்பவனென்றபடி. ஏனென்னில்; **ஸ ஹி யுக்தாத்மா மாமேவ அநுத்தமாம் கதிம் ஆஸ்தித:**—என்னோடு சேர்ந்தே வாழ நினைத்திருக்கிற அந்த அதிகாரியானவன் என்னையே உயர்ந்த ப்ராப்யவஸ்துவாக நினைத்திருப்பதனால் என்றபடி. [மேல் ***பஹூநாம் ஜன்மநாமந்தே*** என்கிறச்லோகத்தினாலும் ஜ்ஞாநியின் சிறப்பே சொல்லப்படுகிறது.] **பஹூநாம் ஜந்மநாம் அந்தே**—பலபல பிறப்புகள் கடந்த பிறகு, **ஜ்ஞாநவாந் ஸந்**—எனக்கு சேஷப்பட்டிருக்கையே ஆத்மஸ்வரூபமென்று உணர்ந்தவனாகி, **மாம் ப்ரபத்யதே**—ஞானியானவன் என்னைப் பணிகின்றான்; எப்படி பணிகின்றானென்னில்; **வாஸுதேவஸ் ஸர்வம் இதி**—*உண்ணுஞ் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்* என்கிற ப்ரதிபத்தியோடு பணிகின்றான். **ஸ: மஹாத்மா ஸுதுர்லப:**—அப்படிப்பட்ட மஹாத்மா எனக்குக் கிடைப்பதரிது.

ஆக இம்மூன்று ச்லோகங்களிலும் புகழ்ந்து கூறப்பட்ட ஞானியாக அடியேனைச் செய்தருளவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று. (13)

(மூலம்.) 14. ***புருஷஸ் ஸ பர: பார்த்த! பக்த்யா லப்யஸ் த்வநந்யயா**
***பக்த்யா த்வநந்யயா சக்ய:, * மத்பக்திம் லபதே பராம்**
இதி ஸ்தாநத்ரயோதித பரபக்தி யுக்தம் மாம் குருஷ்வ.

புருஷஸ் ஸ பர: பார்த்த! என்கிற ச்லோகம் கீதையில் எட்டாவது அத்யாயத்தில் இருபத்திரண்டாவது. ***பக்த்யா த்வநந்யயா சக்ய:*** என்கிற ச்லோகம் பதினோராமத்யாயத்தில் ஐம்பத்துநான்காவது. ***மத்பக்திம் லபதே பராம்*** என்பது பதினெட்டாமத்யாயத்தில் ஐம்பத்துநான்காவது. ஆக இம்மூன்றிடங்களிலும் சொல்லப்பட்ட பரபக்தி அடியேனுக்கு விளைந்ததாகச் செய்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தாராயிற்று. (14)

(மூலம்.) 15. **பரபக்தி பரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ.**

பரபக்தி விளைந்தவளவிலே பர்யாப்தி பிறவாதிறே. பரபக்தி பரஜ்ஞாநம் பரமபக்தி இவையே வடிவெடுத்தவனாக அடியேனைச் செய்தருள வேணுமென்கை. ... ... (15)

(மூலம்.) 16. **பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி க்ருத பரிபூர்ணாநவரத நித்ய விசததமாநந்யப்ரயோஜநாநவதிகாதிசய ப்ரிய பகவதநுபவோஹம் ததாவித பகவதநுபவ ஜநிதாநவதிகாதிசய ப்ரீதிகாரிதாசேஷாவஸ்தோசிதாசேஷ சேஷதைகரதிரூபநித்ய கிங்கரோ பவாநி.**

இந்த சூர்ணையினால், நித்யாநுபவத்தையும் நித்ய கைங்கர்யத்
தையும் பெற்று வாழவேணுக வேணுமென்று ப்ரார்த்தித்தாராயிற்று.
கீழ் இரண்டாவது சூர்ணையில் உள்ள வாக்கிய ஸந்நிவேசமே இங்குச்
சிறிது மாறியிருக்கிறதத்தனை. விவரணம் அங்கே கண்டு
கொள்வது. ... ... (16)

(மூலம்.) 17. ஏவம்பூத மத்கைங்கர்யப்ராப்த்யுபாயதயா அவக்லுப்த ஸமஸ்த வஸ்து
விஹீநோபி, அநந்த தத்விரோதி பாபாக்ராந்தோபி அநந்த மதபசார
யுக்தோபி, அநந்த மதீயாபசார யுக்தோபி, அநந்தாஸஹ்யாபசார யுக்
தோபி, ஏதத்கார்யகாரண பூதாநாதி விபரீதாஹங்கார விமூடாத்ம
ஸ்வபாவோபி, ஏததுபய கார்ய காரண பூதாநாதி விபரீத வாஸநா
ஸம்பத்தோபி, ஏததநுகுண ப்ரக்ருதி விசேஷ ஸம்பத்தோபி, ஏதந்
மூலாத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக ஸுக துக்க தத்தேது
ததிதரோபேக்ஷணீய விஷயாநுபவ ஜ்ஞாந ஸங்கோசரூப மச்சரணாரவிந்த
யுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி விக்ந ப்ரதிஹ
தோபி, யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம் கேவலம் மதீய
யைவ தயயா நிச்சேஷ விநஷ்ட ஸஹேதுக மச்சரணாரவிந்த யுகளைகாந்தி
காத்யந்திக பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி விக்ந: மத்ப்ரஸாதலப்த மச்
சரணாரவிந்த யுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி:
மத்ப்ரஸாதாதேவ ஸாக்ஷாத்க்ருத யதாவஸ்தித மத்ஸ்வரூப ரூப குண
விபூதி லீலோபகரண விஸ்தார:, அபரோக்ஷஸித்த மந்நியாம்யதா
மத்தாஸ்யைக ஸ்வபாவாத்மஸ்வரூப: மதேகாநுபவ:, மத்தாஸ்யைக
ப்ரிய:, பரிபூர்ணாநவரத நித்ய விசததமாநந்ய ப்ரயோஜநாநவதிகாதிசய
ப்ரிய மதநுபவஸ் த்வம் ததாவித மதநுபவ ஜநிதாநவதிகாதிசய ப்ரீதி
காரிதாசேஷாவஸ்தோசிதாசேஷ சேஷதைகரதிரூப நித்யகிங்கரோ பவ.

இனி இதற்குமேல் இந்த கத்யம் முடியுமளவும் எம்பெருமானு
டைய ப்ரதிவசந ப்ரகாரத்தை அநுவதிக்கிறபடி ...—ஏவம்பூத மத்கைங்கர்ய
ப்ராப்த்யுபாயதயா அவக்ல்ப்த ஸமஸ்தவஸ்து விஹீநோபி—(இந்த சூர்ணையின்
நடுவில் ''த்வம் கேவலம் மதீயயைவ தயயா'' என்றவிடத்திலுள்ள த்வம்
என்பது முதலில் யோஜித்துக் கொள்ளத்தக்கது. ஸ்ரீராமாநுஜரை
நோக்கி ஸ்ரீரங்கநாதனுடைய ப்ரதிவசனம் இது. கீழில் சூர்ணையில்
''நித்யகிங்கரோ பவாநி'' என்று ப்ரார்த்தித்ததற்கு—அப்படியே நித்ய
கிங்கரராகக் கடவீரென்று அநுக்ரஹம் செய்வது இந்த சூர்ணை. 'ஏவம்
பூத' என்றது கைங்கர்யத்திற்கு விசேஷணம். கீழ் சூர்ணையில் எப்படிப்
பட்ட கைங்கர்யம் ப்ரார்த்திக்கப்பட்டதோ அதை அநுவதிக்கிறபடி.

நீர் விரும்பினபடியே கைங்கரியம் பெறுவதற்கு எவ்வெவ்விதமான உபாயாநுஷ்டானங்கள் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவையொன்றும் உமக்கு இல்லையேயாகிலும் என்கை.

அநந்த தத்விரோதி பாப ஆக்ரோந்தோ"பி — அப்படிப்பட்ட உபாயாநுஷ்டானங்களை இனிமேலும் ஸம்பாதித்துக்கொள்ள வொண்ணாதபடி அவற்றுக்கு விரோதிகளான அபரிமித பாபங்கள் மலிந்திருக்கப் பெற்றீராகிலும்.

அநந்த மதபசாரயுக்தோபி—என்னளவில் பண்ணின அபசாரங்கள் அபரிமிதமாக இருக்கப் பெற்றீராகிலும்.

அநந்த மதீயாபசாரயுக்தோபி—அபரிமிதமான பாகவதாபசாரங்கள் மலிந்திருக்கப் பெற்றீராலும்.

அநந்த அஸஹ்யாபசார யுக்தோபி—அபரிமிதமான அஸஹ்யாபசாரங்கள் மலிந்திருக்கப் பெற்றீராகிலும்.

ஏதத் கார்ய காரணபூத அநாதி விபரீதாஹங்கார விமூடாத்மஸ்வபாவோபி—இப்படிப்பட்ட அபசாரங்களினால் உண்டாகுமதும் இவற்றை மேன்மேலுமுண்டாகுவதுமான அநாதி விபரீதாஹங்காரத்தினால் மறைபட்ட ஆத்ம ஸ்வபாவத்தையுடையீராகிலும்.

ஏததுபய கார்ய காரணபூத அநாதி விபரீத வாஸநாஸம்பத்தோபி—கீழ்ச்சொன்ன அபசாரமும் அஹங்காரமுமாகிற இரண்டுக்கும் கார்யமும் காரணமுமான அநாதி விபரீத வாஸனை சூழப்பெற்றிருந்தீராகிலும்.

ஏததநுகுண ப்ரக்ருதிவிசேஷ ஸம்பத்தோபி—கீழ்ச்சொன்ன அபசார அஹங்கார வாஸனைகளாகிற மூன்றுக்கும் ஏற்ற ராஜஸ தாமஸ ப்ரக்ருதியினாலே நன்கு கட்டப்பட்டிருந்தீராகிலும்.

ஏதந்மூல ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக ஸுகதுக்க தத்தேது ததிதர உபேக்ஷணீய விஷயாநுபவ ஜ்ஞாநஸங்கோச ரூப மச்சரணாரவிந்த யுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி விக்ந ப்ரதிஹதோபி—கீழ்ச்சொன்ன ப்ரக்ருதியடியாக வருகிற தாபத்ரயமென்னப்படுகிற ஸுகதுக்கங்களென்ன, அவற்றுக்கு ஹேதுவானவையென்ன, அந்த ஸுகதுக்கங்களிற் காட்டிலும் வேறான உபேக்ஷிக்கக்கூடிய விஷயங்களென்ன, இவற்றின் அநுபவமும் ஜ்ஞாந ஸங்கோசமுமாகிய—என் திருவடியிணைகளைப் பற்றின பரிபூர்ண பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி யிடையூறுகளினால் கெடுதல்களடைந்திருந்தீராகிலும்.

யேந கேநாபி ப்ரகாரேண த்வயவக்தா த்வம்—ஏதேனுமொருபடி த்வய மந்த்ரத்தைச் சொன்னவரான நீர்.

கேவலம மதீயயைவ தயயா—என்னுடைய நிர்ஹேதுக க்ருபை யினாலேயே,

நிச்சேஷ விநஷ்ட ஸஹேதுக மச்சரணாரவிந்த யுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி விக்ந:—என்னுடைய திருவடித்தாமரை யிணைகளைப் பற்றிய பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளின் இடையூறுகளெல்லாம் நிர்மூலமாக [அவற்றின் காரணங்களோடுங்கூட] நன்கு கழியப் பெற்றவராகி,

மத் ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்த யுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி:—என் திருவடித் தாமரையிணைகளைப்பற்றிய பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் என்னுடைய அநுக்ரஹமடியாக உண்டாகப் பெற்றவராய்,

மத் ப்ரஸாதாத் ஏவ—என்னுடைய அநுக்ரஹமடியாகவே,

ஸாக்ஷாத்க்ருத யதாவஸ்தித மத்ஸ்வரூப ரூப குண விபூதி லீலோபகரண விஸ்தார:—என்னுடைய ஸ்வரூபம் ரூபம் திருக்குணங்கள் நித்யவிபூதி லீலாவிபூதி ஆகிய இவற்றின் விஸ்தாரங்களை உள்ளபடி ஸாக்ஷாத் கரிக்கப் பெற்றவராய்,

அபரோக்ஷஸித்த மந்நியாம்யதா மத்தாஸ்யைக ஸ்வபாவாத்ம ஸ்வரூப:—எனக்கே நியாம்யமாயும் எனக்கே அடிமைப்பட்டுமிருக்கையாகிற இயற்கையான ஆத்ம ஸ்வரூபத்தை உள்ளபடி உணரப் பெற்றவராய்,

மதேகாநுபவ:—என்னொருவனையே அநுபவிக்க விரும்பியவராய்,

மத்தாஸ்யைகப்ரிய:—எனக்குக் கைங்கரியம் பண்ணுவதொன்றி லேயே ஊற்றமுடையவராய்.

பரிபூர்ணாநவரத நித்யவிசததம அநந்யப்ரயோஜந அநவதிகாதிசயப்ரிய மதநுபவ: த்வம்—பரிபூர்ணமாயும் இடைவீடற்றதாயும் எப்போதும் மிக விசதமாயும் ப்ரயோஜநாந்தரப் பற்று அற்றதாயும் பரமப்ரியமாயு மிருக்கிற என்னநுபவத்தை யுடையீராய்,

ததாவித மதநுபவஜநித அநவதிகாதிசய ப்ரீதிகாரித அசேஷாவஸ்தோசித அசேஷ சேஷதைக ரதிரூப நித்ய கிங்கரோ பவ—அப்படிப்பட்ட என்னநுபவத்தினால் உண்டுபண்ணப்பட்ட மிகச் சிறந்த உகப்பினாலாகிய ஸர்வாவஸ்தோசித ஸகல கைங்கரியங்களிலும் ஆசை கொண்டிருக்கும் அடியவராக ஆகக்கடவீர். (என்று அநுக்ரஹித்தபடி.)

இந்த சூர்ணையின் பரமதாற்பரியமாவது—எனக்கு நித்ய கைங்கரியம் செய்து களிக்கவேணுமென்றாசை கொண்ட நீர் அதற்குரிய ஒரு

உபாயத்திலும் அந்வயமற்றிருந்தீராகிலும், அந்த உபாயம் இனிமேலும் நிஷ்பந்நமாக முடியாதபடி விரோதிகளான பாபங்கள் கூடு பூரித்திருந்தீராகிலும், பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்கள் மலிந்திருந்தீராகிலும், பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள் விளையாமைக்குறுப்பான இடையூறுகள் பல மலிந்திருந்தீராகிலும், நீர் ஆர்த்த ப்ரபந்நராகியோ, த்ருப்த ப்ரபந்நராகியோ த்வயமந்த்ரத்தை அநுஸந்தித்தீராதலால் என்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலேயே இடையூறுகளெல்லாம் நீங்கப்பெற்று பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகள் புஷ்கலமாகப்பெற்று என்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ஸாக்ஷாத்கரிக்கப்பெற்று உம்முடைய ஸ்வரூபத்தையும் நன்கு தெளியப்பெற்று என்னையே அநுபவிப்பவராய் எனக்கே தொண்டு செய்பவராய் வாழக்கடவீரென்று எம்பெருமான் அநுக்ரஹித்தருளினபடியை அருளிச்செய்தாராயிற்று.

(மூலம்) 18 ஏவம்பூதோஸி.

இதுவும் எம்பெருமானுடைய திருமுகப்பாசுரம். கீழே நான் அநுக்ரஹித்தபடியே ஆகத்தொடங்கிவிட்டீர் என்றபடி. "ஏவம் பவிதும் உபக்ராந்தோஸி, இதயர்த்த:" என்பது தேசிக பாஷ்ய ஸூக்தி. ... ... (18)

(மூலம்.) 19. ஆத்யாத்மிகாதிபௌதிகாதிதைவிக துஃக்க விக்ந கந்த ரஹிதஸ் த்வம் த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ.

* ஆற்றங்கரை வாழ்மரம் போலஞ்சுகின்றேன் * என்றும் * இருபாடெரி கொள்ளியினுள் எறும்பே போலுருகா நிற்குமென்னுள்ளம் * என்றும் * வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போலே உள்ளந்துளங்கா நிற்பன் * என்றும் அஞ்சவேண்டும்படியான இவ்விருள் தருமா ஞாலத்திலே நிர்பாயமாகக் காலக்ஷேபம் செய்ய வழியேது? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக இந்த சூர்ணையும் எம்பெருமானுடைய திருமுகப் பாசுரமாகத் திருவவதரிக்கிறபடி.

தாபத்ரய ஜநித துக்கமாகிற இடையூறு சிறிதுமில்லாதவராய் த்வயமந்த்ரத்தை அர்த்தாநுஸந்தானத்தோடுகூட எப்போதும் இப்படியே சொல்லிக்கொண்டிருப்பவராய் இவ்வுடல் தொலையும்வரை இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக்கடவீரென்று நம்பெருமாள் சோதிவாய் திறந்தருளிச் செய்தபடி. இங்கு ஸ்ரீரங்கத்தைச் சொன்னது உகந்தருளின நிலங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணமென்று தேசிகன் திருவுள்ளம் பற்றுகிறார். ... ... (19)

(மூலம்.)20 சரீரபாதஸமயே து கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தோ மாமேவாவ லோகயந் அப்ரச்யுத பூர்வ ஸம்ஸ்கார மநோரத: ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேந இமாம் ப்ரக்ருதிம் ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் விஸ்ருஜ்ய, ததாநீமேவ மத் ப்ரஸாதலப்த மச்சரணாரவிந்த யுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திக்ருத பரிபூர்ணாநவரத நித்ய விசததமாநந்யப்ரயோஜநாநவதி காதிசயப்ரிய மதநுபவஸ் த்வம் ததாவிதமதநுபவ ஜநிதாநவதிகாதிசய ப்ரீதி காரிதாசேஷாவஸ்தோசிதா சேஷசேஷதைகரதிரூப நித்யகிங்கரோ பவிஷ்யஸி.

ப்ரபந்நனுக்கு பூர்வக்ருத்யமென்றும் உத்தரக்ருத்யமென்றும் இரண்டுண்டு. பூர்வக்ருத்யம் கீழே பரக்கச் சொல்லிற்று உத்தரக்ருத்யம் சொல்லுகிறதிப்போது. இவ்வுடல் சரியும் நிலைமை எப்படிப்பட்டது? பரமபலன் கைபுகுவது எப்போது? என்ற கேள்விகளுக்கு விடையிறுக்கிறது இங்கு. இதுவும் பெரிய பெருமாளுடைய திருவாக்கநுவாதம். (அடைவே விவரிக்கப்படுகிறது.)

சரீரபாதஸமயே து—உடல் சரிந்து போம்போது.

கேவலம மதீயயைவ தயயா அதிப்ரபுத்த:—என்னுடைய இயற்கையான அருளாலேயே மிகவும் சிறந்த ஞானமுடையீராய்,

மாம் ஏவ அவலோகயந்—இதற்குமுன் சிந்திக்கப்பட்ட என்னையே சிந்திப்பவராகி,

அப்ரச்யுத பூர்வஸம்ஸ்கார மநோரத:—"எம்பெருமானே எனக்குப் பரமப்ராப்ய பூதன்" என்கிற ஸம்ஸ்காரமும் ப்ராப்தியிலுண்டான பாரிப்பும் குன்றுதவராகி,

ஸ்தூல ஸூக்ஷ்ம ரூபாம் இமாம் ப்ரக்ருதிம் ஜீர்ணம் வஸ்த்ரமிவ ஸுகேந விஸ்ருஜ்ய—ஸ்தூலமும் ஸூக்ஷ்மமுமான இந்த ப்ரக்ருதியை, பழைய வஸ்த்ரத்தை விடுமாபோலே எளிதாக விட்டு,

ததாநீம் ஏவ—அப்போதே [தாமதமின்றி.]

மத்ப்ரஸாத லப்த மச்சரணாரவிந்தயுகளைகாந்திகாத்யந்திக பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி க்ருத பரிபூர்ணாநவரத நித்ய விசததமாநந்ய ப்ரயோஜநாநவதிகாதிசய ப்ரிய மதநுபவஸ் த்வம் ததாவிதாமதநுபவஜநிதாநவதிகாதிசயப்ரீதிகாரித அசேஷாவஸ்தோசிதா சேஷ சேஷதைகரதிரூப நித்ய கிங்கரோ பவிஷ்யஸி—என்னுடைய அநுக்ரஹத்தினாலேயே......நித்ய கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றவராகப் போகிறீர்.—கீழே "பாரமார்த்திக பகவச்சரணாரவிந்தயுகளைகாந்தி காத்யந்திக" என்கிற இரண்டாவது சூர்ணையில் அருளிச்செய்துள்ள

ஸ்ரீஸூக்திகளே இங்குள்ளனவாதலால் விரிவான வுரையை அங்கே காண்க.

(மூலம்.) 21. **மா தே பூதத்ர ஸம்சய:.**

"**நித்ய கிங்கரோ பவிஷ்யஸி**" என்று அநுக்ரஹித்த இவ்விஷயத்தில் உமக்கு ஸம்சயம் வர்த்திக்க வேண்டாவென்கிறது. ***ப்ரஸக்தஸ்யைவ ஹி ப்ரதிஷேத:*** என்றிறே நியாயமிருப்பது; இங்கு ஸந்தேஹ ப்ரஸக்தி யுண்டோ வென்னில், உலகில் க்ஷுத்ர பலன்களைப் பெறுவதற்கும் மிகவும் கனத்த உபாயாநுஷ்டானங்கள் காணாநின்றோம்; மிகமிக்க கனத்த பேருகிய மோக்ஷ புருஷார்த்தம் பெறுவதற்கு—துஷ்கரத்வத்தில் இனியிதுக்கு அவ்வருகில்லை யென்னலாம்படி பரம துஷ்கரமான உபாயம் இருக்க வேண்டாவோ? மிகவும் ஸுகரமான இந்த ந்யாஸ மாத்ரத்தினாலே பேறு தப்பாதென்னில், இது கண் துடைக்கிற வார்த்தையாயிருக்குமோ வென்று சிலர்க்கு சங்கையுண்டாகக் கூடுமாகையாலே அவர்களுக்கும் தெளிவு பிறப்பிக்கவேண்டி எம்பெருமானை அபதேசித்து ***மா தே பூத் அத்ர ஸம்சய:*** என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்கிறபடி. ... ... (21)

(மூலம்.) 22 ***அந்ருதம் நோக்த பூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந *ராமோ த்விர் நாபி பாஷதே * ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே, அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம.* *ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ, அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:* இதி மயைவஹி உக்தம்.**

மா தே பூத் அத்ர ஸம்சய. என்று கீழே அருளிச் செய்ததையே நன்கு நிலைநாட்டுதற்காக இந்த சூர்ணையும் மேல் சூர்ணையும் அவதரிக்கின்றன. என்னுடைய நித்ய கைங்கர்ய ப்ராப்தியில் உமக்கு ஸந்தேஹம் வர்த்திக்குமாகில் நான் ஏற்கெனவே பேசி வைத்திருக்கின்ற வார்த்தைகள் விரோதிக்குமே; அவை பொய்யாகுமே; *தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே* என்று உம்முடைய திருத்தங்கையாரும் சொல்லி வைத்தாளே; ஆகவே என்னுடைய வார்த்தையை நீர் உபச்சந்தநமாத்திரமாகக் கொள்ளாதொழிய வேணுமென்று நம்பெருமாள் அருளிச் செய்தபடி. இதுவரையில் ஒருகாலும் நான் பொய் சொல்லிற்றில்லை; இனிமேல் சொல்லப்போகிறதுமில்லை யென்று க்ருஷ்ணாவதாரத்திலே சொன்னேன்; இராமன் வாயிலே இரண்டு பேச்சு வாராதென்று ராமாவதாரத்திலே சொன்னேன்; அன்றியும், ராமாவதாரத்திலே கடற்கரையிலே விபீஷணாழ்வானை வ்யாஜீகரித்து

* ஸக்ருதேவ ப்ரபந்நாய * என்கிற சரம ச்லோகமுரைத்தேன் ; க்ருஷ்ணாவதாரத்திலே திருத்தேர் தட்டிலே அர்ஜுனனை வ்யாஜீகரித்து * ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய * என்கிற சரமச்லோக முரைத்தேன் ; * ஸக்ருதேவவில் * ஏதத் வ்ரதம் மம * என்பது உயிரான வார்த்தை. * ஸர்வ தர்மானில் * மா சுச: * என்பது உயிரான வார்த்தை ஆக இப்படிச் சொல்லியிருக்கிற நான் இன்றாகப் பொய்யனாக மாட்டேன் காணும் என்று திண்மை பெறுத்தினபடி. (22)

(மூலம்.) 23. அதஸ் த்வம் தவ தத்வதோ மத்ஜ்ஞாந தர்சந
ப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ் ஸுக மாஸ்ஸ்வ

கீழ்ச் சொன்னதையே திடப்படுத்தி யருளிச் செய்கிறவிது ஸந்தோஷாதிசயத்திற்காகவாயிற்று. இதுவும் பகவத் வாக்யம். அத:—ஸத்யவாதியும் ஸத்ய வ்ரதனுமான நான் சொன்ன வார்த்தை மிகவும் விச்வஸிக்கத் தகுந்ததாகையினாலே, த்வம்—ப்ராமாணிகரான நீர், தவ—என்னாலே பெறுவிக்கப்பட்ட ஸகல குணங்களையுமுடையவரான உம்முடைய, தத்வத: மத் ஜ்ஞாந தர்சந ப்ராப்திஷு—உள்ளபடி என்னை யறிவது, காண்பது, நித்ய கைங்கர்யம் பண்ணுவது ஆகிற விவற்றில், நிஸ்ஸம்சய:—சங்கா களங்கலேசமு மில்லாதவராய், ஸுகம் ஆஸ்ஸ்வ—இனிது வாழ்ந்திருக்கக் கடவீர் என்று எம்பெருமானாரை நோக்கி எம்பெருமான் அருளிச்செய்த திருமுகப்பாசுரம் (23)

4.) இதற்குமேல் * அந்த்யகாலே ஸ்ம்ருதிர் யா து தவ கைங்கர்ய காரிதா, தாமேநாம் பகவந் அத்ய க்ரியமாணாம் குருஷ்வ மே * என்றொரு ச்லோகம் அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. ஆனால் பெரியவாச்சான் பிள்ளையோ ச்ருத ப்ரகாசிகாசார்யரோ நிகமாந்த குருவோ இதற்கு வியாக்கியானம் செய்தருளக் காண்கின்றிலோம். ... ... *

ஸ்ரீ :

சரணாகதி கத்யத்தின் தாத்பர்ய ஸாரம்.

இந்த கத்யத்திலுள்ள சூர்ணைகள் 24. இவற்றுக்கு ப்ரதி பதார்த்தமும் விசேஷார்த்தமும் எழுதப்பட்டிருந்தாலும் ஸாரமான தாற்பரியம் கதைபோல நெஞ்சில் படிவதற்காக இந்த தாத்பர்யஸாரம் எழுதப்படுகிறது.

சூர்ணை. 1. மேல் * அகில ஹேய ப்ரத்யநீக * இத்யாதியான ஐந்தாவது சூர்ணையில் ஸ்வாமி தாம் அநுஸந்திக்கப் போகிற பகவச்

சரணாகதி நன்கு நிறைவேறுவதற்காக முந்துற முன்னம் பெரிய பிராட்டியார்பக்கலிலே புருஷகார ப்ரபத்தி செய்யப்படுகிறது.

2. பெரிய பிராட்டியாரை நோக்கிச் செய்த புருஷகார ப்ரபத்தி இன்னதற்காகவென்பது வ்யக்தமாகச் சொல்லப்படுகிறது.

3, 4. அங்ஙனமேயாயிடுக வென்று பெரிய பிராட்டியார் அநுக்ரஹம் செய்தருளினமை சொல்லிற்று.

5. எம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூப திவ்யமங்கள விக்ரஹங்களின் வைலக்ஷண்யத்தையும், கல்யாண குணயோகத்தையும், திவ்யபூஷண மஹிஷீ ஸாஹித்யத்தையும், நித்யஸூரிகளோட்டைச் சேர்த்தியையும், நித்யவிபூதி நாயகத்வத்தையும், லீலா விபூதி நிர்வாஹகத்வத்தையும், மற்றும் ஸத்யகாமத்வ ஸத்ய ஸங்கல்பத்வாதி குண விசேஷங்களுடைமையையும் பரக்கச் சொல்லியேத்தி எம்பெருமானுடைய திருவடித் தாமரையிணைகளிலே சரணாகதி செய்தமை சொல்லிற்று.

6, 7, 8, 9. த்வயாநுஸந்தானம் செய்தருளி, புராண ச்லோகங்களிரண்டையும் கீதையிலுள்ள மூன்று ச்லோகங்களையும் அநுஸந்தித்தாராயிற்று.

10, 11. காலத்ரயத்திலும் கரண த்ரயத்தாலும் விளையும் ஸமஸ்தாபசாரங்களையும் பொறுத்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தது. 10–ல் நிஷித்தாசரண க்ஷமா ப்ரார்த்தநை, 11–ல் காம்யாசரண க்ஷமா ப்ரார்த்தநை.

12. கீதையில் *மம மாயா துரத்யயா* என்றும் *மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே* என்றும் சொல்லியுள்ளதை யநுஸரித்து மாயையை மடிவிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தது.

13. கீதையில் மூன்று ச்லோகங்களை யெடுத்துக்காட்டி அவற்றில் சொல்லப்பட்ட ஜ்ஞானம் தமக்கு உண்டாக வேணுமென்று பிரார்த்தித்தது.

14. கீதையில் மூன்றிடங்களில் சொல்லப்பட்ட பரபக்தி தமக்கு விளைய வேணுமென்று ப்ரார்த்தித்தது.

15. பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளே வடிவெடுத்தவனாக அடியேனைச் செய்தருள் வேணுமென்று ப்ரார்த்தித்தது.

16. அந்த பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகளால் விலக்ஷண பகவதநுபவம் விளைந்து அவ்வநுபவ பரீவாஹரூபமாக நித்ய கைங்கர்யருசி விளையவேணுமென்றது.

(இனி இதற்குமேல் கத்யம் முழுவதும் எம்பெருமானுடைய ப்ரதி வசநம்.)

17. வாரீர் இராமானுசரே!, எனக்கு நித்ய கைங்கர்யஞ் செய்து களிக்க விரும்பிய நீர் அதற்கு உரிய ஒரு உபாயத்திலும் அந்வயமற்றிருந்தீராகிலும், அந்த உபாயம் இனிமேலும் நிஷ்பந்நமாகக் கூடாதபடி விரோதிகளான பாபங்கள் நிரம்பி யிருந்தீராகிலும், ஸகலவிதமான அபசாரங்களும் மலிந்திருந்தீராகிலும், பரபக்தி பரஜ்ஞாந பரம பக்திகள் விளையாமைக் குறுப்பான இடையூறுகள் பல மலிந்திருந்தீராகிலும், நீர் ஆர்த்த ப்ரபந்நராகியோ த்ருப்தப்ரபந்நராகியோ த்வய மந்த்ரத்தை அநுஸந்தித்தீராதலால் என்னுடைய நிர்ஹேதுக க்ருபையினாலேயே இடையூறுகளெல்லாம் நீங்கப்பெற்று பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகள் புஷ்கலமாகப் பெற்று என்னுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை ஸாக்ஷாத்கரிக்கப்பெற்று உம்முடைய ஸ்வரூபத்தையும் நன்கு தெளியப்பெற்று என்னையே அநுபவிப்பவராய் எனக்கே தொண்டு செய்பவராய் வாழக் கடவீரென்று எம்பெருமான் அநுக்ரஹித்தருளினபடி சொல்லிற்று.

18. இங்ஙனே யாகப் புகுந்தீரென்று எம்பெருமான் அநுக்ரஹித்தமை சொல்லிற்று.

19. தாபத்ரய லேசமுமற்று அர்த்தாநுஸந்தானத்தோடு த்வயோச்சாரணம் செய்துகொண்டு இவ்வுடல் விழுந்தளவும் இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக்கடவீரென்று அநுக்ரஹித்தமை சொல்லிற்று.

20. இவ்வுடல் சரிந்து போங்காலத்தில் சிறந்த நன்மைகளைப் பெற்று நித்ய கைங்கர்ய நிரதராகப் போகிறீரென்று அநுக்ரஹித்தமை சொல்லிற்று.

21. இதில் சிறிதும் ஸந்தேஹம் வேண்டாவென்று தெளிவித்தமை சொல்லிற்று.

22. தன்னுடைய திருவாக்குப் பழுதுபடாதென்று எம்பெருமான் மூதலித்தமை சொல்லிற்று.

23. கீழ்ப் பண்ணின அபய ப்ரதானத்தைத் திடப்படுத்தி நிகமித்தது. [ஆக இவ்வளவும் எம்பெருமானுடைய ப்ரதிவசனம்.]

24. அந்திமஸ்ம்ருதி வேணுமென்று திருவுள்ளமாகில் * அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் * என்கிற கட்டளையிலே

கொண்டருளவேணுமென்று ஸ்வாமி தாம் ப்ரார்த்தித்து கத்யத்தை நிகமித்தாராயிற்று.

சரணாகதி கத்ய தாத்பர்யஸாரம் முற்றுப்பெற்றது.
எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

கத்யத்ரயத்தில் இரண்டாவது கத்யம்

ஸ்ரீரங்க கத்யம்

தனியன்

(மூலம்.) **சிதசித்பரதத்வாநாம் தத்வ யாதாத்ம்யவேதிநே,**
ராமாநுஜாய முநயே நமோ மம கரீயஸே.

சித் அசித் பரதத்வாநாம்—சேதநன் அசேதநம் ஈச்வரன் ஆகிற மூன்று தத்துவங்களினுடைய, **தத்வ யாதாத்ம்ய வேதிநே**—உண்மையை உள்ளபடி யறிந்தவரான, **மம கரீயஸே**—எனக்கு உத்தம குருவான, **ராமாநுஜாய முநயே**—எம்பெருமானார்க்கு, **நம:**—நமஸ்காரமாகுக.

இந்த இரண்டாவது கத்யத்திற்கு ஸ்ரீரங்ககத்ய மென்கிற வ்யவஹாரமும் மிதகத்ய மென்கிற வ்யவஹாரமுள்ளது. இங்கு முதல் சூர்ணையில் "**ஸ்ரீரங்கசாயிநம்**" என்று அருளிச் செய்தது கொண்டும், முடிவில் "**ஸ்ரீரங்கநாத! மமநாத! நமோஸ்து தே**" என்றருளிச் செய்தது கொண்டும் ஸ்ரீரங்ககத்யமென்று வ்யவஹரிக்கலாயிற்றென்று கொள்ள வேணும். முந்தின கத்யம் பெரிதாயிருக்கையாலே அத்தைப் பெரிய கத்யமென்றும் ப்ருஹத்கத்யமென்றும், இது சிறிதாயிருக்கையாலே இத்தைச் சிறிய கத்யமென்றும் **மித கத்ய** மென்றும் முன்னோர்கள் பணித்தபடி.

முந்தின கத்யத்தில் விரிவாக அருளிச் செய்யப்பட்ட விஷயமே இதில் சுருங்க அருளிச் செய்யப்படுகிறதாயிற்று. முன் கத்யம்போலவே இந்த கத்யமும் த்வய விவரணமேயா யிருக்கிறது. ஸங்க்ஷேபவிஸ்தரங்களினால் வாசி காண்க. இதில் முதல் சூர்ணை கைங்கர்ய ப்ரார்த்தநா பரமான உத்தர கண்டத்தின் விவரணமாகவும்; இரண்டாவது சூர்ணை சரணவரண ப்ரதர்சநபரமான பூர்வகண்டத்தின் விவரணமாகவும் அவதரிக்கின்றது. ... ... *

அவதாரிகை முற்றிற்று.

(மூலம்.) 1. [ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதநஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம் க்லேச கர்மாத் யசேஷ தோஷாஸம்ஸ்ப்ருஷ்டம் ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாந பலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவார்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாத்யஸங்க்யேய கல்யாண குணகணௌக: மஹார்ணவம் பரப்ரஹ்மபூதம் புருஷோத்தமம் ஸ்ரீரங்கசாயிநம் அஸ்மத் ஸ்வாமிநம் ப்ரபுத்த நித்யநியாம்ய நித்யதாஸ்யைகரஸாத்மஸ்வபாவோஹம் ததேகாநுபவஸ் ததேகப்ரிய: பரிபூர்ணம் பகவந்தம் விசததமாநுபவேந நிரந்தர மநுபூய ததநுபவஜநிதாநவதிகாதிசயப்ரீதி காரிதாசேஷாவஸ்தோசிதாசேஷ சேஷதைகரதிரூப நித்ய கிங்கரோ பவாநி.

மூன்று வகைப்பட்ட சேதநாசேதநங்களின் ஸ்வரூபமென்ன ரக்ஷணமென்ன ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளென்ன இவை தன்னதீனமாக இருக்கப்பெற்ற. (இது முதலான த்விதீயாந்த விசேஷணங்களெல்லாம் மேலே பகவந்தம் என்கிற விசேஷ்யத்தில் அந்வயித்து "விசததமாநுபவேந நிரந்தர மநுபூய" என்றிணங்கக் கடவது.) திருவாய்மொழியில் * உயர்வற வுயர்நல மென்கிற முதற்பதிகத்தில் * நாமவனிவ னுவன் * அவரவர் தமதமது * நின்றனரிருந்தனர் * என்ற அடைவேயுள்ள மூன்று பாசுரங்களையும் தழுவி இந்த முதல் விசேஷணமருளிச் செய்தபடி. * நாமவனிவ னென்கிற பாட்டில் சேதநாசேதநங்களின் ஸ்வரூபம் எம்பெருமானுடைய அதீனமென்றது. * அவரவர் தமதமதென்கிற பாட்டிலே அவற்றின் ரக்ஷணமும் எம்பெருமானுக்கதீனமென்றது. * நின்றனரிருந்தனரென்கிற பாட்டில் அவற்றின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் எம்பெருமானதீனமென்றது. சேதநர்கள் பத்தர்களென்றும் முக்தர்களென்றும் நித்யர்களென்றும் மூவகைப்பட்டிருப்பதுபற்றி "த்ரிவித சேதந" என்றது. அசேதநமானது த்ரிகுணமென்றும் காலமென்றும் சுத்தஸத்வமென்றும் மூவகைப்பட்டிருப்பது பற்றி "த்ரிவித அசேதந" என்றது. த்ரிவித என்கிற விசேஷணம் சேதநமாத்திரத்தில் அந்வயித்து அசேதநத்தில் அந்வயியாமலுமிருக்கலாமென்று தேசிகன் திருவுள்ளம் பற்றுகிறார். சூர்ணையின் முடிவிலுள்ள பேத பதம் ஸ்வரூபம் முதலிய மூன்றிலும் அந்வயித்து ஸ்வரூப பேதம் ஸ்திதி பேதம் ப்ரவ்ருத்தி பேதம் என்று கொள்வதற்கும் பாங்காகும். ஒவ்வொன்றிலும் அவாந்தர பேதங்கள் பலவுண்டாதல் அறிக.

க்லேச கர்மாத்யசேஷ தோஷ அஸம்ஸ்ப்ருஷ்டம்—அவித்யை முதலான ஐந்து க்லேசங்களென்ன, புண்ய பாப ரூபமான கரும மென்ன இவை முதலான எவ்வித தோஷ ஸம்பந்தமுமில்லாத:—சேதநாசேதநங்கள் சரீரமாய் எம்பெருமான் சரீரியாயிருக்கிறுகில் சரீர ஸம்பந்தத்தினாலாகும் தோஷம் சரீரிக்கும் வாராதோவென்ன, வாராதென்கிறது இந்த விசேஷணத்தினால். க்லேசங்களாவன—அவித்யா அஸ்மிதா அபிநிவேசம் ராகம் த்வேஷம் என்று ஐந்தாகச் சொல்லப்பட்டவை. அவற்றின் காரியமான புண்ய பாபங்கள் கருமங்களாகும். ஆதிபதத்தினால் விபாகம் முதலியன கொள்க.

ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவார்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாத்யஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம்—ஸ்வாபாவிகங்களாயும் உயர்வற வுயர்ந்தவையாயுமிருக்கிற ஷாட்குண்யம் முதலிய திருக்குணத் திரள்களுக்குக் கடல்போன்ற. (கீழ் சரணாகதி கத்யத்தில் இந்த சூர்ணிகையே விளியாக வந்திருக்கின்றது. வியாக்கியான விரிவு அங்கே காணத்தக்கது.)

பரப்ரஹ்ம பூதம் புருஷோத்தமம்—பரப்ரஹ்ம சப்தத்தாலும் புருஷோத்தம சப்தத்தாலும் வேதாந்தங்களிலே ப்ரஸித்தனான.

ஸ்ரீரங்கசாயிநம்—திருவரங்கம் பெரிய கோயிலிலே அஸ்மதாதிகளும் கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி கண்வளர்ந்தருளுகிற.

அஸ்மத் ஸ்வாமிநம் பரிபூர்ணம் பகவந்தம்—எமக்கு ஸ்வாமியாய் ஒன்றிலுங்குறைவில்லாத எம்பெருமானை. (இதற்கு அநுபூய என்கிற ல்யப்போடே அந்வயம்.

ப்ரபுத்த நித்ய நியாம்ய நித்ய தாஸ்யைகரஸ ஆத்மஸ்வபாவ: அஹம்—நித்ய நியாம்யமாய் நித்ய தாஸ்யைகரஸமான ஆத்ம ஸ்வபாவத்தை நன்கு அறிந்துகொண்டவனான அடியேன். ப்ரபுத்த என்றது—நன்றாக அறியப்பட்ட என்றபடி. நித்ய நியாம்யமாயிருக்கிறபடியும் நித்ய தாஸ்யைகரஸமாயிருக்கிறபடியுமாகிற தன்மை நன்கறியப்பட்டதாகச் சொன்னாராயிற்று. ஸ்வாதீநஸ்வார்த்த கர்த்ருத்வபோக்த்ருத்வப்ரமமில்லாதபடி அறியப்படுகையே நன்கு அறியப்படுகையாம். இவ்வாத்மா எம்பெருமானொருவனுக்கே நியாம்யனும் தாஸனுமானவன் என்று நன்றாக அறிந்து கொண்ட நான் என்றதாயிற்று.

ததேகாநுபவ: ததேகப்ரிய:—பகவத் விஷயமொன்றே ஞானத்திற்கும் பக்திக்கும் விஷயமாகப் பெற்றவனாய்.

விசததமாநுபவேந நிரந்தரமநுபூய—மிகவும் விசதமாக இடைவீடின்றி யநுபவித்து,

தததநுபவஜநித அநவதிகாதிசய ப்ரீதிகாரித அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதிரூப நித்ய கிங்கர:, பவாநி—அவ்வநுபவத்தினால் விளைவிக்கப்பட்ட மிகச் சிறந்த வுகப்பினால் செய்விக்கப்பட்ட ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களிலும் ஊற்றத்தோடு கூடியிருக்கையாகிற நித்ய கைங்கரியத்திலே நிரதனாகக் கடவேன்.

சேஷதைகரதி: என்பது பஹுவ்ரீஹியாகி நித்ய கிங்கரனுக்கு விசேஷணமாகிறது. அசேஷமான அடிமைகளிலும் நன்கு ஈடுபட்ட நித்ய கிங்கரனாக ஆகக்கடவேனென்றபடி. ஆக இவ்வளவும் த்வயத்தில் உபேயத்திலே நோக்கான உத்தரகண்டம் விவரிக்கப்பட்டதாயிற்று. ... ... (1)

இனி உபாயத்தில் நோக்கான பூர்வகண்டத்தை விவரிக்கப் புகுந்து, அதில் உத்தம புருஷனில் விவக்ஷிதமான ஆகிஞ்சந்யமாகிற ப்ரபத்தியதிகார விசேஷத்தையும் கார்ப்பண்யமாகிற அங்கத்தையும் விவரிக்கிறார் ஸ்வாத்ம நித்யநியாம்ய........என்று தொடங்கி இரண்டாவது சூர்ணையினால்.

(மூலம்.) 2. **ஸ்வாத்ம நித்ய நியாம்ய நித்ய தாஸ்யைகரஸ ஆத்மஸ்வபாவாநுஸந்தாநபூர்வக பகவதநவதிகாதிசய ஸ்வாம்யாத்யகில குணகணாநுபவ ஜநித அநவதிகாதிசய ப்ரீதிகாரித அசேஷாவஸ்தோசித அசேஷ சேஷதைகரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபாய (பூத) பக்தி ததுபாய ஸம்யக் ஜ்ஞாந ததுபாய ஸமீசீந க்ரியா தததநுகுண ஸாத்விகதாஸ்திக்யாதி ஸமஸ்தாத்ம குண விஹீந: —**

ஸ்வாத்ம நித்ய நியாம்ய=அடியேன் எப்பொழுதும் நியமிக்கத் தகுந்தவனாயிருக்கை யென்ன,

நித்யதாஸ்ய—எப்பொழுதும் அடிமை செய்து கொண்டேயிருக்கை யென்ன,

ஏகரஸ—ஆகிய இவற்றையே ஸாரமாகவுடைய,

ஆத்ம ஸ்வபாவ அநுஸந்தான பூர்வக—ஸ்வஸ்வபாவத்தையநுஸந்தித்து அதனாலுண்டான, பகவத் அநவதிகாதிசய ஸ்வாம்யாதி

அகில குணகணுநுபவஜநித — எப்போதும் தனக்கே நியமிக்கத் தகுந்தவனுயிருக்கை யென்ன, நித்ய கைங்கர்யத்திலேயே ஊன்றி யிருக்கை யென்ன, இப்படிப்பட்ட ஸ்வஸ்வபாவத்தை யநுஸந்தித்துக் கொண்டு, எம்பெருமானது சிறந்த ஸ்வாமித்வம் முதலிய ஸகல குண கணங்களையும் அநுபவிப்பதனாலுண்டான, ப்ரீதிகாரித — மிகுந்த வுகப்பினால் செய்விக்கப்பட்ட, அசேஷாவஸ்தோசித அசேஷ சேஷதை கரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபாயபக்தி— ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களிலும் ப்ராவண்யங் கொண்டிருக்கையாகிற நித்ய கைங்கர்யத்திற்கு உபாயமான பக்தி யென்ன, ததுபாய ஸம்யக் ஞாந—அதற்கு முபாயமான பரிபக்வ ஜ்ஞானமென்ன, ததுபாய, ஸமீசீந க்ரியா — அதற்கு முபாயமான நல்ல கர்மயோகமென்ன, ததநுகுண ஸாத்விகதா ஆஸ்திக்யாதி ஸமஸ்த ஆத்மகுண விஹீந:— அதற்கு முறுப்பான ஸாத்விகத்வம் ஆஸ்திக்யம் முதலான ஆத்ம குணங்களென்ன ஆகிய இவை சிறிதுமில்லாதவனாய்,

துருத்தராநந்த தத்விபர்யய ஜ்ஞாந க்ரியாநுகுண அநாதி பாபவாஸநா மஹார்ணவாந்தர் நிமக்ந: — கீழ்ச்சொன்ன ஸம்யக் ஜ்ஞாந ஸமீசீந க்ரியைகளுக்கு மாறான விபரீத ஜ்ஞாந விபரீத க்ரியை களுக்கு உறுப்பான அநாதி பாபவாஸனையாகிற கடக்க முடியாத பெருங் கடலினுள்ளே மூழ்கிக் கிடப்பவனாய்,

திலதைலவத் தாருவஹ்நிவத் துர்விவேச த்ரிகுண க்ஷண க்ஷரண ஸ்வபாவ அசேதந ப்ரக்ருதி வ்யாப்திரூப துரத்யய பகவந்மாயா திரோஹித ஸ்வப்ரகாச:— எள்ளில் எண்ணெய் போலவும், கட்டையில் நெருப்புப் போலவும் ஸாதாரணமாகப் பிரிக்க முடியாததாய் ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களையும் ஸததபரிணமித்வத்தையும் இயல்வாக வுடைத்தாய் ஜடரூபமான ப்ரக்ருதியிலே அவர்ஜநீயமாயிருந்துள்ள ஸம்பந்தத்தை யுடைத்தாய் கடக்கவரிதான பகவந்மாயையினால் மறைபட்ட ஸ்வப்ரகாசத்தையுடையனாய்.

அநாத்யவித்யா ஸஞ்சித அநந்த அசக்ய விஸ்ரம்ஸந கர்மபாச ப்ரக்ரதித:— அநாதியான அஜ்ஞாநத்தாலே திரட்டப்பட்டதாய் எண்ணிறந்ததாய் ஒருவராலும் அவிழ்க்க முடியாதபடி யிருந்துள்ள புண்ய பாபரூப கர்மமாகிற கயிற்றாலே கட்டுண்டவனாய்,

அநாகத அநந்த கால ஸமீக்ஷயாபி அத்ருஷ்ட ஸந்தாரோபாய: அஹம்—எத்தனை காலம் பார்த்தாலும் ஸம்ஸார நிஸ்தரணோபாயம் இன்னதென்று அறியப்பெறாதிருந்துள்ளவனான அடியேன்,

நிகில ஜந்து ஜாத சரண்ய!— ஸமஸ்த ப்ராணி ஸமூஹங்களுக்

 கும் சரண்யனானவனே!

ஸ்ரீமந்நாராயண !—பெரிய பிராட்டியாரோடே கூடியிருந்துள்ள நாராயணனே !

தவ சரணாரவிந்த யுகளம் சரணம் ப்ரபத்யே—உனது திருவடித் தாமரையிணையை உபாயமாகப் பற்றுகிறேன்.

(மூலம்) 3 ஏவமவஸ்தித்ஸ்யாபி அர்த்தித்வ மாத்ரேண பரமகாருணிகோ பகவாந் ஸ்வாநுபவ ப்ரீத்யோபநீத — ஐகாந்திகாத்யந்திக நித்ய கைங்கர்யைக ரதிரூப நித்ய தாஸ்யம் தாஸ்யதீதி விச்வாஸபூர்வகம் பகவந்தம் நித்ய கிங்கரதாம ப்ரார்த்தயே.

ஏவம் அவஸ்திதஸ்யாபி - கீழ்ச் சூர்ணையில் விரிவாகச் சொன்னபடியே ஆகிஞ்சந்யாதிகளே வடிவெடுத்திருக்கின்றவெனக்கும்,

பரமகாருணிக: பகவாந்—பேரருளாளனான எம்பெருமான்,

அர்த்தித்வ மாத்ரேண-என் பக்கலிலுள்ள இரப்பையே கொண்டு,

ஸ்வாநுபவப்ரீத்யா உபநீத ஐகாந்திகாத்யந்திக நித்ய கைங்கர்யைகரதிரூப நித்யதாஸ்யம் தாஸ்யதி இதி விச்வாஸ பூர்வகம்—தன்னையநுபவிக்கும் உகப்பினாலுண்டாவதாய் ஒருபடிப் பட்டதாய் முடிவின்றிக்கேயிருந்துள்ள அடிமையிலேயே ஊற்ற முற்றிருக்கையாகிற நித்ய கைங்கர்யத்தையருளப்போகிறானென்கிற நம்பிக்கையுடன்,

பகவந்தம் நித்ய கிங்கரதாம் ப்ரார்த்தயே — எம்பெருமானிடத்தில் நித்ய கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறேன். ... ... (3)

(மூலம்) 4. * தவாநுபூதிஸம்பூதப்ரீதிகாரித தாஸதாம்,
தேஹி மே க்ருபயா நாத ! ந ஜாநே கதிமந்யதா.

(மூலம்) 5. ஸர்வாவஸ்தோசிதாசேஷ சேஷதைகரதிஸ் தவ,
பவேயம் புண்டரீகாக்ஷ த்வமேவைவம குருஷ்வ மாம் *

கீழே தம்முடைய பாசுரத்தாலே பேற்றை ப்ரார்த்தித்தார்; இப்போது, இதிஹாஸ ச்லோகமிரண்டு கொண்டு ப்ரார்த்திக்கிறார். இவ்விரண்டு ச்லோகங்களுக்கும் இதிஹாஸ புராணங்களிலே ஆகரம் கண்டு கொள்வது.

எம்பெருமானே ! உன்னையநுபவித்து அதனாலுண்டான வுகப்பினால் விளையும் கைங்கரியத்தைப் பரமக்ருபையோடு அடியேனுக்குத் தந்தருள வேணும். வேறு புகலறிகின்றிலேன். செந்தாமரைக்

கண்ணனே! ஸர்வாவஸ்தைகளிலும் உனக்குச் செய்யக்கூடிய ஸகலவித கைங்கர்யங்களிலும் அடியேன் ருசியுடையேனும்படி நீதானே செய்தருளவேணும் என்பது இவ்விரண்டு ச்லோகங்களின் கருத்து. (4,5)

(மூலம்.) 6. ஏவம்பூத தத்வயாதாத்ம்யாவபோத ததிச்சாரஹிதஸ்யாபி ஏதத்துச்சாரணமாத்ராவலம்பநேந உச்யமாநார்த்த பரமார்த்த நிஷ்டம் மே மநஸ் த்வமேவ அத்யைவ காரய.

ஸ்ரீரங்கநாதனே! உன்னுடைய திருவருளால் அடியேன் அதிகார பூர்த்தி பெற்றவனாக நினைத்திருக்கிறேன்; ஒருகால் அப்படிப்பட்ட அதிகார பூர்த்தி இல்லையேயானாலும் அடியேனிடத்தில் கிடைக்கின்ற உக்தி வ்யாஜத்தை கொண்டு நீயே சேஷ பூரணம் செய்து கொள்ள வேணுமென்று பிரார்த்திப்பது இந்த சூர்ணையின் கருத்து.

ஏவம்பூத தத்வயாதாத்ம்யாவபோத ததிச்சா ரஹிதஸ்யாபி— இப்படி மிகச் சிறந்த புருஷார்த்தத்தின் உண்மை நிலையை யறிந்து கொள்வதும் அறிந்துகொள்ள விருப்பமும் இல்லாதவனாயிருந்தாலும்,

ஏதத்துச்சாரண மாத்ர அவலம்பநேந — என் வாய்மொழி தன்னையே கொண்டு, மே மந: — என்னுடைய உள்ளத்தை, உச்யமாநார்த்த பரமார்த்த நிஷ்டம் — உபாயோபேயங்களின் உண்மை யுணர்ச்சி பெற்றதாக,

த்வம் ஏவ அத்ய ஏவ காரய — நீ தானே இப்போதே செய்வித்தருளவேணும்.

குரு என்னாதே காரய என்றது * அதுவு மவனதின்னருளே * என்ற பரமார்த்தத்தைக் காட்டுதற்காம். ... ... (6)

(மூலம்) 7. அபாரகருணாம்புதே! — கரை கடந்த கருணைக்கடலே!,

அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்ய! குணதோஷ நிருபணம் பண்ண மாட்டாமே ஸகல ஜகத்துக்கும் சரண்யனானவனே!,

ப்ரணத ஆர்த்திஹர! — அடி பணிந்தாருடைய ஆர்த்திகளைப் போக்குமவனே!

ஆச்ரித வாத்ஸல்ய ஏக மஹோததே! — அடியார் பக்கலுண்டான வாத்ஸல்யத்திற்கு முக்கியமான மஹாஸமுத்ரமே!

அநவரத விதித நிகிலபூத ஜாத யாதாத்ம்ய! — ஸகலபூத ஸமூஹங்களினுடையவும் உண்மையை எப்போதும் அறிந்துள்ளவனே!

ஸத்யகாம! — அவாப்த ஸமஸ்த காமனே!

ஸத்யஸங்கல்ப! — நினைத்தது செய்து தலைக்கட்ட வல்லவனே!

ஆபத்ஸக — ஆபத் பந்துவானவனே!,

காகுத்ஸ்த்த! ககுத்ஸ்தவம்சப்ரஸூதனானவனே!,

ஸ்ரீமந்நாராயண! — திருமாலே!,

புருஷோத்தம! — பரம புருஷனே!,

ஸ்ரீரங்கநாத! — ஸ்ரீரங்கநாதனே!,

மம நாத! — எம்பெருமானே!,

தே நம: அஸ்து — தேவரீர்க்கே சேஷமான இவ்வாத்ம வஸ்து தேவரீர்க்கே போக்யமாய்த் தலைக்கட்டவேணுமென்கை. ... (7)

ஸ்ரீரங்க கத்யமென்கிற மிதகத்யம் முற்றுப்பெற்றது

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

கத்யத்ரயத்தில் மூன்றுவது கத்யம்

ஸ்ரீ வைகுண்ட கத்யம்

அவதாரிகை

எம்பெருமானார் தம்முடைய திருவுள்ளத்தில் அறுதியிட்ட அர்த்தம் பனைநிழல்போலே தம்மொருவரளவிலே நின்றிராமே கற்பகக்காவின் நிழல்போலே உலகுக்கெல்லாம் பயன்படவேண்டுமென்று கருதி யருளினவராதலால் * ஊரும் நாடுமுலகமும் தம்மைப் போலேயாம்படி உபாயோபேயங்களை நிஷ்கர்ஷித்தருளிச் செய்து பரோபதேசத்தில் இழிகிறார் — இந்த வைகுண்டகத்ய முகத்தாலே. பெரியகத்யமான சரணாகதி கத்யத்திலே பொதுவாக எம்பெருமானை நோக்கின ஸ்வப்ரார்த்தனையாக அருளிச்செய்தார். சிறிய கத்யமான ஸ்ரீரங்ககத்யத்திலே, அந்த ப்ரார்த்தனையை ஸௌலப்யத்துக்கு எல்லை நிலமான பெரிய பெருமாள் விஷயமாக அருளிச்செய்தார். இதில் பரத்வத்துக்கு எல்லை நிலமான ஸ்ரீவைகுண்டநாதன் விஷயமாக,

பிறரை நோக்கி கர்த்தவ்யோபதேசம் பண்ணி யருளுகிறார். இதில் உபாயமான அம்சத்தைச் சுருங்க அருளிச்செய்து உபேயமான அம்சத்தை மிகவும் பரக்க அருளிச்செய்கிறார். இந்த கத்யம் ஆறு சூர்ணையாயிருக்கும். அவற்றின் தாத்பர்ய ஸாரம் வருமாறு:

சூர்ணை — 1. எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி வைலக்ஷண்யத்தையும் தன்னுடைய நிலைமையையும் அநுஸந்தித்து அப்பெருமானுடைய ஸௌசீல்யம் முதலிய திருக்குணங்களை பற்றாசாக அவன் திருவடிகளிலே சரணம் புகவேணுமென்கிறது.

2. பேற்றுக்கு ஒருகால் அநுஸந்திக்கையே போதுமாயிருக்கச் செய்தேயும் நெஞ்சு வேறொன்றில் செல்லாமைக்கும் காலக்ஷேபத் துக்குமாக நித்யாநுஸந்தானம் பண்ணவேணுமென்கிறது.

3. இவ்வதிகாரி அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்று ப்ரக்ருதி மண்டலத்தைக் கடக்கும் படியையும், கடந்து சென்று புகுகிற நித்ய விபூதியின் வைபவத்தையும் அந்த தேச விசேஷத்தினுடைய பண்பை யும் அங்குள்ள அலங்காரங்களையும் அப்படிப்பட்ட விடத்தில் நாச்சி மாரும் ஸர்வேச்வரனுமாயெழுந்தருளியிருக்கு மிருப்பையும் அந்த நாச்சிமார்க்கு அநுபாவ்யமான வடிவழகையும் திவ்யாபரணச் சேர்த்தி யையும் திவ்யாயுத வர்க்கத்தையும் வழுவிலா வடிமை செய்யும் நித்யஸூரி பரிஷத்தையும் அவர்களுடைய நித்ய கைங்கர்யத்திற்கு இலக்காகி யெழுந்தருளியிருக்கு மிருப்பையும் அநுஸந்தித்து இப் பேற்றை நாம் எப்போது பெறக்கடவோமென்று பாரித்து அந்த பாரிப் பின்படியே சென்று கிட்டி 'பெருமானே! என்னால் நித்ய கைங்கர்யம் கொண்டருள வேணும்' என்று ப்ரார்த்தித்து ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுவானென்கிறது.

4. ஸ்வாபேக்ஷிதத்தின்படி எம்பெருமானாலே ஸ்வீகரிக்கப் பட்டவனாய்க் கொண்டு அநுகூல வ்ருத்தியைப் பண்ணிக்கொண் டிருப்பனென்கிறது.

5. இப்புருஷார்த்தத்தை நெடுங்கால மிழந்திருந்த இழவுதீர அந்யபரதையற்று இமையாத கண்ணினராய்க் கொண்டு ஸதா தர்சநம் பண்ணிக்கொண்டிருக்கும்படியைச் சொல்லுகிறது.

6. இப்படி வந்து சேர்ந்த விவனை எம்பெருமான் வினவிக் குளிரக் கடாக்ஷித்துத் திருவடிகளைத் தலைமேலே வைக்க, அடிசூடுமரசு பெற்று நித்யாநந்தசாலியாயிருக்கு மிருப்பைச் சொல்லுகிறது. ... *

ஸ்ரீ வைகுண்ட கத்ய தாத்பர்ய ஸாரம் முற்றிற்று.

(மூலம்.) யாமுநார்ய ஸுதாம்போதி மவகாஹ்ய யதாமதி,
ஆதாய பக்தியோகாக்ய்யம் ரத்நம் ஸந்தர்சயாம்யஹம்.

(கருத்து) ஆளவந்தாராகிற அமுதக் கடலிலே படிந்து குடைந்தாடி பக்தியோகமாகிற ரத்நத்தை யதாமதி யெடுத்து அன்பர்களுக்கு அநுபவிக்கக் கொடுக்கிறேனென்கை. இங்கு பக்தியோக மென்றது, ஸாத்ய பக்தியான ப்ரபத்தியையே சொன்னபடியாம். இதில் மேலே "த்த் பாதாம்புஜ த்வய ப்ரபத்தே ரந்யத் ந மே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:" என்றருளிச் செய்திருப்பதோடு பொருந்துகைக்காக.

ஆளவந்தாருடைய திருவருளடியாகக் [illegible] அர்த்தங்களை அன்பர்களுக்கு நித்யாநுஸந்தேயமாக வெளியிடுகிறேனென்பது இந்த ச்லோகத்தின் தேர்ந்த கருத்து. ... ... *

ஸ்ரீவைகுண்ட கத்யாரம்பம்

1. ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம் — மூன்று வகைப்பட்ட சேதநாசேதநங்களின் ஸ்வரூபமென்ன ஸ்திதியென்ன ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளென்ன இவை தன்னதீனமாக இருக்கப்பெற்ற. (இதற்கு விசேஷ விவரணம் பக்கம் 46—ல் காண்க.)

க்லேச கர்மாதி அசேஷ தோஷ அஸம்ஸ்ப்ருஷ்டம் — அவித்யை முதலான ஐந்து க்லேசங்களென்ன, புண்ய பாப ரூபமான கருமமென்ன இவை முதலான எவ்வித தோஷ ஸம்பந்தமுமில்லாத. (பக்கம் 47 காண்க.)

ஸ்வாபாவிக அநவதிகாதிசய ஜ்ஞாநபல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜ: ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம் — ஸ்வாபாவிகங்களாயும் * உயர்வறவுயர்ந்தவையாயுமிருக்கிற ஷாட்குண்யம் முதலிய திருக்குணத் திரள்களுக்குக் கடல் போன்ற.

பரமபுருஷம் பகவந்தம் நாராயணம் — புருஷோத்தமனாய் ஷாட்குண்ய பரிபூர்ணனான ஸ்ரீமந் நாராயணனை;

ஸ்வாமித்வேந ஸுஹ்ருத்த்வேந குருத்வேந ச பரிக்ருஹ்ய — சேஷியாகவும் நேசனாகவும் ஆசார்யனாகவும் ஏற்றுக்கொண்டு.

ஐகாந்திக ஆத்யந்திக தத்பாதாம்புஜத்வய பரிசர்யைக மநோரத: — எப்போதும் அப்பெருமானுடைய திருவடித்தாமரை யிணைகளைப் பற்றி [illegible] செய்யவேணுமென்கிற பாரிப்பை [illegible]

தத் ப்ராப்தயே ச தத்பாதாம்புஜத்வய ப்ரபத்தேரந்யத் நமே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:—அந்த கைங்கர்யத்தைப் பெறுவதற்கு கல்பகோடி ஸஹஸ்ரமாயினும் அப்பெருமானுடைய திருவடித் தாமரையிணைகளையே நம்பியிருப்பதிற் காட்டிலும் வேறொன்று எனக்கு உபாயமாக இல்லையென்று எண்ணினவனாய்,

அகிலஸத்வதயைக ஸாகரஸ்ய — எல்லா ப்ராணிகளிடத்தும் கருணைக்கடலாயும்,

அநாலோசித குணாகுண அகண்ட ஜநாநுகூல அமர்யாத சீலவத:—குண தோஷங்களில் ஆராய்ச்சியின்றிக்கே ஸகல ஜநங்களுக்கும் அநுகூலமாயிருக்கிற எல்லை கடந்த சீல குணத்தையுடையவனாயும்,

ஸ்வாபாவிகாநவதிகாதிசய குணவத்தயா தேவதிர்யங் மனுஷ்யாதி அகிலஜந ஹ்ருதயாநந்தநஸ்ய — இயற்கையாகவே உயர்வற வுயர்நலமுடையவனாகையாலே தேவர்கள் திர்யக்குகள் மனிசர் முதலான ஸகலப்ராணிகளுடையவும் உள்ளத்தை உகப்பிக்குமவனாயும்.

ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே:—அடியார்கள் திறத்து வாத்ஸல்யக் கடலாயும்.

பக்த ஜந ஸம்ச்லேஷைக போகஸ்ய — பக்த ஜனங்களுடன் கலந்து பரிமாறுவதொன்றையே தனக்குப் பேரின்பமாகக் கொண்டவனாயும்,

நித்ய ஜ்ஞாநக்ரியைச்வர்ய போகஸாமக்ரீஸம்ருத்தஸ்ய — நித்யமும் ஸகல விஷயகமாயுள்ள ஞானமென்ன, தனக்கு லீலையாயிருக்கிற க்ரியைகளென்ன ஐச்வர்யமென்ன இவைபோல்வனவான போகஸாமக்ரிகள் நிரம்பியிருக்கப் பெற்றவனாயும்,

மஹாவிபூதே:—மிகச் சிறந்த விபூதியையுடையனாயுமிருக்கிற,

தஸ்யைவ பகவதோ நாராயணஸ்ய—அந்த எம்பெருமானுடையவே,

ஸ்ரீமத் சரணாரவிந்தயுகளம் — திருவடித்தாமரையிணையை,

அநந்யாத்மஸஞ்ஜீவநேந தத்கத ஸர்வபாவேந — ஆத்மோஜ்ஜீவனம் இவ்வொழிய வேறொன்றில்லை யென்றிருக்கிற ஐகாந்திகமான நினைவோடே,

சரணம் அநுவ்ரஜேத் — புருஷார்த்தத்துக்கு ஸாதனம் இவனே யென்று அத்யவஸாயங் கொள்ளக் கடவனென்றபடி.

இப்படி ஒருகால் சரணம் புகுந்து விடுமித்தனையோவென்னில், பேற்றுக்கு ஒருகால் அமைந்திருந்தாலும் காலக்ஷேபத்திற்கும் இனிமையாலே விடவொண்ணாமைக்குமாக இவ்வத்யவஸாயம் நாள்தோறும் இடையறாது சொல்லவேணுமென்கிறது மேல்—

2. ததச்ச ப்ரத்யஹம் ஆத்மோஜ்ஜீவநாய ஏவம் அநுஸ்மரேத்—பிற்பாடும் நாடோறும் தன்னை உஜ்ஜீவனம் செய்து கொள்வதற்காக இங்ஙனே அநுஸ்யூதமாக ஸ்மரிக்க வேண்டும். [அது மேலே சொல்லுகிறது.]

(குறிப்பு :—இது மிகப் பெரிய சூர்ணை ; முன்னமே சேர்க்கப்பட்டிருக்கிற மூலத்திலும், மேலே விவரணத்தில் காட்டுகிற ப்ரதீகங்களிலும் பூர்த்தியான சூர்ணையை அநுஸந்திப்பது. இந்த சூர்ணையில் விசேஷண பதங்களும் விசேஷ்ய பதங்களும் பல பல வருகின்றன. ஆங்காங்குள்ள விசேஷணங்கள் எந்த விசேஷ்யத்தில் முடிவு பெறுகின்றனவென்பது சிறிது சிரமப்பட்டே அறிய வேண்டியதாகும். அதற்கு அநுகூலமாக ஆங்காங்கு நாம் கீழே குறிப்பிட்டுள்ள ரேகையினால் நன்கு தெளிவு பெறுக.)

3. சதுர்தச புவநாத்மகம் அண்டம் தசகுணிதோத்தரஞ்ச ஆவரணஸப்தகம் ஸமஸ்தம் கார்ய காரண ஜாதமதீத்ய—பதினான்கு லோகங்கள் மலிந்த அண்டத்தையும், மேன்மேலும் பதின்மடங்கு அதிகமாயிருக்கிற ஸப்தாவரணங்களையும் மற்றுமுள்ள ஸமஸ்த கார்ய காரண வர்க்கங்களையும் கடந்து அப்பால் விளங்குகின்ற,

பரமவ்யோமசப்தாபிதேயே — பரமாகாச மென்னுஞ் சொல்லால் சொல்லப்படுகிற,

ப்ரஹ்மாதீநாம் வாங்மநஸ அகோசரே — பிரமன் முதலானோருடையவும் வாக்குக்கும் நெஞ்சுக்கும் எட்டாத,

ஸ்ரீமதி வைகுண்டே திவ்ய லோகே — ஸ்ரீவைகுண்ட திவ்ய லோகத்தில்,

ஸநக விதி சிவாதிபிரபி அசிந்த்யஸ்வபாவ ஐச்வர்யை: நித்யஸித்தை: அநந்தை: பகவதாநுகூல்யைக போகை: திவ்ய புருஷை: மஹாத்மபி: ஆபூரிதே—(பரஹ்மபாவனையில் தலைநின்ற) ஸநகாதிகளுக்கும் (கர்மபாவனையில் தலைநின்ற) ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் நினைக்கவொண்ணாதபடியான ப்ரகார வைபவங்களையுடையராய் எப்போதும் பகவதநுபவநிரதராய் எண்ணிறந்தவர்களாய் எம்பெருமான் பக்கலில் பரிவே வடிவெடுத்தவர்களாய் பூமியில் கால்பாவாதவர்களான மஹாத்மாக்களினால் மிடைந்ததாய்,

தேஷாமபி இயத் பரிமாணம் இயதைச்வர்யம் ஈத்ருச ஸ்வபாவமிதி பரிச்சேத்தும் அயோக்யே — அந்த மஹாத்மாக்களுக்கும் அளவிட வொண்ணாத பரிமாணமென்ன ஐச்வர்யமென்ன ஸ்வபாவமென்ன இவற்றை யுடைத்தாய்,

திவ்ய ஆவரண சத ஸஹஸ்ர ஆவ்ருதே—லோக விலக்ஷண மான ஆயிரந் திருமதிள்களை யுடைத்தாய்,

திவ்ய கல்பகதரு உபசோபிதே — அப்ராக்ருதமான கற்பகச் சோலையாலே போக்யமாய்,

திவ்யோத்யாந சத ஸஹஸ்ர கோடிபி: ஆவ்ருதே — அனேக மாயிரம் திருத்தோப்புக்களாலே சூழப்பட்டதாய்,

அதிப்ரமாணே திவ்ய ஆயதநே—அகலமும் நீளமும் அளவிட வொண்ணாததான திருக்கோயிலிலே,

கஸ்மிம்ச்சித் விசித்ர திவ்ய ரத்நமய திவ்ய ஆஸ்தாநமண்டபே— பலவகைப்பட்ட திவ்ய ரத்னங்களாலே ப்ரசுரமாயிருப்பதான வொரு திருவோலக்க மண்டபத்திலே,

திவ்ய ரத்நஸ்தம்ப சத ஸஹஸ்ரகோடிபி: உபசோபிதே— அனேகமாயிரம் மாணிக்கத் தூண்களாலே விளக்கமுற்றதாய்,

திவ்ய நாநா ரத்ந க்ருத ஸ்தல விசித்ரிதே — அப்ராக்ருதமான பலவகைப்பட்ட மாணிக்கங்கள் செறிந்த தரையை யுடைத்தாய்,

திவ்ய அலங்கார அலங்க்ருதே — (மேல்கட்டி திருத்திரை முதலான) திவ்யாலங்காரங்களினலழகு பெற்றதாய்,

பரித: பதிதை: பதமாநை: பாதபஸ்தைச் ச நாநா கந்தவர்ணை: திவ்ய புஷ்பை: சோபமாநை: திவ்ய புஷ்ப உபவநை: உபசோபிதே— சுற்றிலும் உதிர்ந்தவைகளும் உதிர்ந்துகொண்டிருப்பவைகளும் மரங் களிலே நிற்பவைகளும் பலவகைப்பட்ட பரிமளத்தையும் நிறத்தையு முடையவைகளுமான திவ்ய புஷ்பங்களாலே விளங்காநின்ற பைம்பூஞ் சோலைகளாலே சோபிதமாய்,

* ஸங்கீர்ண பாரிஜாதாதி கல்ப த்ருமஉபசோபிதை: — ஒன்றோ டொன்று கலசியிருக்கிற பாரிஜாதம் முதலான கல்பவிருக்ஷங்களினால் விளங்கிக் கொண்டிருப்பவைகளும்,

(* இது முதலான த்ருதீயாந்த விசேஷணங்களுக்கு விசேஷ்யம் – திவ்யோத்யாந சதஸஹஸ்ரை: என்பது.)

15 அஸங்கீர்ணைச் ச கைச் சித்—ஒன்றோடொன்று சேர்ந்திராத சில,

அந்தஸ்ஸ்த புஷ்பரத்நாதி நிர்மித திவ்ய லீலா மண்டப சத ஸஹஸ்ரோப சோபிதை:— உள்ளே யிருக்கின்ற— புஷ்பம் ரத்நம் முதலியவற்றால் அமைக்கப்பட்ட அநேகமாயிரம் திவ்ய லீலா மண்டபங்களினால் விளங்கிக் கொண்டிருப்பவைகளும்,

ஸர்வதா அநுபூயமாநை ரபி அபூர்வவத் ஆச்சர்யம் ஆவஹத்பி:—எப்போதுமநுபவிக்கப்படா நிற்கவும் அபூர்வ வஸ்துபோலே ஆச்சர்யத்தை விளைவிப்பவைகளும்,

க்ரீடாசைலசதஸஹஸ்ரை ரலங்க்ருதை:— அநேகமாயிரம் விளையாட்டுக் குன்றுகளாலே அலங்கரிக்கப்பட்டவைகளும்,

கைச்சித் நாராயண திவ்யலீலா அஸாதாரணை: கைச்சித் பத்மவநாலயா திவ்யலீலா அஸாதாரணை: ஸாதாரணை: கைச்சித் கோமலகூஜிதை : சுகசாரிகாமயூர கோகிலாதி [redacted] ஸ்ரீமோத்யாந சதஸஹஸ்ரை: ஆவ்ருதே— எம்பெருமானுடைய லீலைக்கே உரியவைகள் சிலவும், பிராட்டியாருடைய லீலைக்கே உரியவைகள் சிலவும், இருவருடைய லீலைக்குமுரியவைகள் சிலவுமாய் அழகிய குரலையுடைய கிளிகள் பூவைகள் மயில்கள் குயில்கள் முதலான பறவைகளின் கோலாஹலம் பொருந்திய திவ்யமான நூறாயிரம் பொழில்களாலே சூழப்பட்டதாய்,

* மணிமுக்தாப்ரவாலக்ருத ஸோபாநை:— ரத்னம் முத்து பவளம் முதலியவற்றால் செய்யப்பட்ட படிகளையுடையனவாய், (* இது முதலான த்ருதீயாந்த விசேஷணங்களுக்கு விசேஷ்யம் — ‘திவ்ய ஸௌகந்திக வாபீசதஸஹஸ்ரை:’ என்பது.)

திவ்ய அமல அம்ருத ரஸோதகை:— அப்ராக்ருதமும் நிர்மலமும் அம்ருதம்போலே ரஸவத்துமான நீர்ப்பரப்பை யுடையனவாய்,

அதிரமணீய தர்சநை: அதிமநோஹர மதுர ஸ்வரை: திவ்யாண்டஜவரை: ஆகுலை:— கண்ணுக்கழகியவைகளும் பேச்சினிமை யுடையவைகளுமான அப்ராக்ருத பக்ஷிகளாலே வ்யாப்தங்களாய்,

அந்தஸ்ஸ்த முக்தாமய திவ்ய க்ரீடாஸ்தாந உபசோபிதை :— உள்ளேயுண்டான முத்துக்களாலான லீலாஸ்தானங்களாலே சோபிதங்களாய்,

திவ்ய ராஜஹம்ஸாவலீ விராஜிதை:— சுத்த ஸத்வமயமான ராஜஹம்ஸங்கள் விளங்கிக் கொண்டிருப்பவைகளான,

திவ்ய ஸௌகந்திகவாபீ சத ஸஹஸ்ரை: ஆவ்ருதே— அப்ராக்ருதமான செங்கழுநீரோடைகள் பலவாயிரம் நிறைந்துள்ளதாய்,

அந்தஸ்ஸ்த புஷ்பரத்நாதி நிர்மித திவ்ய லீலா மண்டப சத ஸஹஸ்ரோப சோபிதை:— உள்ளே யிருக்கின்ற — புஷ்பம் ரத்நம் முதலியவற்றால் அமைக்கப்பட்ட அநேகமாயிரம் திவ்ய லீலா மண்டபங்களினால் விளங்கிக் கொண்டிருப்பவைகளும்,

ஸர்வதா அநுபூயமாநை ரபி அபூர்வவத் ஆச்சர்யம் ஆவஹத்பி:—எப்போதுமநுபவிக்கப்படா நிற்கவும் அபூர்வ வஸ்துபோலே ஆச்சர்யத்தை விளைவிப்பவைகளும்,

க்ரீடாசைலசதஸஹஸ்ரை ரலங்க்ருதை:— அநேகமாயிரம் விளையாட்டுக் குன்றுகளாலே அலங்கரிக்கப்பட்டவைகளும்,

கைச்சித் நாராயண திவ்யலீலா அஸாதாரணை: கைச்சித் பத்மவநாலயா திவ்யலீலா அஸாதாரணை: ஸாதாரணை: ச கைசசித் சுகசாரிகா மயூர கோகிலாதிபி: கோமலகூஜிதை: ஆகுலை: திவ்யோத்யாந சதஸஹஸ்ரை: ஆவ்ருதே — எம்பெருமானுடைய லீலைக்கே உரியவைகள் சிலவும், பிராட்டியாருடைய லீலைக்கே உரியவைகள் சிலவும், இருவருடைய லீலைக்குமுரியவைகள் சிலவுமாய் அழகிய குரலையுடைய கிளிகள் பூவைகள் மயில்கள் குயில்கள் முதலான பறவைகளின் கோலாஹலம் பொருந்திய திவ்யமான நூறாயிரம் பொழில்களாலே சூழப்பட்டதாய்,

* மணிமுக்தாப்ரவாலக்ருத ஸோபாநை:—ரத்னம் முத்து பவளம் முதலியவற்றால் செய்யப்பட்ட படிகளையுடையனவாய், (* இது முதலான த்ருதீயாந்த விசேஷணங்களுக்கு விசேஷ்யம் — ‘திவ்ய ஸௌகந்திக வாபீசதஸஹஸ்ரை:’ என்பது.)

திவ்ய அமல அம்ருதரஸோதகை:—அப்ராக்ருதமும் நிர்மலமும் அம்ருதம்போலே ரஸவத்துமான நீர்ப்பரப்பை யுடையனவாய்,

அதிரமணீய தர்சநை: அதிமநோஹர மதுர ஸ்வரை: திவ்யாண்டஜவரை: ஆகுலை:—கண்ணுக்கழகியவைகளும் பேச்சினிமையுடையவைகளுமான அப்ராக்ருத பக்ஷிகளாலே வ்யாப்தங்களாய்,

அந்தஸ்ஸ்த முக்தாமய திவ்ய க்ரீடாஸ்தாந உபசோபிதை:—உள்ளேயுண்டான முத்துக்களாலான லீலாஸ்தானங்களாலே சோபிதங்களாய்,

திவ்ய ராஜஹம்ஸாவலீ விராஜிதை:—சுத்த ஸத்வமயமான ராஜஹம்ஸங்கள் விளங்கிக் கொண்டிருப்பவைகளான,

திவ்ய ஸௌகந்திகவாபீ சத ஸஹஸ்ரை: ஆவ்ருதே—அப்ராக்ருதமான செங்கழுநீரோடைகள் பலவாயிரம் நிறைந்துள்ளதாய்,

நிரஸ்தாதிசய ஆநந்தைகரஸதயா ச ஆநந்த்யாச்ச ப்ரவிஷ்டாந் உந்மாதயத்பி: க்ரீடோத்தேசை: விராஜிதே — உயர்வறவுயர்ந்த ஆனந்தமே வடிவெடுத்திருக்கையாலும் அபரிச்சிந்நமாயிருக்கை யாலும் உள்புக்கவர்களை மயக்கவல்ல லீலாஸ்தானங்களாலே விளங்கா நிற்பதாய்,

தத்ர தத்ர க்ருத திவ்ய புஷ்ப பர்யங்க உபசோபிதே — அவ்வவ் விடங்களிலே பணைணப்பட்ட பூம்பள்ளிகள் விளங்கா நிற்பதாய்,

நாநா புஷ்ப ஆஸவ ஆஸ்வாத மத்த ப்ருங்க ஆவலீபி: உத்கீயமான திவ்ய காந்தர்வேண ஆபூரிதே—பலவகைப்பட்ட புஷ்பங்களிலுண்டான மதுவைப் பருகிக் களித்த வண்டுத் திரள்கள் பாடும் திவ்ய ஸங்கீதம் நிறைந்ததாய்,

சந்தன அகரு கர்ப்பூர திவ்யபுஷ்ப அவகாஹி மந்தாநில ஆஸேவ்யமாநே—சந்தனம் அகில் பச்சைக் கருப்பூரம் திவ்ய புஷ்பங்கள் ஆகிய இவற்றில் உட்புகுந்து அங்குள்ள பரிமளங்களைக் கொய்து கொண்டு வருகிற மந்தமாருதம் வீசப்பெற்றதாய்,

மத்யே திவ்ய புஷ்பஸஞ்சய விசித்ரிதே—இடையில் விடுபூக் களாலே சித்திரிக்கப்பட்டதான,

மஹதி திவ்ய யோக பர்யங்கே—பெரிய திருப்பள்ளிக்கட்டிலிலே,

அநந்த போகிநி— திருவனந்தாழ்வான் மீது.

ஸ்ரீமத் வைகுண்டைச்வர்யாதி திவ்யலோகம் விச்வம் ஆத்ம காந்த்யா ஆப்யாயயந்த்யா— ஸ்ரீவைகுண்டச் செல்வம் முதலிய திவ்ய லோகம் முழுவதையும் தனது ஒளியினால் விளங்கச் செய்து மகிழ்விப் பவளும்,

சேஷ சேஷாசநாதி ஸர்வ பரிஜநம் பகவத: தத்ததவஸ்தோசித பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயந்த்யா சீல ரூப குண விலாஸாதிபி: ஆத்மாநுரூபயா— திருவனந்தாழ்வான் ஸேநாபதியாழ்வான முதலான ஸகல பரிஜனத்தையும் எம்பெருமானது அந்தந்த அவஸ்தைகளுக்குரிய கைங்கரியத்தில் நியமிப்பவளும், சீலம் வடிவு குணம் ச்ருங்கார விலாஸம் முதலியவற்றால் தனக்கு ஏற்றவளுமான,

ச்ரியா ஸஹ—பிராட்டியோடுகூட,

ஆஸீநம்— வீற்றிருந்தருள்பவனும்,

ப்ரத்யக்ர உந்மீலித ஸரஸிஜ ஸத்ருச நயந யுகளம்—அப்போ தலர்ந்த செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையுடையவனும்,

ஸ்வச்ச நீல ஜீமூத ஸங்காசம் — விமலமான கார்முகில் போன்றவனும்,

அத்யுஜ்ஜ்வல பீத வாஸஸம் - புகர்பெற்று விளங்குகின்ற பீதக வாடையை யுடையவனும்,

அதிநிர்மலயா அதிசீதலயா [அதிகோமலயா] ஸ்வச்சயா மாணிக்யாபயா ஸ்வயா ப்ரபயா க்ருத்ஸ்நம் ஜகத் பாஸயந்தம் — மிக நிர்மலமாய் மிகக் குளிர்ந்ததாய் [மிகவும் ஸௌகுமாரமாய்] ஸ்வச்சமாய் மாணிக்கம் போன்றதான தனது திவ்ய காந்தியினால் உலகம் முழுவதையும் விளங்கச் செய்யா நின்றவனும்,

அசிந்த்ய திவ்ய அத்புத நித்ய யௌவந ஸ்வபாவ லாவண்யமய அம்ருத ஸாகரம் — சிந்தைக்கு எட்டாததாய் திவ்யமாய் ஆச்சரியமாய் நித்யமாயிருக்கிற யௌவனத்தை ஸ்வபாவமாகவுடைய லாவண்யம் நிறைந்த அமுதக் கடலாய்,

அதிஸௌகுமார்யாத் ஈஷத்ப்ரஸ்விந்நவத் ஆலக்ஷ்யமாண லலாடபலக திவ்யாலக ஆவலீவிராஜிதம் — மிகவும் ஸௌகுமாரமாதலால் சிறிது குறுவெயர்ப்பு அரும்பினாற்போலே காண்கிற திருநெற்றியில் படிந்த திருக்குழல்களாலே விளங்கா நிற்பவனாய்,

ப்ரபுத்த முக்தாம்புஜ சாருலோசநம் — அப்போதலர்ந்த தாமரைப் பூப்போன்று அழகிய திருக்கண்களை யுடையவனாய்,

ஸவிப்ரம ப்ரூலதம் — விலாஸத்தோடு கூடிக் கொடிபோன்றதான திருப்புருவங்களை யுடையவனாய்,

உஜ்ஜ்வல அதரம் — பிரகாசிக்கின்ற திருவதரத்தை யுடையனாய்,

சுசி ஸ்மிதம் — கபடமற்ற புன்சிரிப்பை யுடையனாய்,

கோமல கண்டம் — அழகிய கபோலங்களையுடையனாய்,

உந்நஸம் — உயர்ந்த திருமூக்கை யுடையனாய்,

உதக்ர பீந அம்ஸ விலம்பி குண்டல அலகாவலீ பந்துர கம்பு கந்தரம் — உயர்ந்தும் பருத்துமிருக்கிற திருத்தோள்கள் வரையில் தொங்குகின்ற திருக்குண்டலங்களாலும் திருக்குழல் கற்றைகளாலும் அழகுபெற்றுச் சங்குபோல் விளங்குகின்ற திருக்கழுத்தையுடையவனாய்,

ப்ரியா அவதம்ஸ உத்பல கர்ண பூஷண ச்லத அலகாபந்த விமர்த சம்ஸிபி: ஆஜாநு விலம்பிபி: சதுர்ப்பி: புஜை: விராஜிதம் — பிராட்டிமார்களுக்குக் கர்ணாலங்காரமான கருநெய்தல் மலரென்ன

கர்ணபூஷணங்களென்ன, அலைந்த திருக்குழல் கற்றையென்ன ஆகிய இவை அழுந்தியிருக்கிறபடியைத் தெரிவிக்கின்றவையாகித் திருமுழந் தாள்வரை தொங்குகின்ற நான்கு புஜங்களோடே ப்ரகாசிக்கின்றவனாய்,

அதிகோமல திவ்யரேகா அலங்க்ருத ஆதாம்ர கரதலம் — மிகவு மழகிய (தாமரை சங்கு சக்கரம் முதலான) ரேகைகளினால் அலங்கரிக்கப் பட்டுச் சிறிது சிவந்திருக்கிற திருக்கைத்தலத்தை யுடையனாய்,

திவ்ய அங்குலீயக விராஜிதம் — அப்ராக்ருதமான மோதிரங் களினால் விளங்குபவனாய்,

* அதிகோமல திவ்ய நகாவலீ விராஜித அதிரக்தாங்குலீபி: அலங்க்ருதம் - மிகவும் ஸுகுமாரமான திருநகங்களால் விளங்குகின்ற மிகச்சிவந்த திருவிரல்களால் அலங்கரிக்கப்பட்டவனாய், (* "அதிகோமல திவ்யநகாவலீ விராஜிதம்" என்று இடையிலே பிரித்து எம்பெருமானுக்குத் தனி விசேஷணமாக்குவதுமுண்டு. அநுரக்த — அதிரக்த என்பன பாட பேதங்கள்; பொருள் ஒன்றே.)

தத்க்ஷண உந்மீலித புண்டரீக ஸத்ருச சரண யுகலம்:... அப்போ தலர்ந்த புண்டரீகத்தோடொத்த திருவடியிணையை யுடையவனாய்,

அத்யந்தஸுகஸ்பர்சை: திவ்யகந்தை: அதிமநோஹர கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயகஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாம உதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராதிபி: பூஷணை: பூஷிதம்: — மிகவும் ஸுகமான ஸ்பர்சத்தை யுடையவைகளும் திவ்யமான பரிமளத்தையுடையவைகளுமான மிக வழகிய கிரீடம்...... நூபுரம் முதலான திவ்ய பூஷணங்களினால் பூஷித னாய், (சரணாகதி கத்யத்தில் விரிவுரை காண்க.)

ஸ்ரீமத்யா வைஜயந்த்யா வநமாலயா விராஜிதம்: — அழகிய வைஜயந்தி யென்னும் வனமாலையினால் விளங்குபவனாய்,

சங்க சக்ர கதா அஸி சார்ங்காதி திவ்யாயுதை: ஸேவ்யமாநம் பஞ்சாயுதாழ்வார்கள் முதலான திவ்யாயுதங்களாலே ஸேவிக்கப் பட்டவனாய்,

ஸ்வஸங்கல்ப மாத்ர அவக்லுப்த ஜகத் ஜந்ம ஸ்திதி த்வம் ஸாதிகே ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே ந்யஸ்தஸமஸ்த ஆத்மைச்வர்யம்: நினைத்த மாத்திரத்திலே ஸகல ஜகத்தினுடையவும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாராதிகளை நிர்வஹிக்கவல்ல ஸேநாபதியாழ்வான் பக்கலிலே தன்னுடைய நியமனச் செல்வமெல்லாம் ஒப்படைத்திருப்பவனாய்,

[வைநதேயாதிபிரித்யாதி] ஸ்வபாவதோ நிரஸ்த ஸமஸ்த
ஸாம்ஸாரிக ஸ்வபாவை: பகவத் பரிசர்யாகரண யோக்யை: பகவத்
பரிசர்யைக போகை: வைநதேயாதிபி: அநந்தை: நித்யஸித்தை:
யதாயோகம் ஸேவ்யமாநம் – இயற்கையாகவே ஸாம்ஸாரிக ஸ்வ
பாவமொன்றுமில்லாதவர்களும் எம்பெருமானுக்குத் தொண்டு பூண்
டிருப்பவர்களும் அந்த கைங்கர்யத்தையே நித்ய போகமாகவுடைய
வர்களுமான பெரிய திருவடி முதலான எண்ணிறந்த நித்யஸூரி
களாலே முறைமைப்படி ஸேவிக்கப்படுபவனாய்,

* ஆத்ம போகேந அநநுஸம்ஹித பராதிகாலம்: – ஸ்வாத்மாநு
பவத்தினால் அளவிறந்த காலம் கடந்தமையும் அறியகில்லாதவனாய்,

* "ஆத்மபோகேந என்னுமிடத்தில் ஆச்சான்பிள்ளையின் பாடம்
வேறுவிதமாக இருக்கும்போல் காண்கிறது." "இக்கடாக்ஷம் பரார்த்
தமாக வன்றிக்கே காலதத்வமுள்ளதனையும் ஸ்வப்ரயோஜநமாக
வநுஸந்திக்கப்பட்டு விலக்ஷணமாய் ஸுப்ராதங்களை நினைத்துக்
கலங்குகை யன்றிக்கே ஸுப்ரஸந்ந ஸுந்தரமான கடா
க்ஷத்தாலே" என்று ஆச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி
காண்கிறபடியால் "அநநுஸம்ஹித" என்கிற ஸ்தானத்தில் "அநு
ஸம்ஹித" என்கிற பாடமும், "பராதிகாலம்" என்று தனிப்பட
வன்றிக்கே [பகவத் விசேஷணமாகவல்லாமல்] ஸமஸ்த பதமாய்
அவலோகநவிசேஷணமாகக் கொள்ளுகிற பாடமும் தோன்றுகிறது.
பல ஸ்ரீகோசங்களிலும் பெரியார்களுடைய அநுஸந்தான பரம்பரை
களிலும் காண்கிற பாடம் இங்கு நிவேசிக்கப்பட்டது. ஆத்மபோக
மாவது – * ப்ரசாந்தாநந்தாத்மாநுபவஜ * இத்யாதி வரதராஜஸ்தவ
ஸூக்தியில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட பரமபத நாதனுக்குண்டான
ஸ்வாத்மாநுபவம். பிரமனுடைய ஆயுஷ் காலத்துக்கு 'பரம்' என்று
பெயர்; அப்படிப்பட்ட மிகப் பெரிய கால பரிமாணமும் தெரியாமல்
செல்லுகிறதாம் ஸ்வாத்மாநுபவத்தில். "க்ஷணுவத்க்ஷிப்த பராதி
காலயா" என்ற ஸ்தோத்ர ரத்ந ஸூக்தியும் காண்க.

திவ்ய அமல கோமல அவலோகநேந விச்வம் ஆஹ்லாதயந்
தம்: – திவ்யமாய் நிர்மலமாய் ஸுந்தரமான கடாக்ஷ வீக்ஷணத்தினால்
ஸமஸ்த வஸ்துக்களையும் உகப்பிக்கக்கடவனாய்,

ஈஷத் உந்மீலித முகாம்புஜ உதர விநிர்கதேந திவ்யாநநார
விந்த சோபாஜநநேந திவ்யகாம்பீர்ய ஔதார்ய ஸௌந்தர்ய
மாதுர்யாதி அநவதிக குணகண விபூஷிதேந அதிமநோஹர திவ்ய
பாவகர்பேண திவ்யலீலாலாப அம்ருதேந அகில ஜநஹ்ருதயாந்த
ராணி ஆபூரயந்தம் பகவந்தம் நாராயணம் – சிறிதலர்ந்த திருமுகத்
தாமரையிடையில் நின்று முண்டானதாய்த் திருப்பவளத்துக்கு

ஆபரணம் சாத்தினுப்போலே அழகையுண்டாக்கக் கடவதாய் திவ்ய மான காம்பீர்யம் ஔதார்யம் மாதுர்யம் முதலான எண்ணிறந்த குணத் திரள்களாலே அலங்க்ருதமாய் அதிமநோஹரமான அபிப்ராய விசே ஷத்தை உள்ளே உடைத்தான திவ்யமான ரஸோக்தியாகிற அமுதத் தினுல் எம்லாருடையவும் ஹ்ருதயாவகாசங்களையும் நிரப்புமவனுன பகவந் நாராயணனை,

த்யாநயோகேந த்ருஷ்ட்வா – உட்கண்ணலே ஸாக்ஷாத்கரித்து

(தத:) பகவத: நித்ய ஸ்வாம்யம் ஆத்மந: நித்யதாஸ்யம்ச யதாவஸ்திதம் அநுஸந்தாய – (பிறகு) அப்பெருமானுக்கு இயற்கையா யுள்ள சேஷித்வத்தையும் தனக்கு இயற்கையாயுள்ள சேஷத்வத்தை யும் உள்ளபடி யநுஸந்தித்து,

கதா அஹம் பகவந்தம் நாராயணம் மம குலநாதம் மம குல தைவதம் மம குலதநம் மம போக்யம் மம மாதரம் மம பிதரம் மம ஸர்வம் ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா – என் குலநாதனுய் என் குல தைவமாய் என் குலச் செல்வமாய் எனக்குப் பரமபோக்யனுய் எனக்குத் தாயாய்த் தந்தையாய் எல்லாமுமான பகவந் நாராயணனை நானெப் போது கண்ணுரக் காண்பேன? (என்றும்)

கதா அஹம் பகவத் பாதாம்புஜத்வயம் சிரஸா ஸங்க்ரஹீஷ் யாமி [' தாரயிஷ்யாமி '] – எம்பெருமானது திருவடித் தாமரையிணையை எப்போது நான் தலையால் தாங்கப் போகிறேன்? (என்றும்)

கதா அஹம் பகவத் பாதாம்புஜ த்வய பரிசர்யாசயா நிரஸ்த ஸமஸ்தேதர போகாச: அபகத ஸமஸ்த ஸாம்ஸாரிகஸ்வபாவ: தத்பாதாம்புஜத்வயம் ப்ரவேக்ஷ்யாமி–எம்பெருமான் திருவடித் தாமரை யிணையில் கைங்கர்ய ருசியாலே விஷயாந்தரங்களெல்லாவற்றிலும் காதல் கழிந்தவனுய் (ராகத்வேஷாதிகளாகிற) ஸமஸ்த ஸாம்ஸாரிக ஸ்வபாவங்களும் அகன்றவனுய் அடியேனெப்போது அடியிணையைக் கிட்டுவேன்? (என்றும்)

கதா அஹம் பகவத் பாதாம்புஜத்வய பரிசர்யா கரணயோக்ய: ததேக போக: தத்பாதௌ பரிசரிஷ்யாமி (இந்த வாக்யத்திற்குப் பிறகு முன் வாக்யம் சொல்லுகிற பாடமுமுண்டு:) – என்றைக்கு அடியேன் அத்திருவடியிணைகளில் அடிமை செய்ய உரியவனுய் அவ்வடிமையில் உருசி கண்டவனுய் அத்திருவடிகளில் தொண்டு பூண்பேன்? (என்றும்)

கதா மாம் பகவாந் ஸ்வகீயயா அதிசீதலயா த்ருசா அவலோக்ய ஸ்நிக்த கம்பீர மதுரயா கிரா பரிசர்யாயாம் ஆஜ்ஞாபயிஷ்யதி இதி – அப்பெருமான் தனது மிகக் குளிர்ந்த திருக்கண்களாலே கடாக்ஷித்து

முழங்கி இனிதான பேச்சாலே (*முகப்பே கூவிப் பணிகொள்ள யென்கிறபடியே) கைங்கர்யத்திலென்னை ஏவப்புகுகிறது எப்போதோ வென்றும் (ஆக இப்படியெல்லாம் மநோரதித்து,)

பகவத் பரிசர்யாயாம் ஆசாம் வர்த்தயித்வா – எம்பெருமானுடைய கைங்கர்யத்திலே ஆசையைப் பெருக்கி,

தத்ப்ரஸாத உபப்ரும்ஹிதயா தயைவ ஆசயா — எம்பெருமானுடைய அநுக்ரஹத்தினால் பெருகிச் செல்லுகிற அந்த ஆசையோடே,

பகவந்தம் உபேத்ய - எம்பெருமானைக் கிட்டி,

சேஷ போகே ச்ரியா ஸஹ ஆஸீநம் வைநதேயாதிபி: ஸேவ்யமாநம் பகவந்தம் 'ஸமஸ்த பரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:' இதி தூராத ஏவ ப்ரணம்ய – திருவனந்தாழ்வான் மடியிலே பெரிய பிராட்டியாரோடே கூட இருப்பவனாய் 'பெரிய திருவடி முதலான நித்ய ஸூரிகளாலே ஸேவிதனாயிருக்கிற அப்பெருமானை, 'ஸமஸ்த பரிவார ஸமேதனான ஸ்ரீமந் நாராயணனுக்கு நம:' என்று சொல்லி நெடுந்தூரத்தில் நின்றுமே தெண்டனிட்டு,

உத்தாய உத்தாய புந:புந: ப்ரணம்ய – (காலால் நடந்து செல்லுகையன்றிக்கே) ப்ரணாம பரம்பரைகளினாலேயே சென்று,

அத்யந்த ஸாத்வஸ விநயாவநத: பூத்வா — மிகவும் கூச்சத்தோடும் விநயத்தோடும் வணங்கி நின்று,

பகவத் பாரிஷத கண நாயகை: த்வாரபாலை: க்ருபயா ஸ்நேஹ கர்ப்பயா த்ருசா அவலோகித: — எம்பெருமானது திருவோலக்கத்தவர்கள் கண நாதர்கள் திருவாசல்காப்பார் ஆகிய இவர்களாலே க்ருபையோடு அன்பு ததும்பக் கடாக்ஷிக்கப் பெற்றவனாய்,

ஸம்யக் அபிவந்திதை: தைஸ்தைரேவ அநுமத: — நன்கு தெண்டனிடப்பட்ட அவ்வவர்களாலே அநுமதி பண்ணப்பெற்றவனாய்,

பகவந்தம் உபேத்ய ஸ்ரீமதா மூலமந்த்ரேண — ஸ்ரீவைகுண்ட நாதனை யணுகி திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரத்தைக் கொண்டு,

'மாம் ஐகாந்திக ஆத்யந்திக பரிசர்யாகரணாய பரிக்ருஹ்ணீஷ்வ' இதி யாசமாந: ப்ரணம்ய — 'அடியேனை அநந்ய நித்ய கைங்கர்யத்திற்குக் கைக்கொண்டருள வேணும்' — என்று யாசிப்பவனாய்த் தெண்டனிட்டு,

ஆத்மாநம் பகவதே நிவேதயேத் — தன்னை அப்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கக் கடவன். ... ... (4

லம்) 4. ததோ பகவதா ஸ்வயமேவ ஆத்மஸஞ்ஜீவநேந அமர்யாதசீலவதா அதிப்ரேமாந்விதேந அவலோகநேந அவலோக்ய ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதாத்யந்த சேஷபாவாய ஸ்வீக்ருத: அநுஜ்ஞாதச் ச அத்யந்த ஸாத்வஸ விநயாவநத: கிங்குர்வாண: க்ருதாஞ்ஜலிபுட: பகவந்தம் உபாஸீத.

தத:—ஆத்ம ஸமர்ப்பணானந்தரம்,

பகவதா ஸ்வயமேவ—எம்பெருமான் தானாகவே,

ஆத்ம ஸஞ்ஜீவநேந அமர்யாத சீலவதா அதிப்ரேமாந்விதேந அவலோகநேந அவலோக்ய—ஆத்ம ஸமுஜ்ஜீவநஹேதுவாய் அளவுந்த சீலகுணத்தைக் காட்டுமதாய் மிகவன்போடு கூடியதான டாக்ஷத்தினால் நோக்கி,

ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித அத்யந்தசேஷவாய ஸ்வீக்ருத:—ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா மை செய்யுமாறு ஸ்வீகரிக்க, அப்பேறு பெற்றவனாகி,

அநுஜ்ஞாதச் ச—"நீவ மற்றமர ராட்செய்வீர்" என்கிற யே ஏவவும் பெற்றவனாகி,

அத்யந்த ஸாத்வஸ விநய அவநத: கிங்குர்வாண: க்ருதாஞ்லிபுட: பகவந்தம் உபாஸீத—மிகவும் அச்சத்தாலும் ஒடுக்கத்தாலும் சாய்த்துப் பணிவிடைக்கீரனாயிருந்துகொண்டு கூப்பிய கையனாய் பெருமானை அநுவர்த்தித்திருப்பான்.

லம்.) 5. ததச் ச அநுபூயமாந பாவவிசேஷ: நிரதிசயப்ரீத்யா அந்யத் கிஞ்சித் கர்த்தும் த்ரஷ்டும் ஸ்மர்த்தும் அசக்த: புநரபி சேஷபாவமேவ யாசமாந: பகவந்தமேவ அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண அவலோகநேந அவலோகயந் ஆஸீத.

பின்னையும் எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவாதிகளை அநுபவியா நின்று கொண்டு அளவுகடந்த அன்பினால் வேறொன்றைப் பண்ணுதல் பார்த்தல் நினைத்தல் செய்யமாட்டாதானாய் (சேஷத்வம் பெற்றிருக்கச் செய்தேயும் அதின் இனிமையாலே இது நிலைநிற்கப் போகிறதோவென்கிற அதிசங்கை கொண்டு) பின்னையும் இபபடிப் பட்ட சேஷவ்ருத்தி குலையாதே நிலைநிற்க வேணுமென்று வேண்டிக் கொண்டு ஸ்ரீவைகுண்டநாதனையே இடைவிடாத தாராரூபமான பார்வையாலே பார்த்துக் கொண்டிருக்கக் கடவன். ... (5)

(மூலம்.) 6: ததோ பகவதா ஸ்வயமேவ ஆத்மஸஞ்ஜீவநேந அவலோகநேந அவலோக்ய ஸஸ்மிதமாஹூய ஸமஸ்தக்லேசாபஹம் நிரதிசய ஸுகாவஹம் ஆத்மீயம் ஸ்ரீமத் பாதாரவிந்தயுகலம் சிரஸி க்ருதம் த்யாத்வா அம்ருதஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவஸ் ஸுகமாஸீத.

"அம்மான் ஆழிப்பிரானவன் எவ்விடத்தான் யானார்" என் ஸ்வரூபத்தை நினைத்து அகல நிற்க, அப்பெருமான் தானே அழ திருக்கண்ணோக்கத்தாலே குளிரக் கடாக்ஷித்துப் புன்முறுவல் செய் இங்ஙனே வாராயென்று சோதிவாய் திறந்தழைத்து, ஸகல க்லே களேட்டும் போக்கக்கடவதாய் இனி யிதுக்கவ்வருகில்லை யென்ன படியான ஆநந்தத்தைப் பண்ணக்கடவதான தனது திருவ தாமரையிணையைத் தன் தலையிலே வைத்தருளினதாக த்யா பண்ணி "அறிவையென்னும் அமுதவாறு தலைப்பற்றி வாய்க்கொ டதே" என்கிறபடியே ஆனந்தவமுதக் கடலினுள்ளே ஸர்வா வங்களும் மூழ்கப்பெற்றவனாய்க் கொண்டு இனிதிருப்பான். ...

வியாக்யான நிகமனம்

ஸ்வரூபாநுரூபமான ப்ரபத்தியையே தஞ்சமாகக் கொ ப்ராக்ருத மண்டலத்தை விட்டு நீங்கி அப்ராக்ருதமான தேச வி திலே சென்று ஸர்வாங்க ஸுந்தரனாய் ஸர்வாபரண பூஷிதனாய் யாயுத சோபிதனாய் நித்யஸூரி பரிஷந் நிஷேவிதனாயி ஸ்ரீவைகுண்டநாதனைக் கிட்டி கைங்கர்ய ப்ரார்த்தனையை முன் கொண்டு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா செய்யும் கைங்கரியங்களைப் பெற்று ஆநந்த வமுதக் கடலிலே யிருக்குமாற்றை இங்கிருக்கும் நாள் வரையில் பரமைகாந்தியா நாடோறும் சிந்தனை செய்து கொண்டிருக்கக் கடவனென்று அ செய்து தலைக்கட்டினாராயிற்று.

எம்பெருமானாருளிச்செய்த ஸ்ரீவைகுண்ட கத்யம் முற்றுப் பெற்றது.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய கத்யபாவ ப்ரகாசிகை யென்னும் கத்யத்ரயவுரை முற்றிற்று.